பரிபூரண பாதுகாப்பு

கட்டுவோம் வாருங்கள்

சகோதரர். பக்த்சிங்

பரத்திலிருந்து வரும் உதவி

சகோதரர். நெவில்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பரிபூரண பாதுகாப்பு

கட்டுவோம் வாருங்கள்

பரத்திலிருந்து வரும் உதவி

பரிபூரண பாதுகாப்பு - Perfect Security
கட்டுவோம் வாருங்கள் - Come Let us build
AUTHOR BRO. BAKHT SINGH
SECOND TAMIL EDITION - DECEMBER 2013
COPY RIGHT - JEHOVH SHAMMAH

பரத்திலிருந்து வரும் உதவி - Heaven from above
AUTHOR BRO. NEVILLE

COPIES AVAILABLE AT:

CHURCH AT JEHOVAH SHAMMAH
No.4, Church Lane, Rithordon Road,
Vepery, Chennai - 600 007.
Ph: 044-26411644

Mobile : 9841699980/9444997524/9941659210

Printed At: GG Prints 98412 11845

முன்னுரை

கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார். சங்.25:14

கடந்த 40 ஆண்டு காலமாக பரிபூரண பாதுகாப்பு மற்றும் கட்டுவோம் வாருங்கள் என்ற இந்த புத்தகங்கள் வாசிக்கின்ற அநேகருடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் உயிர் மீட்சியையும், ஆவிக்குரிய வெளிப்பாட்டை, கொண்டு வரக்கூடியதாயிருந்தது. இப்புத்தகங்கள் காலஞ்சென்ற நமது அருமை சகோதரன் பக்த்சிங் அவர்கள் கர்த்தரோடு நெருங்கி ஜீவித்ததால் பெற்ற அனுபவங்களும், அதன் மூலம் அவர் அடைந்த பரிபூரண பாதுகாப்பு மற்றும் தேவன் அவரோடு பகிர்ந்து கொண்ட இரகசியங்கள் ஆகும். இதன் தமிழாக்கம் அநேக நாட்களுக்குப்பின் வெளியிடப்பட்டிருக்கிறது.

மற்றும் சகோதரன் நெவில் அவர்கள் எழுதிய பரத்திலிருந்து வரும் உதவி என்ற புத்தகம் தேவனுடைய பிள்ளைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த வெளியீட்டின் மூலமாக தேவனுடைய கூடுதலான ஆசீர்வாதத்தை இதனை வாசிப்போர் பெற்றுக்கொள்ள நாம் ஜெபிப்போம்.

சகோ.K.பிலிப்பு

பரிபூரண பாதுகாப்பு

[Perfect Security]

என் கன்மலை:- **சகோ.பக்த்சிங்**

1.கர்த்தர் என் கன்மலை (சங்.18:2). நாம் நமது ஆவிக்குரிய வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிக்க விரும்பினால் கர்த்தர் என் கன்மலையாக இருக்கவேண்டும். இதுவே முதலாவது ஆவிக்குரிய அனுபவமாகும். நமது கர்த்தர் கன்மலை என்று அழைக்கப்படுவதை தேவனுடைய வார்த்தையில் பார்க்கிறோம். 1 கொரி. 10:4-ல் அந்த கன்மலை கிறிஸ்துவே என்று வாசிக்கிறோம். இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்க, எறக்குறைய 38 வருடங்கள் அலைந்து, திரிந்து வனாந்திரத்தில் பிரயாணம் பண்ணி, கானான் தேசத்துக்குள் பிரவேசித்தனர். அது ஒரு வறட்சியான, கனியற்ற (barren) பாலைவனத்தைப் போன்ற வனாந்திரமாகும். அங்கே குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்காது. பார்க்க அழகான மரங்கள் இருக்காது. ஆனால், வெறும் கற்பாறைகளே காணப்படும். அந்த பாறையிலிருந்து தண்ணீர் வந்தது. அந்த தண்ணீரை அவர்களும், அவர்களின் ஆடு, மாடுகளும் குடித்தார்கள். அந்த கற்பாறை அவர்களோடு நடந்து வந்தது. அந்த கன்மலை யிலிருந்து தண்ணீர் கிடைத்தது. நமது கன்மலையாகிய கிறிஸ்துவை பற்றிய ரம்மியமான காட்சியை இங்கே காண்கிறோம். நாம் தேவனுடைய அன்பை ருசிப்பதற்கு முன்பாக, அவரது வல்லமையை நமது வாழ்க்கையில் அனுபவிப்பதற்கு முன்பாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நமது கன்மலையாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதனால்தான் சங்கீதக்காரன் "கர்த்தர் என் கன்மலை" என்று சொல்லுகிறான்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்மை அதேவிதமாக அழைக்கிறார். (லூக்.6:47,48)-ல் "என்னிடத்தில் வந்து என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்." "ஆழமாய் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போட்டு, வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்." பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின் மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற் போயிற்று: ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது." இங்கே கர்த்தர் தாம் சொல்லுகிற ஆழமான கருத்துக்களை எளியமுறையில் அனைவரும் அறிந்து கொள்ளும்படி தெளிவாக சொல்லுவதை பார்க்கிறோம். நாம் ஒரு வீடு கட்டவேண்டுமானால், மழை, காற்று, புயல் போன்ற அபாயங்களை ஞானமாக கவனித்து எந்த விதத்திலும் சேதமாகாதபடிதான் வீடு கட்டுவோம். இந்த புயல், மழை, வெள்ளம் எல்லாம் நமது வாழ்க்கையில் உண்டாகும் பாடுகள், கஷ்டங்களை குறிக்கும். நாம் எவ்வளவு அறிவாளிகளாகவும், எப்படிபட்ட பணம், பதவியில் உயர்ந்தவர்களாகவும் இருக்கலாம். இருந்தாலும், இந்த உலகத்தில் பாவத்தின் நிமித்தமாக உண்டான சாபத்தின் காரணமாக அனைவரும் இந்த விதமாக, பொதுவான பாடுகளை கடந்துதான் ஆக வேண்டும். ஆதனால், மனிதர்களாகிய நாம் இந்த பூமியில் இருக்கும் சாபத்திற்கும், அதன் விளைவு களுக்கும் ஆயத்தமாக இருக்க வேண்டியது அவசியம். நீங்கள் உங்கள் வீட்டை காத்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் கட்டினால், அவரது உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டினால் "எவ்வளவு புயல் வந்தாலும் மழை, வெள்ளம் வந்தாலும் நீங்கள் மிகுந்த பாதுகாப்பாக இருப்பீர்கள். இல்லை என்றால் வீடு விழுந்து விடும்: அந்த வீழ்ச்சி பெரிதாக இருக்கும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடே எந்தவிதமான தனிப்பட்ட அனுபவமும் (Personnal Experience) இல்லாதவர்கள் மணலின் மேல் தங்கள் வீட்டைக் கட்டின மனிதனுக்கு ஒப்பானவன். (லூக்.6:49) "என் வார்த்தைகளை கேட்டும், அவைகளின்படி செய்யாதவனோ, அஸ்திபாரமில்லாமல் மண்ணின் மேல் வீடு கட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான். நீரோட்டம் அதன் மேல் மோதினவுடனே அது விழுந்தது, விழுந்து முழுவதும்

அழிந்தது என்றார்." அதாவது, பெரிய நஷ்டம் (tremendous) வலி, வேதனை, மரணம் வரும். அவைகளிலிருந்து தப்பிக்கொள்ள நிச்சயமான பாதுகாப்போடு இருக்கவேண்டுமானால் நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உறுதியான அனுபவம் உள்ளவர்களாகவும், அவரே உனது கன்மலையாகவும், அஸ்திபாரமாகவும் இருக்க வேண்டும். புயலாலும், வெள்ளத்தாலும் அசையாத ஒரே ஒரு அஸ்திபாரம் கிறிஸ்து என்று Iகொரிந்.3:10,11-ல் "எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின் படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல அஸ்திபாரம் போட்டேன், வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கவடன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவராலும் கூடாது என்று வாசிக்கிறோம். அவர், யோவான் 10:17,18-ல் "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான். நானே அதை கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு, இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் கற்றுக கொண்டேன் என்றார்." என்று தமது சீடர்களிடத்தில் சொன்னார். அவர் ஒவ்வொருவரையும் குணமாக்கி, ஆசீர்வதித்ததின் மூலமாக தமது அன்பையும் வல்லமையையும் காண்பித்தார். ஆனால், அவர் தம்மை சவுக்கினால் அடிக்கப்படவும் ஒப்புக்கொடுத்தபோது இன்னும் அதிகமான வல்லமை பெற்றிருந்தார். ஒரு சமயத்தில் கர்த்தர் ஒரு இரவு தங்குவதற்கு சமாரியர்கள அவருக்கு இடந்தராமல் மறுத்தார்கள். "அதனால் சீடர்கள் கோபமடைந்தார்கள். "அவர் எருசலேமுக்கு போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. "லூக்.9:53 இந்த ஊர் மக்களை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அனேக சமயங்களில் ஆசிர்வதித்தார். இப்பொழுது அவர் அந்த ஊர் வழியாக எருசலேம் போக வேண்டும். அதனால் அவர் யாக்கோபையும், யோவானையும் அனுப்பி அந்த சமாரியர்கள் அவர் ஒரு இரவு தங்க இடம் தருவார்களா என்று விசாரிக்க செய்தார். ஆனால், அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள

மறுத்துவிட்டார்கள். எனவே, யாக்கோபும், யோவானும் கோபமடைந்து அவர்களை பார்த்து "நன்றி கெட்டவர்களே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எத்தனை தடவைகள் உங்களுக்கு இரக்கம் காட்டி உங்கள் நோய்களை குணமாக்கி இருக்கிறார், உங்கள் வியாதிகளை விலக்கி இருக்கிறார். ஆனால் நீங்கள் அவர் தங்க ஒரு இரவு இடம் தர மறுக்கிறீர்களே என்று சொல்லி இருக்கலாம். அதன் பின்னர் கர்த்தரிடம் உத்திரவு கேட்கிறார்கள். "வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும் படி...." ஆனால் கர்த்தர் அவர்களை கடிந்து கொள்கிறார். "நான் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்காக இங்கே வந்தேன்." என்றார். இதனால்தான் அவர் தாமாகவே அவர் தம்மை சவுக்கினால் அடிக்கவும், துப்பவும் ஒப்புக்கொடுத்தார். அவருக்கு சர்வ வல்லமை இருக்கிறது, அவரே அவர்களை அழிக்க வேண்டுமானால் அழிக்கவும் முடியும். புயல், மரணம், ஜீவன் சகலவற்றின் மீதும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், நம்மை பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுவிக்கவே அவர் தம்மை அவவாறாக ஒப்புக் கொடுத்தார். அந்த வேதனை நிறைந்த பாடுகளின் மூலமாக சென்று உலகத்திற்கு நித்திய ஆசீர்வாதத்தை கொடுக்க அவர் விரும்பினார். அவரை சவுக்கால் அடித்து, அவரை துப்பினால் அவரை வென்றுவிடலாம் என்று சாத்தான் நினைத்தான். ஆனால், அதே பாடுகள் மூலமாகவே அவர் சாத்தானை நசுக்கினார். அதனால்தான் நாம் மிகவும் மோசமான பாவிகளாக இருந்தாலும், நாம் தேவனுடைய வல்லமை நிறைந்த மக்களாக விளங்க முடியும். அவர் அற்புதங்களை செய்த வல்லமையை விட மிகவும் அதிகமான வல்லமை அவரது பாடுகள், வலி, வேதனை மூலமாக வெளிப்படுத்தப்பட்டது. அதனால் இந்தவிதமான பாடுகள் மூலமாக நாம் அவரை அறிந்து அவரது உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நாம் வரவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அப்படிப்பட்ட அஸ்திபாரத்தின் மேல் நாம் வருவோமானால், எந்தவிதமான பாடுகள், வறுமை, அதிக நாள்பட்ட கொடிய வியாதி அல்லது சத்துருக்களால் உபத்திரவம், அல்லது மரணம் போன்ற எதுவுமே நமது சமாதானத்தை, சந்தோஷத்தை நம்மை விட்டு எடுக்க முடியாது. அதற்கு பதிலாக நதியை போல புரண்டு ஓடுகிற சமாதானத்தை பெற்றுக் கொள்வோம். நமது சமாதானமும்,

சந்தோஷமும் நமக்கு இருக்கும் பணத்தையோ அல்லது பதவியையோ அல்லது சுகத்தையோ சார்ந்தது அல்ல. கர்த்தர் நம்மை எங்கே வைத்தாலும், எந்த சூழ்நிலையில் இருந்தாலும் நமது சமாதானம் வளர்ந்து பெருகிக் கொண்டே இருக்கும். நீங்கள் கடற்கரைக்கு சென்று கடலைப் பார்த்தால் கோப அலைகள் (Angry Waves) உயரமாக எழும்பி வருவதை காணலாம். ஒரு சமயம் நான் அமெரிக்காவில் இருந்து ஜப்பானுக்கு கடலில் பிரயாணம் செய்தபொழுது புயல் அதிக பலமாக வீசியது. 24 மணி நேரத்தில் 2 மைல் தூரம் மட்டுமே கப்பல் நகர முடிந்தது. கடலலைகள் 80 அடி உயரம் வரை எழுந்தது. கப்பல் அப்படியே சுழன்று கொண்டிருந்தது. அப்படிப்பட்ட கோப அலைகளை நீரின் மேல் மட்டத்தில் மட்டுமே காணலாம். ஆனால், சில அடிகள் ஆழத்திற்குச் செல்வோமானால் அங்கே பரிபூரண அமைதியை பார்க்க முடியும். கடலின் மேல் பரப்பிலே கோப அலைகள், ஆனால் ஆழத்திலே அமைதி. இதுவே நமது அனுபவமும் கூட. நமது இருதயத்திலே தேவ சமாதானம். எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம், நதியை போல புரண்டோடும் சமாதானம். சங்.119:165-ல் உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை

சமாதானத்தோடே படுத்துக்கொண்டே நித்திரை செய்வேன். கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப் பண்ணுகிறீர். சங்.4.8 அதே போல ஏசாயா 26:3ல் உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனை சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. யோ.14.27 நமது கர்த்தர் உயிர்த்தெழுந்த உடனே அவர் பேசின முதல் வார்த்தை “உங்களுக்கு சமாதானம்”. பவுல் அப்போஸ்தலன் சொல்கிறார் 2 தெ.ச.3:16-ல் தேவ சமாதானம் உங்கள் இருதயங்களிலே ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள்.

அந்த சமாதானமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக நமக்கு கிடைக்கிறது. அவர் ஜீவனுள்ள இரட்சகர். அதனால்தான் அவர் நம்மை உறுதியான கற்பாறை, அஸ்திபாரத்தின் மேல் வரவேண்டும் என்று விரும்புகிறார். உலக சோதனைகள் நமது விசுவாசத்தை அசைக்கும்படியாக வரலாம். ஆனால் நீ உண்மையாக சொல்லமுடியுமா? கர்த்தர் என் கன்மலையாக இருக்கிறார் என்று? கர்த்தருக்காக விசுவாசத்திலே உறுதியாக நிற்க முடியுமா? பலவிதமான பயத்தினால் கலங்கிப் போயிருக்கிறாயா? கன்மலையாகிய கர்த்தர் எளிய விசுவாசத்தோடு அவருடன் உறுதியான உறவு, அவருடன் தனிப்பட்ட அனுபவம் (Personal Experience) உனக்கு இருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். இப்பொழுது ஒரு கேள்வி எழும்பலாம், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஜீவனுள்ள இரட்சகர் என எப்படி நிரூபிக்க முடியும்? அவர் ஜீவனுள்ள இரட்சகர் என்று நிரூபிக்க வேதத்தில் ஏழு நிரூபணங்கள் (Proofs) உள்ளன. அவர் மரணத்தை விழுங்கினவர் (Swallowed death): கிமு.700 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏசாயா என்ற தீர்க்கதரிசி அவர் வந்து நமது சார்பாக மரணத்தை வென்று விடுவார். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப படுவார்கள். அவரது பிறப்பை பற்றியும் முன்னறிவித்திருக்கிறார். எவராலும் வெற்றி கொள்ள முடியாத பரமாக சத்துரு மரணமாகும். எவரும் எப்பொழுதும் மரணத்தை வெற்றிக் கொண்டதில்லை. ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்றோ, எவ்வளவு மகத்தான செயல்கள் செய்தார் என்றோ நாம் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை. ஒரு நேரம் வரும்போது அவர் மரித்துப் (die) போகிறார். அவர் திரும்ப வருவதில்லை. ஆனால் இவர் மரணத்தை ஜெயமாக விழுங்கினவர். நாம் உணவை விழுங்குவதை போல அவர் மரணதழதை விழுங்கினார். இது முதலாவது நிரூபணமாகும். மரணம் அவர்மேல் வல்லமை கொள்ளவில்லை. அவர் அதை வெற்றி கொண்டார். உனக்காகவும் எனக்காகவும்.

2) மரணத்தை ஜெயித்தார். (Victory Over death):

இப்படியாக மூன்றாம் நாள் தாம் உயிர்த்தெழப் போகிறார் என்று கர்த்தர் தாமே சொல்லியிருக்கிறார். (மாற்கு.9:31)

என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். யோ.10:18 வேறு எவரும் இப்படி சொல்லமுடியாது. அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்து அனேக மக்களுக்கு பல வித்தியாசமான நேரங்களில் 10 முறை தரிசனம் கொடுத்திருக்கிறார்.

3) காலியான கல்லறை (Empty Sepulcher):

அவரது உடல் வைக்கப்பட்டிருந்த கல்லறை இன்றைக்கும் காலியாகவே இருக்கிறது. லூக்.24:2,3 உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். உலகின் எல்லா பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து அதை பார்த்த வண்ணமாகவே இருக்கிறார்கள். கல்லறைகளில் மரித்தவர்களின் எலும்புகள் நிறைந்திருக்கும் ஆனால் இந்த கல்லறை இன்றும் காலியாகவே இருக்கிறது.

4) தேவ தூதர்களின் அறிவிப்பு (Proclamation by the Angels)

தேவதூதர்கள் வந்து, அவரது உயிர்த்தெழுந்த நாளிலே அதை அறிவித்தார்கள். முதலாவது, தேவதூதர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பின்போது அதை அறிவிக்க வந்தார்கள். பின்னர் அவரது உயிர்த்தெழுதலை அறிவிக்க வந்தார்கள். அவர்கள் "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" என்று சொன்னார்கள். (லூக்.24:6) அவர் உயிருடன் இருக்கிற (living) இரட்சகர். அவர் மரணத்தை நமக்காக வெற்றி சிறந்தார்.

5) அவர் காட்சியளித்தார். (His appearances)

அவர் உயிர்த்தெழுந்த பின்னர் பல்வேறு மக்களுக்கு காட்சி அளித்தார். 40 நாட்களில் 10 தடவை அவர் காட்சி அளித்தார். உயிர்த்தெழுந்த அதே நாளில் அவர் 5 தடவையும் மறு நாளிலிருந்து அவர் பரம் ஏறின நாள் வரையிலும் 5 தடவைகளும், அவர் காட்சி அளித்தார். முதன் முதலாக மகதலேனா மரியாளுக்கு அவர் காட்சி அளித்து "ஸ்திரியே ஏன் அழுகிறாய்" (யோ.20:15) என்றார். மறுபடியும் அதே காலையில் மற்ற ஸ்திரிகளையும்

சந்தித்தார். (மத்.28:9). மூன்றாவதாக, சீமோன் பேதுருவுக்கு காட்சி கொடுத்தார். பின்னர் மேலறையில் கூடி இருந்த சீடர்களுக்கும், மூடப்பட்டிருந்த கதவு சன்னல்கள் மூடி இருக்கவே அவர் உள்ளே காட்சி அளித்தார். அதன்பிறகு 500 பேர் சீஷர் கூடியிருந்த சமயத்தில் அவர்களுக்கு தோன்றினார். (1 கொரி.15:6) பின்னர் தோமாவிற்காகவும், பினனர் திபேரியா கடற்கரையில் சீஷர்களுக்கு காட்சி கொடுத்தார். பத்தாவதாக பெத்தானியாவில் தரிசனமாகி பரம் ஏறிப்போனார் (லூக்.24:51).

6) பரமேறினபிறகு அவரது தரிசனம் (His Appearance after accension) :

ஸ்தாவான் கல்லெறியப்படும்போது அவனுக்கு காட்சி கொடுத்தார். மறுபடியும் சவுல் தமஸ்குவின் சாலையில் போகும் போது அவனை சந்தித்து, "சவுலே சவுலே ஏன் என்னை துன்பப படுத்துகிறாய்?" என்றார். அதற்கு சவுல் ஆண்டவரே நீர் யார்? என்றான். (அப்.9:4,5).

1.ஜீவனுள்ள இரட்சகர் (The Living Saviour) யோவானுக்கு வெளிப்படுத்தின விஷேசத்தில் 1:18-ல் "மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்றார். அதே ஜீவனுள்ள இரட்சகர் உன் இருதயத்தில் வரவிரும்புகிறார். அதனால்தான் அவர் உயிர்த்தெழுந்தார். நாம் அழியாத சரீரங்களோடு நித்திய காலமாக அவரோடு இருக்க விரும்புகிறார். எந்தவிதமான கஷ்டங்கள், பாடுகள், வலி, வேதனை இருந்தாலும் உன் இருதயத்தில் சமாதானம் இருக்கும். அப்பொழுது நீங்கள் சொல்வீர்கள் கர்த்தர் என் கன்மலை, என் இரட்சிப்பு, அவர் என்னை ஆளுகை செய்கிறார், எனக்கு சமாதானம் தருகிறார்" என்று. அவ்வாறாகவே அவர் உனது ஜீவனுள்ள கன்மலையாக இருக்க விரும்புகிறார். அவர் உனது பாவங்களையும், பாவத்துக்குரிய தண்டனையையும் தானே ஏற்று உனக்கு பதிலாக மரித்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவருக்கு எல்லா வல்லமையும் உண்டு. மரணத்தின் மீதும், வியாதிகள் மீதும், பிசாசின் மீதும், சகல சிருஷ்டிகள் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு. இருந்தும் அவர் சிலுவையில் மரித்தார். நம்மால் சுமக்க முடியாத ஆக்கினைத் தீர்ப்பையும், நியாயாத் தீர்ப்பையும் தாமே

ஆவலாக (willingly) ஏற்றுக்கொண்டார். நமது சார்பாக அவர் சுமந்தார். இப்பொழுது உனது இருதய கதவை தட்டிக் கொண்டிருக்கிறார். உனக்குள் வர ஆவலாக காத்துக் கொண்டிருக்கிறார். நமது வாழ்க்கையில் உண்டாகும் சகலவிதமான புயல்களையும் மேற்கொள்ள அவரே உதவி செய்வார். அவரது உயிர்த்தெழுந்த வல்லமையினாலே நமக்கும் உதவுவார். நீ எங்கே இருந்தாலும் அவரது சமாதானத்தை உன் இருதயத்தில் பெற்றிருப்பாய். அவர் உன்னை விட்டு விலகவே மாட்டார். உனக்கு அப்படிபட்ட அனுபவம் வேண்டுமா? உனது சகல பயத்தையும் விட்டு எனது இரட்சகரிடத்தில் இளைப்பாறுதலை பெற்றுக்கொள். அவரே ஜீவனுள்ள கன்மலை. எங்களுக்கு இந்த அனுபவம் உண்டு. அதனால் தேவனை நன்றியோடு துதிக்கிறோம். இதை சாட்சியாக சொல்கிறோம். இது உன்னுடைய அனுபவமாகவும் மாற முடியும். நமது கர்த்தர் தாமே இந்த அனுபவத்தை உனக்கு தருவாராக. இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. என் கோட்டை (my fortress) இப்பொழுது நமது ஜீவனுள்ள இரட்சகர் நமது கன்மலையாக இருக்கிறார். பழைய காலங்களில் ராஜாக்களும் பிரபுக்களும் தங்கள் பாதுகாப்புக்காக கோட்டைகளை கட்டிக்கொள்வார்கள். இப்பொழுதும் அவைகளை உலகின் பல பகுதிகளிலும் அதிக பலமான கோட்டைகளை காணலாம். அப்படிப்பட்ட கோட்டைகளை கட்டுவதற்கு முன்பாக பாதுகாப்புக்கான காரியங்களை நன்றாக கவனிக்க வேண்டியது அவசியம். எல்லாப் பக்கங்களிலும் சகல விதத்திலும் பாதுகாப்பாக இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏன் என்றால் சத்துரு எந்த திசையிலிருந்து வேண்டுமானாலும் தாக்கலாம். தண்ணீர், உணவு வகைகள் தேவையான அளவிற்கு நிறைவாக கிடைக்கும் வகையில் இருக்க வேண்டும். சத்துருக்கள் ஒரு வேலை அநேக நாட்களுக்கு அல்லது மாதங்களுக்கு கூட முற்றுகை (besieges) போடலாம். அதனால் எல்லாவிதத்திலும் தயாராக இருக்க வேண்டும். எந்த ஒரு சிறு கவனக்குறைவும் தோல்வியைக் கொண்டுவந்துவிடும். திப்பு சுல்தான் என்ற அரசன் பெல்லாரியிலே ஒரு கோட்டையைக் கட்டும் படி ஒரு பிரான்ஸ் நாட்டு பொறியாளரிடம் (French Engineer) ஒப்படைத்தான். நான்கு

பக்கமும் பெரிய சுவர் கட்ட வேண்டும். அந்த பொறியாளர் ஒரு வரைபடம் (Plan) தாயரித்து மிகவும் பலமான, நேர்த்தியான கோட்டையை கட்டினான். அதை அரசன் சுற்றிப்பார்த்தான். ஒரு மூலைக்கு அவர்கள் வந்தபொழுது சுவருக்கு அருகிலே ஒரு சிறு குன்று (hill) இருப்பதை அரசன் கவனித்தான். உடனே திப்பு சுல்தான் பொறியாளரை பார்த்து முட்டாளே, ஏன் அந்த குன்றை வெளியில் விட்டு சுவரைக் கட்டினாய்? என்று கடிந்து கொண்டான். அந்த பொறியாளர் மிகவும் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டான். எனது கவனக் குறைவினால் சத்துரு அந்த குன்றில் இருந்து எளிதில் தாக்க கோட்டையை பிடித்துக் கொள்வான் என்று உணர்ந்தான். அதே போலவே சில வருடங்களுக்குப் பின்னர் பிரிட்டிஷ் மக்கள் அதே குன்றிலிருந்து தாக்குதல்களை நடத்தி அரசனை தோற்கடித்தார்கள். ஒரு சிறு கவனக் குறைவு (negligence) திப்பு சுல்தான் ராஜ்யத்துக்கே பெரிய தோல்வியை கொண்டு வந்தது. ஆவிக்குரிய காரியங்களிலும் நமக்கு வாழ்நாள் முழுமைக்கும் பாதுகாப்பு அவசியம். தேவனுடைய வார்த்தையின்படி பார்க்கும்பொழுது நமது கிறிஸ்துவ வாழ்க்கை அனுதினமும் போராட்டம் நிறைந்ததாகும். ஏதோ சில வாரங்களுக்கு மட்டுமல்ல, நம் வாழ்நாள் முழுமைக்கும். ஏன் என்றால் எபே: 6:12-ல் "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத் தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களில் உள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு" என வாசிக்கிறோம். அதுபோல சத்துரு நம்மை வித்தியாசமான வழிகளில் தாக்குவான். தொடர்ந்து தாக்கிக்கொண்டே இருப்பான். ஒரு பெலவீனமான காரியம் கிடைத்து விட்டால் (week point) போதும். அதை கொண்டே நம்மை தாக்குவான். பெல்லாரியில் கட்டப்பட்ட கட்டிடம் மிகவும் பெலம் வாய்ந்ததுதான். ஒரே ஒரு சிறிய கவனக்குறைவு முழுமையாக உடைக்கப்பட காரணமாக அமைந்தது. அது வேண்டுமென்றே (interntional) செய்யப்பட்டது. எல்லாவிதமான சோதனைகளும் நமக்கு வர வாய்ப்பு இருக்கிறது. ஆனால், நமது கர்த்தர் நமது கோட்டையாக இருந்து சத்துருவின் சகல தாக்குதல்களில் இருந்தும் நம்மை காப்பாற்றுகிறார். அதுவே

தாவீதினுடைய அனுபவமாகும். 1 சாமு.16-ம் அதிகாரத்தில் கர்த்தர் தாவீதை ஒரு தலைசிறந்த இராஜாவாக இருக்கும்படி தெரிந்து கொண்டதை பார்க்கிறோம். ஆட்டு மந்தையை மேய்த்துக கொண்டிருந்தவன் 13 அடி உயரமான கோலியாத் என்ற ராட்சதனை (பயைவெ) கொல்ல முடிந்தது. அதற்கு நன்றி அறிதல் உள்ளவனாக இருந்திருக்க வேண்டிய சவுல் பொறாமையினால் அவனை கொன்றுபோடும்படி மூன்று முறை முயற்சி செய்தான். அடைக்கலத்தை தேடி ஓடினான் தாவீது. அவனது சொந்த மனைவி, அவனது நண்பன் யோனத்தான், அவனுடைய உறவினர்கள் எவரும் அவனுக்கு அடைக்கலம் கொடுக்கவோ, பாதுகாக்கவோ முடியவில்லை. அவன் தேவனுடைய வீட்டுக்குப் போனான். அங்கேயும் அவர்கள் பயந்தார்கள். இறுதியாக அவன் ஒரு குகையிலே அடைக்கலம் புகுந்தான். அதுல்லாம் என்ற குகைதான் அவனுக்கு கோட்டையாக மாறினது. (1சாமு.22:1,2.....) வேறு எதுவும் அவனுக்கு கிடைக்கவில்லை. அவனது சகோதரர்களும், உறவினர்களும், உபத்திரவபட்டவர்களும், துன்பப்பட்டவர்களும் அவனிடத்தில் அடைக்கலமாக வந்தார்கள். அவனிடத்தில் வந்தவர்கள் அனைவருமே மிகுந்த நெருக்கடியில் இருந்தவர்கள். அவர்களிடத்தில் பணமில்லை, ஆகாரமில்லை, போராட எந்தவிதமான ஆயுதமும் இல்லை. பெரிய சேனையும் பணபலமும், பயங்கரமான போராயுதங்களோடும் அந்த குகையை சுற்றிலும் சவுல் ராஜாவின் சேனை சூழ்ந்து கொண்டது. சவுலும் அவனது ஆட்களும் ஆகாரம் வாங்குவதற்கு கூட வெளியில் வரமுடியாதபடி இருந்தது. அதற்கும் மேலாக வெளியிலிருந்து உதவி செய்ய ஒருவரும் இல்லை. அவர்களுக்கு இருந்த ஒரே உதவி தேவன். உணவுக்காக, பாதுகாப்புக்காக, மற்ற உதவிகளுக்காக தேவனையே நோக்கி கூப்பிட வேண்டியவர்களாக இருந்தார்கள். அப்படியாக, அந்த குகையானது தாவீதின் மிக பலமான கோட்டையாக மாறியது. பிறகு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. சவுலின் சேனை அந்த குகையை சுற்றிலும் முற்றுகை போட்டது. ஆனால், தாவீதை தொடவோ அவன் அருகில் வரவோ முடியவில்லை. பாலஸ்தீன தேசத்திலே அந்த அதுல்லாம் குகை இன்றும் கூட இருக்கிறது. அந்த சிறு குகையிலே எப்படி அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்: அவர்களின் தேவைகள் எப்படி

சந்திக்கப்பட்டது என்பது அதிசயமாகவே இருக்கிறது. சங்கீதங்கள் 34, 37, 38, 108 மற்றும் 118 போன்றவைகள் அனைத்தும் அந்த குகையிலே இயற்றப்பட்டவைகளாகும். சங்.34:1,4,7,19,20 வசனங்களில் அவன் கர்த்தரை தேடினான். தேடின பொழுது கர்த்தர் அவனுக்கு பதில் கொடுத்தார். அவனது பயத்திலிருந்தும், உபத்திரவங்கள், கஷ்டங்களிலிருந்தும் தாவீதை விடுதலையாக்கினார். சவுலின் சேனையோ அல்லது மற்றவர்களோ அவனை தொட கர்த்தர் அனுமதிக்கவில்லை. தேவ தூதர்கள் அவர்களை தொடர்ந்து சூழ்ந்து கொண்டிருந்தனர். அதுமாத்திரம் அல்ல, அவனோடு இருந்தவர்களுக்கெல்லாம் ஆகாரம் கிடைத்தது. அதனால்தான் "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது" (சங்.34:10) என்று சொல்கிறான். அந்த வனாந்திரத்தின் பள்ளத்தாக்குகளிலே சிங்கக்குட்டிகள் பசியினால் சத்தமிடுவதை கண்டு இருக்கலாம். ஆனால், அவர்களுக்கோ கர்த்தர் சகல நன்மைகளையும் குறைவில்லாமல் கொடுத்தார். குகையின் உள்ளே பெரிய ஊற்றுத் தண்ணீர் சுரந்து வந்தது. அந்த ஊற்று இன்றும் அந்த குகையிலே இருப்பதைக் காணலாம். ஆகாரத்துக்கோ அல்லது மற்ற தேவைகளுக்கோ எந்த குறைவும் இல்லாமல் அவர்கள் கர்த்தரை மகிழ்ச்சியுடன் புகழ்ந்து பாடி துதித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறாக, அந்த குகை மிக பலமான கோட்டையாக மாறினது. சவுலின் முழு சேனையும் அதை ஜெயிக்க முடியவில்லை. அதேவிதமாக அனுபவத்தை நாங்கள் 1938-ம் ஆண்டு குவாட்டா (Quatta) என்னும் இடத்தில் உண்டான நிலநடுக்கத்தின்போது கண்டோம். கர்த்தர் எங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றினார். நாம் அவரை மட்டும் முழுமையாக நம்புவோமானால் அவர் நிச்சயமாக நமக்கு உதவி செய்வார். ஆனால் நாம் சந்தேகப்படுகிறோம். அனேகர் அவரை நம்புவதில்லை. நமக்கு தபால்கார விசுவாசம் (Post Man's faith) இருக்கிறது. தபால்காரர் பணவிடை (Money Order) கொண்டு வரும்போது, அவர் 25 ரூபாய்க்கு 24 ரூபாய் நோட்டாகவும் ஒரு ரூபாய் சில்லறையாகவும் தருவார். அதன்பின்னர் நமது முகத்தைப் பார்ப்பார். அவர் லஞ்சம் கொடுங்கள் என்று வெளிப்படையாக கேட்க மாட்டார். ஆனால் 24 ரூபாய் நோட்டும் 1 ரூபாய் காசும்

கொடுத்துவிட்டு நமது முகத்தைப் பார்ப்பார். அதுதான் போஸ்ட்மேன் விசுவாசம் என்பது. அப்படி நாம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த குறிப்பும் அல்லது எந்தவித அடையாளமும் (Hints or Sign) இல்லாமல் தேவனால் கொடுக்க முடியும். (Can supply) அவர்கள் தேவனை துதித்துப் பாடின படியினால் தேவன் அவர்களின் தேவைகளை அந்த குகையிலேயே சந்தித்தார். ஒவ்வொரு நாட்களையும் அவர்கள் துதி பாடலுடன் ஆரம்பித்தார்கள். சங்.108:1-4ல் வெளிப்படையாக தாவீது ஒவ்வொரு நாளையும் ஜெபத்தோடு ஆரம்பித்தான். எல்லோரும் அயர்ந்த நித்திரையில் இருக்கும்போது அவன் வீணையோடும், சுரமண்டலத்தோடும் தேவனை துதித்து கீர்த்தனம் பண்ணினான். "கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மை துதிப்பேன். ஜாதிகளுக்குள்ளே உம்மை கீர்த்தனம் பண்ணுவேன்." அவன் காலை ஆகாரத்தை (Breakfast) பற்றியோ மதிய உணவைப் பற்றியோ கவலை கொள்ளாமல் அவன் பாடிக்கொண்டே இருந்தான். மற்றவர்களும் அவனோடு சேர்ந்து கொண்டார்கள். ஒருவர்பின் ஒருவராக அவனோடு இணைந்து பாடி துதி செய்ய ஆரம்பித்தனர். சிலர் பாடிக் கொண்டே கதவு பக்கம் திரும்பிப் பார்த்தனர். எப்படி சாப்பாடு வரும்? என்று கவனித்தனர். தாவீது பாடிக்கொண்டே இருந்தான். அந்த இடம் முழுவதும் உணவு வகைகளால் நிறைந்தது. எப்படி வந்தது என்று எவருக்கும் தெரியாது. இது அனேக நாட்களாக நடந்தது. அதனால்தான் தாவீது சொல்கிறான், கர்த்தர் என் கோட்டை. அப்படியே நம் அனைவருக்கும் அவர் செய்ய முடியும். அவர் நமக்கும் பலமுள்ள கோட்டையாக இருக்க முடியும். ஆனால், நாம் அவரை கண்டிப்பாக (must) நம்ப வேண்டும். அவருக்கு கீழ்படிய வேண்டும். அவரை கேள்வி கேட்க கூடாது. அவரை சந்தேகிக்க கூடாது. உதவிக்காக மனிதனை பார்க்க வேண்டாம். அவரை மட்டும் பார்த்துக்கொண்டே (keep on looking) இரு. பரலோக பாடல்களை பாடி முழங்கால் படியிட்டு ஜெபத்தோடு ஒவ்வொரு நாளையும் ஆரம்பி. உனக்கு விரோதமாக வரும் விரோதிகளை பார்க்கவேண்டாம். உனது சத்துருவை தோற்கடிக்க உலக பிரகாரமான ஆயுதங்களை உபயோகிக்க வேண்டாம். அதை கர்த்தர் செய்யும்படி விடு. அப்பொழுது கர்த்தரே உனது கோட்டையாக மாறுவார். அவ்வாறாக இந்த அனுபவங்கள்

அனைத்தும் நமது ஆவிக்குரிய, நித்தியமான, நிலைத்திருக்கும் அனுபவங்களாக மாறும். நமது கர்த்தர் அற்புதமான இரட்சகர். அவர் உயிரோடு இருக்கிறவர், அன்புள்ள இரட்சகர். அவர் தம்மோடுகூட ராஜாக்களாக நித்திய காலமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். அவர் தமது வாக்குத்தத்தத்தை காப்பவர், அவரே என் கன்மலை மற்றும் கோட்டையாக இருக்கிறார். என்னை விடுவிப்பவர் (My deliverer) சங்.18:2ல் "கர்த்தர் என் கன்மலையும் கோட்டையும், என் இரட்சகரும், என்தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்." இங்கே தாவீது, தேவ மனிதன், அனேக பிரச்சினைகள், பாடுகள் போன்ற மனிதருக்கு நேரிடும் காரியங்கள் ஊடாக கடந்து செல்வதை பார்க்கிறோம். தேவன் அவனுக்கு அனுமதிக்கும் ஒவ்வொரு பிரச்சினையும், பாடுகளும் அவனுக்கு ஆவிக்குரிய அனுபவத்தையே கொடுத்தன. இப்பொழுது அவன் சொல்லுகிறான், அவர் என் இரட்சகர், சங்.34ல் தாவீது எப்படியாக அவனது உபத்திரவங்கள், பாடுகள், பயங்களிலிருந்து விடுவிக்கப்பட்டான் என்று பார்த்தோம். அதே போல சங்.18:17-19ல் "என்னிலும் பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும், என்னை பகைக்கிறவர்களுக்கும் என்னை விடுவித்தார். என் ஆபத்து நாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள். கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். அவர் விசாலமான இடத்திலேயே என்னைக் கொண்டுவந்து, என்மேல் பிரியமாயிருந்த படியால், என்னைத் தப்புவித்தார் என்று பார்க்கிறோம். முதலாவதாக அவர் அவனது பாவ சுபாவத்திலிருந்து (singulnature) விடுதலையாக்கப்பட வேண்டியதாயிருந்தது. இதுவே மிகப்பெரிய விடுதலை. நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பங்குபெற விரும்பினால் நாம் இந்த விடுதலையை பெற்றிருக்க வேண்டும். (Human activity) நமது பாவ சுபாவத்திலிருந்து எந்த விதத்திலும் விடுதலை பெறமுடியாது. சுய சித்தத்தின் மூலமாகவோ, அறிவு மூலமாகவோ, உபவாசத்தின் மூலமாகவோ, கற்பனை மேல் கற்பனை மூலமாகவோ, நமது பாவ சுபாவத்திலிருந்து நாம் விடுதலை ஆகவே முடியாது. தேவனுடைய ஜீவன் நமக்குள் வருவதினால் மட்டுமே, நாம் எவ்வளவு மோசமான, பரிதவிக்க படத்தக்க, பொல்லா பாவ சுபாவத்தை கொண்டிருக்கிறோம்.

என்று உணர்ந்து கொள்ள முடியும். உதாரமாக பார்ப்போமானால் அப்போஸ்தலனாகிய பவுல் சாட்சியாக சொல்லும்போது ரோமர் 7:17-27 "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (வசனம் 24) ஒரு தேவனுடைய மனிதன் இதை சொல்லுகிறார். தேவனுடைய வெளிச்சம் தனக்குள் வந்ததை அவர் பார்க்கிறார். இங்கே சொல்லப்பட்ட கருத்து என்னவென்றால், பழைய காலத்தில் ஒருவன் மற்றவனை கொலை செய்தால், கொலை செய்தவனை கண்டுபிடித்து அவனை விநோதமான (peculiar) முறையில் தண்டிப்பார்கள். அவன் கொலை செய்த பிரேதத்தை (body) கண்ணோடு கண், மூக்கோடு மூக்கு, தாடையோடு தாடை அவன் மூன்று வார்த்தைகளை உபயோகப் படுத்துகிறான். "என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.." (வசனம்-2) "நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் (வசனம்-7). அந்த மூன்று வார்த்தைகள் 1.கழுவுதல் 2. சுத்திகரித்தல் 3. ஈசோப்பினால் சுத்திகரித்தல் (Purging). துணியின் மேல் படியும் சாதாரண தூசி, குப்பைகளை லேசாக துடைத்தோ அல்லது துணியை உதறியோ சுத்தம் செய்கிறோம். அழுக்கான துணிகளை சோப்பு போட்டு தண்ணீரில் ஊற வைத்து துவைத்து சுத்தம் பண்ணுகிறோம். ஆனால் வெள்ளியிலும், பொன்னிலும் இருக்கும் அழுக்கை எடுக்க வேண்டுமானால் அக்கினி (Fire) யினால்தான் முடியும். அதனால் தான் மூன்று வார்த்தைகளை தாவீது உபயோகப்படுத்துகிறான். சுத்திகரித்தல், கழுவுதல் மற்றும் ஈசோப்பினால் சுத்திகரித்தல். அவன் தனது பாவத்திற்கு மன்னிப்பை மட்டும் விரும்பவில்லை. ஆனால் தனது பாவ சுபாவம் முழுமையாக மாற்றப்படவேண்டும் என்று விரும்புகிறான். அந்த பாவத்தின் நினைவு (memory of sin) கூட முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறான். அவன் தனது முழுமையான விடுதலையை விரும்புகிறான். பாவத்தினால் உண்டான ஒவ்வொரு கறையும் (stain) நீஙக வேண்டும் என்று விரும்புகிறான். புது சுபாவத்தையுடைய முழுமையான புது மனிதனாக விரும்புகிறான். ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் வரும்போது அப்படியாக தனது பாவங்களிலிருந்து முழுமையாக விடுவிக்கப்படுகிறான். இப்பொழுது தாவீது சொல்லமுடியும் "கர்த்தர் என் கன்மலை, அவரே என் இரட்சகர்.

அவர் என் பாவங்களிலிருந்தும், பாவ சுபாவத்திலிருந்தும், பாவப்பிடியின் வல்லமையிலிருந்தும், சாத்தானுடைய ஆளுகையிலிருந்தும், சாத்தானின் சகல தந்திரமான காரியங்களிலிருந்தும் (cunning devices) என்னை விடுதலையாக்கினார் என்று. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவர்தான் அப்படிபட்ட விடுதலையை கொடுக்கமுடியும். அதற்காகவே அவர் பாடுபட்டார். அவர் மரித்தார் (died). அவர் உயிரோடு எழுந்தார். எந்த மனிதனாக இருந்தாலும் எப்படிப்பட்ட பாவியாக, மிகவும் தீட்டான பாவம் நிறைந்தவனாக இருந்தாலும் சரி அவனும் விடுவிக்கப்படமுடியும். தனது பாவ சுபாவத்திலிருந்து முழுமையாக விடுதலை அடைய முடியும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் வல்லமையை அவன் ஏற்றுக் கொள்வதன் மூலமாக அந்த நோக்கத்திற்காகவே அவர் நமது சார்பாக மரித்தார். முதலாவதாக அவர் நமது பாவத்தின் தண்டனைக்கிரயத்தை (penalty) செலுத்துவதற்காக மரித்தார். (ரோமர்:4:25) "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்." தேவன் நீதிபரராக இருப்பதினால் அவர் பாவத்தை தண்டித்தே ஆக வேண்டும். ஆகவே, நம்மை அந்த தண்டனையிலிருந்தும், நியாயத் தீர்ப்பிலிருந்தும் விடுவிப்பதற்காக அவரே ஒப்புக்கொடுத்தார். ஆனால், அன்புள்ள தேவனாக அவர் நம்மில் அன்பு கூர்ந்தார். நம்மை மன்னித்தார். இந்த இரண்டு தெய்வீக நியதி (Laws)களையும் நிறைவேற்றவே அவர் நியாயத்தீர்ப்பை தன் மேல் ஏற்றுக்கொண்டார். நமது பாவமுள்ள நினைவுகள், வார்த்தைகள் மற்றும் செய்கைகளுக்காக அவர் துக்கப்பட்டார். அவரது கைகளில் ஆணி அடிக்கபபட்டது. விலாவிலே குத்தப்பட்டார். முதுகிலே சாட்டைவாரினால் பிய்த்து எடுக்கப்பட்டார்(Scouraged), அவரது தலைமயிர் பிடுங்கப்பட்டது. அவர் இதையெல்லாம் மனப்பூர்வமாக (Willingly) ஏற்றுக்கொண்டார். இரண்டாவதாக நமது பாவ சுபாவத்திலிருந்து நம்மை விடுவிக்க அவர் மரித்தார். ரோமர்.6:5,6 நமது பாவ சுபாவம் சிலுவையில் அறையப்படவேண்டும். வெற்றிக்கு அதுவே வழி. இல்லை யென்றால் நாம் விடுவிக்கப்பட வழியே இல்லை. நமது சுயவல்லமையினாலோ (will power), வேத அறிவினாலோ, நீண்ட

ஜெபங்களினாலோ முடியவே முடியாது. மூன்றாவதாக: நமக்கு புதிய சுபாவத்தை தரும்படியாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரித்து மறுபடியும் எழுந்தார். நமக்கு தெய்வீக சுபாவம் தந்து மற்றும் நம்மை நீதிமான்களாக்க உயிர்த்தெழுந்தார். அவரது உயிர்த்தெழுந்த அதே ஜீவன் விசுவாசத்தினாலே நமக்குள் வந்து நம்மை நீதிமான்களாக்கி, பாவத்தின் மேல் வெற்றி கொள்ள செய்கிறது. அப்படியாகவே தாவீது கர்த்தரை தனது இரட்சகராக, மீட்பராக, விடுவிப்பவராக கண்டான். அவன் புதிய இருதயத்திற்காக, புதிய ஜீவனுக்காக, புதிய சுபாவத்திற்காக ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தான். ஏன் என்றால் முழுமையாக விடுதலையை அவன் ஆசித்தான். (சங்.51:10) தேவனுடைய மகிமையை காண விரும்புகிறவர்கள் சில நிபந்தனைகளை (conditions) நிறைவேற்ற வேண்டும். அதனால்தான் தேவன் யோபுவை தெரிந்து கொண்டு நீதிமானும், சன்மார்க்கனும், நல்லவனுமான அவனை பலவிதமான பாடுகள், வேதனைகளின் ஊடாக கொண்டுசென்று பரிசுத்தமுள்ள, வல்லமையுள்ள தேவனோடு தனிப்பட்ட முறையில் அனுபவம் (Personal Experience) உண்டாகும்படி செய்தார். அவனது முழு சொத்தும் எடுத்துப்போடப்பட்டது. அவனது ஆடு, மாடுகள், கழுதைகள், ஒட்டகங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டது. அவனது முழு சரீரமும் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டான். அப்படியாகத்தான் யோபு தேவன் தனது இரட்சகர் என்று அனுபவத்தில் அறிந்து கொண்டான். அதேபோல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உனது இரட்சகராக இருக்க விரும்புகின்றார். அவர் உன் பாவங்களை எனக்கு மன்னித்து பாவத்தின் நினைவுகூட இல்லாமல் சுத்தமாக முழுவதுமாக என்னை கழுவவும், சுத்திகரிக்கவும் விரும்புகிறார். அவர் உனக்கு புது சுபாவத்தை கொடுப்பார். சகலத்தையும் புதிதாக்குவார். தாவீது செய்ததுபோல் நீயும் அவரை நோக்கி கூப்பிடு. "ஓ.. தேவனே என்மேல் கிருபையாயிரும்! எனது பாவங்களை அறிந்திருக்கிறேன். உமக்கு விரோதமாக பாவம் செய்தேன். என்னை முழுவதுமாக கழுவியருளும். புதிய இருதயத்தை என்னில் சிருஷ்டியும்." என்று அவரை நோக்கி கூப்பிடு. (4) என் தேவன் (My God) சங்.18:2ல் நான்காவது பெயர் என் தேவன் என்பதாகும். என் தேவன் என்றால் என் சொந்த தேவன். அனைவரும் தேவனைப் பற்றிப்

பேசுகிறார்கள். ஆனால், அவர் என் தேவன் என்று அவர்களால் சொல்ல முடியவில்லை. ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் ஒரு தேவ ஊழியருக்கு எந்த ஒரு குறிப்பிட்ட செய்தியும் கிடைக்கவில்லை. சபையார் பாடலுக்குப் பின் பாடலாக பாடிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், அவர் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டே இருக்கிறார். தனக்கு தேவன் செய்தியை தரவேண்டும் என்று. சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர் நின்று செய்தி கொடுக்க வேண்டும். ஆனாலும், இன்னும் வெறுமையாகவே இருக்கிறார். அதனால் அவர் கதறினார். "என் தேவனே.. என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்? மிகவும் தாழ்மையாக உணர்ந்தவராக அவர் வெளியில் வந்தார். பின்னர் தனது உடன் ஊழியரிடம் சொன்னார். இங்கு என்னுடைய பணி முடிந்து விட்டது. நான் வேறு இடம் போகப்போகிறேன். நான் அதிகமாக ஜெபித்தேன், கர்த்தர் எனக்கு எந்த செய்தியும் கொடுக்கவில்லை. அவர் தூரமான இடத்துக்கு போய் விட்டார். சில வருடங்களுக்குப் பின்னர் தனது பழைய நண்பர்களை போய் பார்க்கலாம் என்ற நினைவோடு திரும்பி அதே இடத்திற்கு வந்து, தனது பழைய நண்பர்களை சந்தித்தார். ஒவ்வொரு கூட்டத்திற்கும் உண்மையாக வந்தவர்களில் சில ஸ்திரி (Ladies)களையும் மற்றும் பழைய நண்பர்களையும் சென்று சந்தித்தார். அவர் ஒரு வீட்டிற்கு வந்தபோது, அந்த வீட்டு பெண் மரித்துப் போனார். ஆனால் அவளது மகள் அங்கு இருந்தாள். அவள், ஐயா, தயவு செய்து உள்ளே வாருங்கள் என்று அழைத்தாள். பின்னர் "ஐயா, எனது தாயார் இறந்துவிட்டார்கள். ஆனால் எனக்கு உங்களை தெரியும்" என்றாள். ஐயா, உங்களது கடைசி செய்தி உங்களுக்கு நினைவிருக்கிறதா? நீங்கள் அங்கிருந்து செல்வதற்கு முன் கொடுத்த செய்தி?" அதற்கு அவர் சொன்னார், "ஆமாம், அதை என்னால் மறக்கவே முடியாது, நான் மிகவும் தாழ்த்தப்பட்டேன்" என்றார். அதற்கு அவள் நானும் கூட அந்த செய்தியை மறக்கவே முடியவில்லை. அந்த நாள் காலையிலேயே நீங்கள் கண்ணீரோடு சொன்னீர்கள். என் தேவனே என் தேவனே என்று. கர்த்தர் என்னோடு பேசினார். தேவனை நீங்கள் உங்கள் தேவனாக அழைத்தீர்கள். அந்த காலையிலேயே தேவன் என்னுடைய இரட்சகராக மாறினார். இப்பொழுது அவரே என் இரட்சகர் என்று நான் சொல்ல முடியும்.

அவரே என் தேவன், என் மீட்பர். அந்த விதத்தில் பார்க்கும்பொழுது அவரே என் தேவன், என் கர்த்தர், என் இரட்சகர், என்னை விடுவித்தவர். நீங்கள் சிறு குழந்தையிடம் அதன் தகப்பனாரை காட்டி அவர் என் அப்பா என்று சொன்னால் அந்த குழந்தை மிகுந்த அன்போடுகூட "அவர் என் அப்பா" (My own daddy) என்று சொல்லும். ஒரு பிச்சைக்காரன் உங்களைப்பார்த்து அப்பா அப்பா என்று கூப்பிடலாம். ஆனால், நீங்கள் அவனுடைய அப்பா இல்லை. அதேபோல நமது கர்த்தர் இரக்கமுள்ள சிருஷ்டிகர்த்தர். எந்த விதமான சந்தேகமும் இல்லை. அவர் நமது ஜெபங்களுக்கு வித்தியாசமான நேரத்தில் பதில் அளித்திருக்கலாம். இருந்தாலும் இன்னும் அவர் என் தேவன் என்று உன்னால் சொல்ல முடியாமல் இருக்கலாம். அந்த சிறு குழந்தையைப் போல மிகுந்த அன்போடு நெருக்கமான உறவோடு "அவர் என் தேவன்" அவர் என் சொந்த தேவன்" என்று தைரியமாக சொல்லவேண்டும். எனது இரட்சிப்பிற்கு பிறகு முன்னதாக நான் அனேக காரியங்களுக்காக ஜெபம் செய்திருக்கிறேன். அவைகளுக்கு பதில் கிடைத்திருக்கிறது. அவர் உயிருள்ள ஆண்டவர், மகத்துவமான தேவன் (Great God) அற்புதமான தேவன். ஆனால், அவர் எனது சொந்த தேவன் என்று என்னால் சொல்ல முடியவில்லை. எனது இரட்சகர் என என்னால் சொல்ல முடியாமல் இருந்தேன். அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நான் இங்கிலாந்தில் (England) இருந்த பொழுது எனது நண்பர்கள் என்னை ஒரு கேள்வி கேட்டனர். "இந்தியாவின் மிக அழகான பகுதி எது? என்று கேட்டார்கள். அதற்கு நான் மிகுந்த சந்தோஷத்தோடும், பெருமிதத்தோடும் சொன்னேன்" காஷ்மீர் என்று. பின்னர் அவர்கள் அதை பற்றி கொஞ்சம் சொல்லு என்று கேட்டார்கள். நான் மணிக்கணக்காக காஷ்மீர் பற்றி கதை அளந்தேன். "எங்கள் காஷ்மீர் மிக அற்புதமாக இருக்கும், அதில் உள்ள ஊற்றுகளும் (Spring) பள்ளத்தாக்குகளும் உங்கள் நாட்டில் இருப்பதைவிட பல மடங்கு இரம்மியமாக இருக்கும்" என்றெல்லாம் மிகவும் பெருமையாக சொன்னேன். நான் சொன்னதெல்லாம் உண்மை, நான் மிகவும் பெருமையோடும் சந்தோஷத்தோடும் எங்கள் காஷ்மீர் அற்புதமானது என்றேன். ஆனால், நான் அங்கு போனதே இல்லை. 1935-ம் ஆண்டு நான் இங்கிலாந்தில் இருந்து திரும்பி இந்தியாவிற்கு வந்த பிறகுதான், முதல்முறையாக நான் காஷ்மீரைப் பார்த்தேன்.

என்ன ஒரு வித்தியாசம்! பிறர் சொல்லிக் கேட்பதை வைத்து சொல்வது ஒன்று, நாமாகவே பார்த்து அறிந்து சொல்வது மற்றொன்று. அதேபோல நமது தேவன் மிகவும் பெரியவர் (So great) அவர் மிகவும் அற்புதமானவர். அவர் மரணத்தை வென்றவர். அவர் உயிரோடு எழுந்தார். அவர் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். அதெல்லாம் உண்மைதான். ஆனால், அவர் உன்னுடைய சொந்த இரட்சகராக மாறி இருக்கிறாரா, நீ அவரை தனிப்பட்ட விதத்தில் அறிந்திருக்கிறாயா? ஒரு நண்பனிடம் பேசுவது போல நீ அவரோடு பேசுகிறாயா? அவர் உன்னோடு நடக்கிறாரா? உன்னோடு பேசுகிறாரா? அவர் உன்னோடு வசிக்கிறாரா? அப்பொழுது மட்டுமே உன்னால், ஆம் நான் அவரை என் சொர்நத இரட்சகராக அறிந்து இருக்கிறேன். "அவர் என் தேவன், என் கர்த்தர்" என்று சொல்ல முடியும். தாவீது மிகவும் பலம் வாய்ந்தவனாக இருந்தபோதிலும், அவனுக்கு தேவன் மேல் மிகுந்த வைராக்கியம் இருந்த போதிலும், அவன் தனது அனேக வருட உபத்திரவங்களிலும் தேவனை அறியாமலேயே இருந்தான். அவன் தனது நண்பர்களாலும், உறவினர்களாலும் கைவிடப்பட்டபோது தேவனை நோக்கி தனது சகல தேவைகளுக்காகவும் கூப்பிட்டான். அதன்பிறகுதான் தேவன் அவனுக்கு அருமையானவராக, அருகிலேயே உள்ளவராக (dear and near) காணப்பட்டார் என்று வாசிக்கிறோம். அது முதல் அவன் தேவனோடு மிகவும் சுதந்திரமாக பேச ஆரம்பித்தான். இப்பொழுது தன் அனுபவத்தின் மூலமாக தாவீது சொல்கிறான். "அவர் என் கன்மலை, என் கோட்டை, என் இரட்சகர், என் தேவன்" என்று. பிறகு, நான் தேவனை நேசிக்கிறேன். எனது தகப்பனாரை, சகோதரரை அல்லது மற்ற எல்லாரையும் பார்க்கிலும் அவரை அதிகமாக நேசிக்கிறேன்" என்று சொல்கிறான். ஏன் என்றால் அவனது பாடுகளிலே, உபத்திரவங்களிலே ஒருவரும் அவனுக்கு உதவி செய்யவில்லை. அதனால்தான் அவன் அதுல்லாம் என்ற குகைக்கு வந்தபோது ஜீவனுள்ள தேவனை நோக்கி கூப்பிட்டான். அங்கே உயிருள்ள தேவனைப் பற்றிய உறுதியான அனுபவம் அவனுக்கு ஏற்பட்டது. அங்கே அவனுக்கு ஜெபதொனியோடு கூடிய புதிய துதிப்பாடல் கிடைத்தது. எல்லா சூழ்நிலையிலும் அவனால் தேவனை துதிக்க முடிந்தது. யோ.20-ம் அதிகாரத்தில் மகதலேனா மரியாள் "அவர் என் தேவன்" என்று உண்மையாக

சொல்ல முடிந்தது என்று பார்க்கிறோம். வசதி படைத்த யூதர்கள் தங்கள் பிணங்களை அடக்கம் பண்ண வித்தியாசமான வழியை உபயோகப்படுத்துகிறார்கள். எருசலேம் நான்கு மலைகளால் சூழப்பட்ட நகரமாகும். அதனால் அவர்களால் பிரேதக் குழிகளை வெட்ட முடியாது. எனவே, பணக்கார யூதர்கள் தங்கள் குடும்பத்திற்காக சொந்தமாக ஒரு பாறையில் அறையை உண்டாக்குவார்கள் (dug sepulcher). அந்தக் கல்லறைக்குள்ளே இடது பக்கத்திலே மக்கள் நின்று பார்க்கத்தக்கதாக இடம் இருக்கும். வலது பக்கத்திலே பிணம் வைக்கப்படும். அதன்மேல் ஒரு பலகை (Slab) வைக்கப்படும். கல்லறைக்கு வெளியே காடிகளை (Groover) கொண்ட பெரிய கல் கீழ்பக்கமாக இருக்கும். மேல் பக்கமாக கதவுபோல் நகர்த்தப்படும் (Slide) வகையில் செய்யப்பட்டிருக்கும். யூதர்களின் பழக்கத்தின்படியே பார்த்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் ஈஸ்டர் நாளன்று (Easterday) சுகந்த வர்க்கங்களால் அபிஷேகம் செய்யப்பட வேண்டும். அதனால் அன்று அதிகாலையில் மற்ற சில பெண்களோடு மரியாள், அன்போடும் பயபக்தியோடும் கல்லறைக்குச் சென்றாள். அங்கே மூன்று நாட்களுக்கு முன்பாக கர்த்தருடைய சரீரம் வைக்கப்பட்டது. அதற்கு முத்திரை (Seal) வைத்து காவல் காரர்கள் அதை காத்துக்கொண்டிருந்தார்கள். அந்த காவல் சிப்பாய்களையும், கோபத்தில் இருந்த யூதர்களையும் அந்தப் பெண்கள் சந்திக்க வேண்டியதாக இருந்தது. அவர்கள் அந்த பெரிய மூடியாக வைக்கப்பட்ட கல்லை நகர்த்த வேண்டும். இப்படிப்பட்ட சிரமங்களோடு அந்த பெண்கள் அந்த கல்லறைக்கு வந்தார்கள். அவர்களது விசுவாசத்தின் நிமித்தமாக கல் தேவதூதர்களால் நகர்த்தப்பட்டிருந்தது. காலியான கல்லறையைப் பார்த்துவிட்டு மற்ற எல்லா பெண்களும் வெளியே போய் விட்டார்கள். ஆனால் மரியாளோ அழுது கொண்டு வெளியே நின்றாள். (யோ.20:11) நான் அந்தக் கல்லறையை கண்டு இருக்கிறேன். அதற்கு இரண்டு பக்கமும் அமர (Sit) இடம் இருந்தது. இரண்டு பேர், ஒருவன் தலைபக்கமாகவும், மற்றவன் கால் பக்கமாகவும் உட்கார்ந்து இருக்க மரியாள் கண்டாள். "ஸ்திரியே, ஏன் அழுகிறாய்" என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவள், என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள், அவரை வைத்த இடம்

எனக்குத் தெரியவில்லை" என்றாள். (வ.13) எவ்வளவு உறுதியான பக்தியும், அன்பும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் அவளுக்கு இருந்தது. கோபமுள்ள யூதர்களும் போர்ச் சேவகர்களும் கோபத்தோடு தாக்கினாலும், அதற்கும் அவள் தயாராகவே இருந்தாள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அவர்கள் வேறு இடத்தில் வைத்திருந்தாலும் அதை சுமக்க விருப்பத்தோடு (willing) இருந்தாள். அவள் தனியாக இருந்தாள். எப்படி அவரது முழு சரீரத்தையும் சுமக்க முடியும்? ஆனாலும் அவள் ஆவலாக இருந்தாள். உடனே கர்த்தரே அவளுக்கு தரிசனமானார். (வ.15) அவளது பயபக்தியையும் அன்பையும் அறிந்த ஆண்டவர் அவளுக்கு காட்சி அளித்து அவளோடு கூட பேசினார். முன்பு "ஸ்திரியே" என்று அழைத்தவர் இப்பொழுது அவளது பெயர் சொல்லி மரியாளே, என்று கூப்பிட்டார். தனது பெயரை அவர் வாயால் கேட்ட உடனே அவளது பயமெல்லாம் பறந்துவிட்டது. கண்ணீர் காய்ந்து விட்டது. நேராகப் போய் அவரது பாதங்களை தழுவச் சென்றாள். அப்படியாக பாதத்தை தொடும் பழக்கம் மிகவும் பொதுவான பழக்கமாகும். மூத்தவர்கள் பாதத்தை தொட்டு தங்கள் மரியாதையை காட்டுவார்கள். அந்தவிதமான பய பக்தியோடுதான் அவள் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தை தொட விரும்பினாள். "இயேசு அவளை நோக்கி, என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்தற்கு ஏறிப் போகவில்லை.." என்றார். (வ.17) சிறிது நேத்திற்குப் பின்னர் நமது கர்த்தர் மற்ற ஸ்திரீகளுக்கு காட்சி அளித்தார். அவர்கள் கல்லறையிலிருந்து திரும்பிப் போய்க்கொண்டிருந்தனர். இவைகளை மத்.28:9-ல் பார்க்கிறோம். அவர்கள் கிட்ட வந்து அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள். இந்த இரு சம்பவங்களும் ஈஸ்டர் அன்று காலையிலேயே ஒருமணி நேர இடைவேளையில் நிகழ்ந்தன. மரியாளை தனியாக விட்டிருந்தபடியினால் அவர்கள் திரும்பி வந்துகொண்டிருந்தனர். வழியில் கர்த்தர் அவர்களை சந்தித்து "வாழ்க" என்றார். அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு அவர் பாதங்களைத் தழுவி பணிந்துகொண்டார்கள். அவரும் அவர்களை தொட அனுமதித்தார். ஆனால் மரியாளை மட்டும் "என்னை தொடாதே" என்றார். மரியாளின் பயபக்தியின் நிமித்தமும் மற்றெல்லாரையும் சீஷர்களையும்விட அவள் அதிகமாக செய்தாள்.

சீஷர்கள் கூட மறைந்து கொண்டார்கள். ஆனால், அப்படிப்பட்டவளை கர்த்தர் "என்னை தொடாதே" என்றார். ஏன்? அவரே அதற்கு காரணம் தெரிவிக்கிறார். நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரரிடத்திற்கு போய் நான் என் பிதாவினிடத்தற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்கு சொல்லு என்றார். (யோ.20:17) இதன் பொருள் என்னவென்றால் "இப்பொழுதே என் தேவன் உங்கள் தேவன். என் பிதா உங்களுக்கும் பிதாவாக மாறுகிறார்" எனபதாகும். மத்.28:9-ல் பார்க்கிறபடி அவர் அந்த ஸ்திரீகளுக்கு காட்சி கொடுப்பதற்கு முன்பதாக அவர் மேலே சென்று (Ascended)பின்னர் திரும்ப வந்தார். நம்மை அவரது பங்காக மாற்றிக்கொள்ளும்படியான முக்கியமான மகத்துவமான ஊழியத்தை நிறைவேற்றும்படியாக அவர் மேலே சென்று பின் கீழே வந்தார். அதினிமித்தமாக நாம் அவரிடம் செல்லும் சிலாக்கியம் பெருகிறோம். இப்பொழுது அவர் அழிவில்லாத சரீரத்தை பெற்றிருக்கிறார். இப்பொழுது அவர் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பரலோகத்தின் எந்த பாகத்திலும் அவர் இருக்கமுடியும். அது அற்புதமான சரீரம். அவர் இரண்டாம் தரம் வரும்பொழுது நாமும் அதேவிதமான சரீரத்தைப் பெற்றுக் கொள்வோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 1 யோ.3:2-ல் அவர் மேலே ஏறி சென்றதன் நோக்கத்தைப் பார்க்கிறோம். மேலும், அவரே நமது பரலோக பிரதான ஆசாரியர். (எபி.9:11,12) அவர் பரலோகத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தில் தமது சொந்த இரத்தத்தோடு பிரவேசித்தார். பழைய ஏற்பாட்டு காலத்திலே என்ன நிகழ்ந்தது என்று பார்ப்போம். லேவி.23-ம் அதிகாரத்தில் மிக முக்கியமான பண்டிகையான (at feast of a ....ment) I பார்க்கிறோம். ஆசரிப்பு கூடார வாசலிலே அனேக மக்கள் கூடி வருவார்கள். அவர்கள் பாவ நிவாரண பலி, குற்ற நிவாரண பலிகளை கொண்டு வருவார்கள். அவர்கள் உள்ளே போக முடியாது. ஆனால், தாங்கள் பலியாக கொண்டுவந்த மிருகத்தின் தலையின்மேல் தங்கள் கைகளை வைத்து தங்கள் பாவங்களை, குற்றங்களை அறிக்கையிடுவார்கள். அவர்கள் சார்பாக அந்த மிருகம் ஆசாரியனால் கொல்லப்படும். பிரதான ஆசாரியன் தனது வஸ்திரங்களை களைந்து, சாதாரண வஸ்திரங்களை தரித்துக்

கொண்டு, இரத்தத்தை எடுத்துக்கொண்டு திரைக்குப் பின்னால் உள்ள மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு செல்வான். ஆங்கே கேருபீன்களுக்கு மத்தியிலுள்ள கிருபாசனத்தின் மேல் இரத்தத்தை தெளிப்பான். அப்பொழுது பரலோகத்திலிருந்து தெய்வீக அக்கினி (divine fire) இறங்கி இரத்தத்தை பட்சிக்கும். அந்த அக்கினி மனிதனால் உண்டாக்கப்பட்ட அக்கினி அல்ல. அப்படி அக்கினியானது இரத்தத்தைப் பட்சிக்குமானால் பரிசுத்த தேவன் பலியை அங்கீகரித்தார் என்று பொருள். அதனால் அந்த பலியை கொண்டு வந்த மனிதனின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் பிரதான ஆசாரியன் வெளியே வந்து ஜனங்களைப் பார்த்து "ஜனங்களே, சந்தோஷப்படுங்கள்" உங்கள் தேவன் உங்கள் பாவங்களை மன்னித்தார். உங்கள் சார்பாக நான் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று இரத்தத்தை செலுத்தினேன். பரலோகத்திலிருந்து பரிசுத்த அக்கினி வந்து இரத்தத்தை பட்சித்தது. அதன் பொருள் என்னவென்றால் தேவன் திருப்தி அடைந்தார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அதுதான் மிகவும் சந்தோஷமான நாளாகும் (Happiyest day) தேச முழுமைக்கும் மிக்க சந்தோஷம். அது வருடம் ஒருமுறை வரும். எபிரேயர்:9-ம் அதிகாரத்தின்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது சொந்த இரத்தத்தோடு பூலோகத்தில் பிரவேசித்தார். சங்.16:10-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி அவரது இரத்தம் அழிவைக் காணவில்லை. நாம் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் நமது இருதய துடிப்பு நின்ற உடன் நமது இரத்தம் உறைந்து துர்நாற்றம் (stinking) எடுக்க ஆரம்பிக்கும். அதனால்தான் மரித்த சரீரத்தை பாதுகாக்க பனிக்கட்டி (ice) உபயோகப்படுத்தி நீண்ட நேரம் பாதுகாக்கிறோம். ஆனால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அழிவை ஒருபோதும் காணவில்லை. அவர் பரிபூரணமான பரிசுத்தர். அவர் பரிசுத்த ஆவியினால் பிறந்தார். பரிசுத்த இரத்தம், அவர் கொக்கிகள் நிறைந்த வாரினால் அடிக்கப்படும்போது இரத்தம் வெளிப்பட்டது. அவரது கைகளிலும், கால்களிலும் ஆணிகளால் அடித்தபோது இரத்தம் பீரிட்டு வந்தது. அவரது விலாவிலே குத்தப் பட்டபோது இரத்தம் வெளியே வந்தது. அவர் கெத்சமனேயில் ஜெபித்தபோழுது இரத்தம் வெளிப்பட்டது. இந்த இரத்தம் எங்கே போகிறது? அது அழிவைக் காணாதது. அது பரிசுத்தமான இரத்தம்.

அது பரலோகத்துக்குச் சென்றது. நமது சார்பாக அவர் தமது சொந்த இரத்தத்தை பரலோகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. அங்கிருந்து இரத்தம் தெளிக்கப்பட்டு நம்மை சுத்திகரிக்கின்றது. வேத வசனம் சொல்கிறது “அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்கள் ஆக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். ரோமர்:25 இதன் அர்த்தம் என்னவென்றால் அவர் உயிர்த்தெழுந்த அதே ஜீவன் நமது இருதயத்திலும் ஊற்றப்படுகிறது. ஏதோ, பாவ அறிக்கை செய்வதன் மூலமாகவோ, மனந்திரும்புதல் மூலமாகவோ நமது பாவங்கள் நீக்கப்பட்டுவிடும் என்று நினைக்க வேண்டாம். உயிர்த்தெழுதல் மூலமாக நமது பாவங்கள் நீக்கப்பட்டுவிடும் என்று நினைக்க வேண்டாம். உயிர்த்தெழுந்த வல்லமையினால் மட்டுமே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். இது மிகவும் பரிசுத்தமான வல்லமை. இதை சுத்திகரிக்கப்பட்ட (Purified) ஆவியில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். பாவிகளாகிய நாம் அனைவரும் குற்றமுள்ள தீட்டுள்ள ஆவியை பெற்றிருக்கிறோம். நமது நினைவினாலோ, வார்த்தையினாலோ அல்லது கிரியையினாலோ எந்த விதத்தில் நாம் பாவம் செய்தாலும், நமது பாவம் நமது இருதயத்தில் எழுதப்படுகிறது (engraven). தற்காலங்களில் ஒலி நாடாக்களில் (Tape recorders) நமது சத்தத்தை பதிவு செய்கிறது போல நாம் என்ன சத்தமிட்டாலும், என்ன வார்த்தை பேசினாலும் இருமல் கூட அதில் பதிவாகிறது. அதை உடனே நாம் கேட்க முடியா விட்டாலும், பின்னர் மறு ஒலிபரப்பு செய்யும்போது சகல சத்தத்தையும் கேட்க முடிகிறது. அந்த ஒலி நாடாவில் நாம் நினைக்கும் நினைவுகளும், பேசும் வார்த்தைகளும், செய்யும் எல்லா செய்கைகளும், சகலமும் நமது ஆவியில் எழுதப்படுகிறது. நாம் தொடர்ந்து ஒவ்வொரு சமயத்திலும் தீட்டுப்பட்டுக்கொண்டே இருக்கிறோம். இந்த தீட்டின் நிமித்தமாக தேவனுடைய ஜீவன் (the lift of God) நமக்குள் வரமுடியாது. அந்த ஜீவன் இல்லாமல் அவரை “என் தேவன்” என்று அழைக்க முடியாது. நாம் தேவனை “என் பிதா” என்று அழைக்கிறோம். ஏன் என்றால் நாம் அவர் மூலமாக பிறந்திருக்கிறோம். அவரது ஜீவன் நமக்குள் வருகிறது. நமது மாமாவை அப்பா என்று அழைக்கமாட்டோம். நமது அயலகத்தாரை (neighbor) நமது அப்பா என்று அழைக்க மாட்டோம்.

நாம் யார் மூலமாக பிறந்தோமோ அவரையே அப்பா என்று அழைக்கிறோம். தேவனுடைய ஜீவனை நாம் பெறவில்லையானால் அவரை நாம் எங்கள் தேவன் என்று அழைக்க முடியாது. அவரது ஜீவனே உயிர்த்தெழுந்த வல்லமை ஆகும். அவர் பரிசுத்தமுள்ள தேவன். நாம் சுத்திகரிக்கப்படவிட்டால் அவரது ஜீவனை நமக்குள் ஊற்ற முடியாது. நமது உள்ளான தீட்டுப்பட்ட சுபாவத்தை வேறு எந்த உலக சக்தியாலும் (earthly power) மாற்றமுடியாது. சுத்தம் பண்ணவும் முடியாது. ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்க, கழுவ மற்றும் பரிசுத்தம் பண்ண வல்லமை உள்ளதாக இருக்கிறது. அவரது இரத்தத்தினாலே நாம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டோம்.(யோ:1-7) இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை நம்மை சுத்திகரிக்கும். மேலும், தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை நம்மைக் கழுவி ....." (வெளி.1:6) கிறிஸ்துவினுடைய இரத்தம் உங்கள் மனசாட்சியைச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்". (எபி.9:14) சாதாரண தூசியாக இருந்தால் நமது துணிகளை உதறி (Shake) நீக்கிவிடலாம். அது சுத்திகரிப்புக்கு ஒப்பானது. அதிக அழுக்காக இருந்தால் அதை சோப்பு போட்டு தண்ணீரில் துவைக்க வேண்டும். அது கழுவுதல் ஆகும். துணியின் மீது ஏதாவது இரசாயணப் பொருள்கள் (Chemicals) பட்டுவிடுமானால் அதனால் உண்டான கறை எளிதில் நீக்க முடியாது. அதை நீக்க வேறு உறுதியான இரசாயண பொருள் (Strong Chemical) தேவைப்படும். அதுதான் சுத்திகரித்து பரிசுத்தப்படுத்துதல் (Purging) ஆகும். அவ்வாறாகவே நமது கர்த்தர் நம்மை தமது இரத்தத்தால் நமக்குள் உள்ள சகல தீட்டையும் முற்றிலும் கழுவுகிறார். கர்த்தர் மரியாளிடம் சொல்கிறார், மரியாளே நான் உன் நிமித்தம் மறுபடியுமாக உயிர்த்தது மட்டுமல்ல. ஆனால் நான் மரணத்தையும் ஜெயித்தேன். என்னிடம் வரும் எல்லாருக்காகவும் நான் மரணத்தை வென்றுவிட்டேன். அவர்கள் என்னில் பங்குள்ளவர்களாக இருக்க விரும்புகிறேன். அவர்கள் என்றென்றும் நித்திய காலமாக வாழலாம். நான் உன்னோடு எப்பொழுதும் இருக்க விரும்புகிறேன். அதற்கு முன்பாக நான் உன்னை சுத்தப்படுத்த வேண்டும். எனது இரத்தத்தினால் முழுமையாக பரிசுத்தப்படுத்த வேண்டும். அப்பொழுது நீ என்னோடு தொடர்ந்து பேசலாம். என் பிதாவே,

என் தேவனே என்று கூப்பிடலாம். எனது பிள்ளையாக தைரியமாக என்னிடம் நீ வரலாம். எனது பிள்ளைகளுக்கு வைத்திருக்கும் சுதந்திரத்தில் நீயும் பங்கு பெறலாம். ஆனால், முதலாவதாக நான் பரலோகத்துக்கு ஏறிச் சென்று பரலோக பிரதான ஆசாரியராக எனது சொந்த இரத்தத்தை உங்கள் சுத்திகரிப்புக்காக, கழுவுதலுக்காக, பரிசுத்தப்படுத்த தக்கதாக செலுத்த வேண்டியது அவசியம் என்றார். பரலோகத்திலிருந்து கர்த்தர் அந்த இரத்தத்தை மனந்திரும்புகிற பாவிகளின் ஆத்துமாவிலே ஊற்றுகிறார். சீஷர்கள் அவரது அற்புதங்களைக் கண்டார்கள். அவரோடு வாழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் உயிர்த்தெழுந்த இரகசியத்தை அறிந்து கொள்ள வில்லை அவர் உயிர்த்தெழுந்த பிறகு மட்டுமே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தோடு பரலோகத்திற்கு ஏறிச் சென்று பின்னர் அவர்கள் சுத்திகரிக்கப்பட்டார்கள். உடனடியாக உயிர்த்தெழுந்த வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள். நாம் மனந்திரும்புவதன் மூலமாகவோ, சுய சித்தத்தின் மூலமாகவோ, ஜெபங்கள், வேதவாசிப்பு மற்றும் அற்புதங்கள் மூலமாகவோ நீதிமான்கள் ஆவதில்லை. உயிர்த்தெழுந்த வல்லமையினால் மட்டுமே நாம் நீதிமான்களாகிறோம். அந்த வல்லமை மூன்று விதங்களில் (Three Fold) செயல்படுகிறது. முதலாவதாக நாம் நீதிமான்களாகிறோம். இரண்டாவது பிலிப்பியர் 3:10,11: 4:13-ல் பவுல் சொல்வதைப்போல உலகத்திலே வருகிற சோதனைகள், பாடுகளில் வெற்றி பெறுகிறோம். மூன்றாவதாக, ஒரு நாளிலே நாம் அழியாத சரீரத்தைப் பெற்றுக் கொள்வோம். (ரோமர்.8:11-ன்படி) பின்னர் நாம் சொல்வோம், "நான் நித்திய காலமாக அவருக்கே சொந்தம், அவர் என் தேவன். எனது பரலோகப் பிதா, நான் அவரது பிள்ளை. அவரோடு கூட நித்தியகாலமாக இருப்பேன். நான் அவரது பங்காளியாக, உடன் ஊழியனாக இருப்பேன்" என்று. உயிர்த்தெழுதலுக்குப் பிறகு சீஷர்கள் தேவனுடைய பிள்ளைகளானார்கள். ஆனால் அதற்கு முன்பாக அவர்கள் வெறும் சீஷர்களும், ஊழியக்காரர்களு (servents and apostles) மாகவே இருந்தார்கள். அதனால்தான் அவர்களுக்கு அவ்வளவு தைரியம் இருந்தது. ஆனால், அதற்கு முன்பாக அவர்கள் மேல் அறையில் போய் ஒளிந்து கொண்டிருந்தார்கள். ஆனால், அதன் பின்னர் இன்னும் அதிகமாக, மிகவும் தைரியமாக சாட்சி கொடுத்தார்கள்.

(அப்.4:12,13) அவர்களுடைய குற்றமுள்ள மனசாட்சியின் அழுக்கு அனைத்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டது. சுத்திகரிக்கப்பட்டது, பரிசுத்தமாக்கப்பட்டது. அதே இரத்தத்தினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கலாம். "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்த சித்தத்தின்படி, நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்". (எபி.10:10) பிள்ளைகள் தங்கள் வீட்டிற்கு வரும்பொழுது "ஐயா நான் உள்ளே வரலாமா? என்று கேட்பதில்லை. அவர்கள் வீட்டின் எந்த பகுதிக்கும் தைரியமாக செல்வார்கள். அவர்கள் உங்கள் பிள்ளைகள். பெற்றோர்களுக்கு உரியதில் பிள்ளைகளுக்கு தனிப்பட்ட உரிமை உண்டு. அதே போல அவரது இரத்தத்தின் மூலமாக அவரது பிரசன்னத்திலே நமக்கு தைரியம் (boldness) உண்டு. பின்னர் நாம் சொல்வோம், "அவர் என் தேவன், என் பிதா, இருளாம் பள்ளத்தாக்கிலும் அவர் என்னை சுமந்து செல்வார். பரலோகத்திலே எனது பங்கை தருவார். அவரது இராஜ்ஜியத்திலே என்ன ராஜாவாக நித்திய காலமாக இருக்கச் செய்வார். இப்பொழுது தயவு செய்து சொல்லுங்கள். இவ்வாறாக நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்களா? நீ அவரோடு எப்படி பேசுகிறாய்? நீ அவரிடத்திலே தாராளமாக போக முடிகிறதா? தாராளமாக அவருடன் பேசுகிறாயா? அல்லது ஒரு பிச்சைக் காரனைப் போல சிறிய ரொட்டித துண்டுக்காக (Crumbs) போகிறாயா? "அவர் என் தேவன்" என்று உன்னால் சொல்ல முடியுமா? நமது தேவன் இப்படிப்பட்ட சகல அனுபவங்களையும் தருகிறார். தந்து நம்மை பெலப்படுத்துவாராக. (5) என் பெலன் (My Strength) ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமும் நமது வாழ்நாள் முழுவதும் அவரது பெலத்தை, நமது சரீர பிரகாரமான ஆவிக்குரிய தேவைகளில் எப்படி நிரூபித்துக் (Prove) காட்டமுடியும்? அவர் என்னுடைய பெலனாக மாறியதற்காக நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். எந்த நேரத்திலும் எந்த தேவையிலும் அவரது பெலத்தை உரிமை பாராட்டிக் (claim) கேட்க அவர் எனக்குக் கற்றுக் கொடுத்தார். முதலாவதாக எனது பாவங்களை மன்னித்ததன் மூலமாக அவர் எனது ஜீவனுள்ள இரட்சகராக மாறினார். அவர் என் பாவங்களை எனக்கு எடுத்துக் காட்டிய போது (uncovered) நான் அவரிடம் சொன்னேன் "மனஸ்தாபப்பட்டு

மனந்திரும்பினேன்". நான் சொன்னேன் என் கர்த்தாவே என்னைப் போன்ற ஒரு பாவிக்கு ஏதாவது நம்பிக்கை உண்டா என கெஞ்சினேன். இந்த வெட்க கேடான காரியங்களை எல்லாம் நான் சந்தேகத்திற்கு இடமில்லாமல் செய்தேன். என் பாவங்களை நான் அறிக்கை செய்கிறேன். நான் அவைகளுக்காக மிகவும் வருந்துகிறேன்" என்றேன். பிறகு நான் ஒரு சத்தம் கேட்டேன். இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது" இது உங்கள் பாவமன்னிப்புக்காக சிந்தப்படுகிற என் இரத்தம்" என்று. இந்த வார்த்தைகள் எனக்கு முற்றிலும் புதியவைகள். அதனால், நான் சொன்னேன், ஆண்டவரே, இந்த வார்த்தைகள் எனது அறிவுக்கு எட்டாதவைகளாயிருக்கிறது. என்னால் இவைகளை புரிந்து கொள்ள முடியவில்லை. இவைகள் உம்முடைய வார்த்தைகள், மனிதனுடைய வார்த்தைகள் அல்ல. "எந்த ஒரு மனிதனும் இப்படிப் பட்ட வார்த்தைகளை எப்பொழுதும் சொன்னதில்லை" என்று நான் அவைகளை புரிந்துகொள்ளாமலேயே அவைகளை நம்பினேன். உமது சரீரம் எனக்காக பிட்கப்பட்டது. உமது இரத்தம் எனது பாவ மன்னிப்புக்காக சிந்தப்பட்டது" என்று விசுவாசித்தேன். அப்பொழுது ஒரு சத்தம் கேட்டது. "போ என் மகனே, உனது பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று. நான் முற்றிலும் மாற்றப்பட்டேன். பரலோக சந்தோஷம் எனது ஆத்துமாவை நிரப்பினது. நான் கர்த்தருடைய சமூகத்தை உணர ஆரம்பித்தேன். நான் முழு வேதாகமத்தையும் ஆறு வாரங்களுக்குள்ளாக படித்து முடித்தேன். எனது ஆரம்பகால கிறிஸ்துவ வாழ்க்கையில் நான் பஞ்சத்தின் ஊடாக (through Poverty) கடந்து போக வேண்டியதாயிருந்தது. நான் அமெரிக்காவில் இருந்தேன். எனது மனந்திரும்புதலுக்கு முன்னால் (before my conversion) எனக்கு இரண்டு வங்கிகளில் (banks) பணம் இருந்தது. பணம் இல்லாமல் இருப்பது எப்படி என்று எனக்கு தெரியவே தெரியாது. நான் என் தகப்பனாருக்கு அனேக கடிதங்கள் அனுப்பினேன். தந்திகளையும் அனுப்பினேன். ஆனால் ஒரு பதிலும் இல்லை. நான் ஒரு வேலையை தேடி ஆக வேண்டும். நான் பணத்திற்கு பிச்சை எடுக்கக்கூடாது என்று தீர்மானம் பண்ணினேன். இப்படிபட்ட மனம் மாறுதலுக்கு (conversion) பிறகு நான் பிச்சை எடுத்தாலோ அல்லது கடன் வாங்கினாலோ, அது கர்த்தருடைய நாமத்துக்கு வெட்கத்தை கொண்டுவரும்.

எனது தகப்பனாரோ, தாயாரோ மற்றவர்களிடம் உணவுக்காக பிச்சை எடுப்பது அல்லது உறவினர்கள், அயலகத்தாரிடம் கேட்பது அவர்களுக்கு பிடிக்காது (Never liked) என்று நான் அறிந்திருந்தேன். வேத வசனம் சொல்கிறது "ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருகிற கடனே அல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கு கடன் படாதிருங்கள்" என்று (ரோ.13:8). அந்த நாட்களில் வேலையில்லா திண்டாட்டம் (unemployment problem) அங்கே காணப்பட்டது. அனேகர் தங்கள் வேலையை இழந்ததினால் வீடு வீடாக சென்று ரொட்டிகளும், பிஸ்கட்டுகளும் விற்றனர். அதன் மூலம் வாழ்ந்தனர். அதனால் நான் வேலைக்காக தேடி அலைந்தேன். ஆனால், எங்கும் வேலை காலி இல்லை (No vacancies). எவ்வளவு மட்டமான வேலையாக இருந்தாலும் பரவாயில்லை ஆனால் பிச்சை எடுக்கக் கூடாது என்று தீர்மானம் பண்ணினேன். இந்தியாவின் மீது பற்றுள்ள யாராவது என்னை அழைத்து இந்தியாவைப் பற்றிக் கேட்பார்கள், அப்பொழுது ஒரு தேநீர் தருவார்கள் (a cup of tea) தருவார்கள். அதுவே எனது முழு நேர ஆகாரமாக இருக்கும். ஆனால், அந்த நாட்களில் எல்லாம் எல்லா சூழ்நிலையிலும் புது பெலன் கொடுக்கப்பட்டதை நான் உணர்ந்தேன். சில நேரங்களில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு நமக்கு சரியான உணவு கிடைக்கவில்லையானால் நமக்கு தலைவலி, முதுகு வலி வரும். நாம் பெலவீனப் பட்டுவிடுவோம். இந்த நாட்களிலும் ஒரு கப் டீ கூட இல்லையானால் மக்கள் பரிதாபமாக (Miserable) காணப்படுகிறார்கள். அப்பொழுது நான் பசியாகவோ தாகமாகவோ உணரவே இல்லை. நான் இப்படியாக மட்டும் ஜெபித்தேன்" கர்த்தாவே உமது மகிமைக்காக என்னை உறுதியாக உஷ்ணமாக (strong and warm) வையும்". எனக்கு ஆச்சரியமுண்டாகும் வகையில் எனக்கு அவர் பலம் கொடுத்தார். அப்படிபட்ட பலம் எந்த விதமான ஆகாரத்தினாலும் வருவதில்லை. அதிகமான தேடலுக்குப் பின்னர் எனக்கு ஒரு சமையல்காரர் (cook) வேலை கிடைத்தது. 700 பேருக்கு மேலான மக்களுக்கு நான் சமைக்க வேண்டியதாக இருந்தது. நான் அடுப்பின் அருகில் (Oven) ஏழு மணி நேரத்திற்கு மேலாக தொடர்ந்து நிற்க வேண்டியதாக இருந்தது. நான் எனது சொந்த பெலத்தினால் இதை செய்ய முடியாது என் நான் அறிந்திருந்தேன். அதனால் எல்லா நேரத்திலும் நான்

ஜெபித்துக்கொண்டே இருந்தேன். "கர்த்தாவே, உமது மகிமைக்காக நீர் எனது கரத்தை பிடித்துக் கொள்ளும். எவ்வளவு உப்பு போட வேண்டும்: எவ்வளவு மிளகு போட வேண்டும் என்று நீர் கற்றுத் தாரும்" என்று ஜெபித்துக் கொண்டே சமைத்தேன். நான் உணவை ஒரு போதும் கெடுத்ததில்லை (never spoiled). நான் ஒருபோதும் இந்தியாவில் இந்த வேலையை செய்யாதிருந்த போதிலும் ஒன்றும் வீணாகாமல் செய்ய முடிந்தது. கர்த்தரே எனக்கு ஞானத்தைக் கொடுத்தார். அவரே எனக்கு பெலத்தையும் கொடுத்தார். 1933-ல் நான் கராச்சியிலே (Karachi) ஒவ்வொரு நாளும் அநேக மைல் தூரங்கள் நடக்க வேண்டியதாக இருந்தது. நற்செய்தி கொடுத்துக் கொண்டே நடந்தேன். எனக்கு காலை உணவு கிடைக்குமா அல்லது மதிய சாப்பாடு கிடைக்குமா என தெரியவே தெரியாது. எந்த விதத்திலும், குறிப்பினாலோ, கடிதத்தினாலோ எனது தேவைகளை எவருக்கும் தெரிவிக்க கூடாது என திட்டவட்டமாக கர்த்தர் எனக்கு சொல்லிவிட்டார். இருந்தும் அந்த நாட்கள் மிகவும் சந்தோஷமான நாட்கள். நான் அவருடைய பெலத்தை நிரூபிக்க முடிந்தது. நான் உணவில்லாமல் அநேக மைல் தூரங்களை நடந்து கடந்தேன். ஆனால், எனது உள்ளத்தில் கூட முறுமுறுக்கும் எண்ணம் எழவில்லை. இதை நான் கர்த்தருடைய மகிமைக்கென்று சாட்சியாக சொல்கிறேன். நாங்கள் சொல்ல முடிந்தது "அவரே என் பெலன்" என்று. எங்களது ஒவ்வொரு சரீர பெலவீனத்திலும் (Physical Weakness) அதை நிரூபிக்க முடிந்தது. ஒரு நாளின் நடு இரவிலே எனது கதவை யாரோ தட்டினார்கள். நான் எழுந்து திறந்தபோது ஒருவன் நின்றிருந்தான். அவன், "சகோதரனே, இவ்வளவு நேரத்தில் வந்து தொந்திரவு கொடுத்ததற்காக என்னை மன்னித்து விடுங்கள். நான் ஒரு கனவுகண்டேன். அதில் ஒருவர் என்னிடம் சொன்னார், "சகோதரன் பக்த்சிங் சாப்பிட்டாரா கேள்" என்றார். அதனால் நான் எழுந்து சமையலறைக்குச் சென்று பார்த்தேன். அங்கே, ஒரு தட்டு சாதம் மீதி இருந்தது. அதனால் கேட்கிறேன் "தயவு செய்து சொல்லுங்கள், இன்று நீங்கள் சாப்பிட்டீர்களா என்றான். நான் யோசித்து சொல்கிறேன் என்றேன். பின்னர் ஆம் நான் இன்று நாள் முழுதும் சாப்பிடவில்லை. ஆனால் எனக்கு பசியே இல்லை. நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்றேன். தேவன் நமது சரீர

பெலவீனத்திற்கு தகுந்தாற் போல பெலத்தை தருகிறார். சில நேரங்களில் நாங்கள் 20 முதல் 30 மைல் வரை நடக்க வேண்டியதாக இருக்கும். அதற்கு தேவன் பலம் தந்தார். எப்படி என்று எனக்குத் தெரியவில்லை. சரீர சோர்வே இருக்காது. பரிசுத்த ஐக்கிய கூட்டங்களிலும் அதே காரியம் கடைபிடிக்கப்பட்டது. சிலருக்கு ஒன்று அல்லது இரண்டு மணிநேர ஓய்வுதான் கிடைக்கும். ஆனாலும், அவர்கள் மிகவும் தெம்பாகவே (fresh) காணப படுவார்கள். எந்த விதமான முறுமுறுப்பும் இருக்காது. மற்றவர்கள் 7 அல்லது 8 மணி நேரம் தூங்குவார்கள். ஆனாலும் முறு முறுப்பார்கள். அவர்களை காலையில் எழுப்பினால் கோபப்படுவார்கள். தேவன் எங்களை எல்லா சூழ்நிலைகளின் ஊடாக எடுத்துச் சென்றார். அவர் எங்கள் சகல தேவைகளுக்கும் போதுமானவர். தேவனுடைய பலத்தை நாங்கள் நிரூபிக்க முடிந்தது. 1938-ம் ஆண்டு தென்னிந்தியாவில் நற்செய்தி பிரசங்க ஊழியம் (Gospel-campaign) ஏற்பாடு செய்திருந்தோம். முழு இரவு ஜெபம் வைக்கவேண்டும் என்று கர்த்தர் எங்களுக்குப் பாரம் கொடுத்தார். அனேகர் பகலில் வேலை செய்து இரவு முழுவதும் எப்படி ஜெபிக்க முடியும்? என்றார்கள். தேவ பயமுள்ளவர்களில் பலர், "இரவு முழுவதும் எங்களால் ஜெபிக்க முடியாது, நாங்கள் போய் விடுவோம்" என்றார்கள். சில நாட்களுக்கு பிறகு அறிவிப்பு கொடுத்தோம். முழு இரவு ஜெபம் செய்ய வேண்டும் தேவன் விரும்புகிறார். அதற்கு "நாங்கள் வயதானவர்கள், நாங்கள் வருவோம் என்று எதிர்பார்க்க வேண்டாம;" என்றார்கள். நான் சொன்னேன், "ஒருவருக்கும் கட்டாயமில்லை (No compelsion) பாரமுள்ளவர்கள் மட்டுமே வரலாம்" என்றேன். 19 நாட்கள் தொடர்ந்து முழு இரவு ஜெபம் செய்தோம். காலைக் கூட்டமிருக்கும், மாலைக் கூட்டமும் இருக்கும். அதோடு முழு இரவு ஜெபம். நாங்கள் 2 மணி நேரம் தூங்கினால் அதுவே அதிகம். ஆனால் ஒருவரும் சோர்ந்து போகவில்லை (tired), பெலவீனப்படவில்லை (weak), சுகவீனமும் படவில்லை (sick). அதன்பிறகு தேவன் கிரியை செய்வதை நாங்கள் காணமுடிந்தது. அவர் இந்தியாவின் அனேக பகுதிகளில் பலமாக கிரியை செய்தார். ஆனால், அதற்கு முன்பாக அதிகப்படியான பெலத்தை (extra strength) பெற நாங்கள் முழு இரவு ஜெபம் செய்தோம். தேவன் எங்களுக்கு பெலன் கொடுத்தார். சில

வருடங்களுக்கு முன்பு, எங்களில் சிலர் அசாமிலே கூட்டங்கள் நடத்துவதற்காக சென்றோம். மலை உச்சியில் வசிக்கும் சிலர் தூரமான இடங்களில் இருந்து வந்தார்கள். அவர்கள் தங்கள் இடங்களில் இருந்து வந்தார்கள். அவர்கள் தங்கள் இடங்களில் ஓரிரு இரவு கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று கெஞ்சினார்கள். ஜெபித்த பிறகு நான் ஒத்துக்கொண்டேன். அவர்கள் இடத்தை அடைய மிகவும் சரிவான (very steep) மலைகளை கடக்க வேண்டியதாக இருந்தது. உணவில்லாமல் இரவு முழுவதும் நடந்தோம். நாங்கள் ஒரு அபாயகரமான மரத்திம்மையால் (log of wood) ஆன பாலத்தை கடக்க வேண்டியிருந்தது. நீண்ட தூரம் நடந்த பின்னர் எங்கள் பாதங்கள் வீக்கம் (plisters) கண்டது. கால்கள் மிகவும் வலிக்க ஆரம்பித்தது. நாங்கள் சேர வேண்டிய இடத்தை அடைந்ததும் அவர்கள் சொன்னார்கள்: மக்கள் நான்கு மணி நேரமாக கூட்டம் நடக்குமென்று காத்திருக்கிறார்கள் அதனால் அடுத்த நாளில்தான் ஆகாரம் என்றார்கள். கர்த்தரிடத்தில் பெலனுக்காக ஜெபித்தோம். அவர் தமது பெலனை கொடுத்தார். அது மிகவும் அற்புதமான கூட்டம். என் பெலவீனத்தை முற்றிலும் நான் மறந்து போனேன். கர்த்தர் தமது வார்த்தையையும், சுயாதீனத்தையும் (liberty) கொடுத்தார். அநேக இருதயங்களை உடைத்தார். இது எங்களுக்கு அநேக முறை நடந்திருக்கிறது. நாம் விசுவாசத்தின் மூலமாக உரிமை பாராட்ட வேண்டும். கர்த்தரின் அதிகப்படியான (நஒவசய) பெலத்தை கேட்க வேண்டும். இவைகளை எல்லாம் புத்தகத்தைப் படிப்பதன் மூலமாக கற்றுக்கொள்ளவே முடியாது. அல்லது வேறு முறைகள் மூலமாகவும் (any method) அறிந்து கொள்ள முடியாது. இவ்வாறாகவே கர்த்தர் எங்களுக்கு அதிக உண்மையாக (more real) மாறினார். நாம் கர்த்தருடைய பெலத்திற்காக எந்த நேரத்திலும், இடத்திலும், எந்த சூழ்நிலையிலும் அவரை நோக்கிக் கூப்பிடலாம். அவர் உண்மையுள்ள தேவன். அவர் அற்புதங்களை செய்கிற தேவன். (wonder working God) "நீ என்னை நோக்கி கூப்பிடு, நான் உனக்கு பதில் தருவேண்". என்னை நிரூபி (prove) இப்பொழுதே என்று தேவன் சொல்கிறார். உனது பாரங்கள் உனக்கு மிகவும் பளுவாக தெரிந்தால், விசுவாசத்தின் மூலமாக கர்த்தருடைய அதிகப்படியான (extra) பலத்தை உரிமை பாராட்டிக் கேள்.

ஒருவேளை தனிப்பட்ட பாரமாக இருக்கலாம் அல்லது குடும்ப சிக்கலான காரியங்களாக இருக்கலாம் அல்லது மற்ற எந்தவிதமான பளுவாகவும் இருக்கலாம். கர்த்தர் உனது பாரங்களையெல்லாம் உருட்டிப்போடுவார் (Roll away). தேவனுடைய வல்லமை உனக்குள் வருவதை நீ கண்கூடாக பார்க்கலாம். ஆனால், முதலாவதாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உனது சொந்த இரட்சகராக மாற வேண்டும். பொய்யான அனுபவங்களிலே நிலைத்திருக்க வேண்டாம். ஜீவனுள்ள இரட்சகரோடு உயிரோட்டமான அனுபவத்தை உடையவனாக இரு. இந்த நாட்களில் பல் மருத்துவர்கள் (dentalist) நேர்த்தியான பளபளப்பான பளிச்சிடும் வெண்மையான பற்களை செய்து பொறுத்துகிறார்கள். ஆனால் அவைகள் சரீரத்தின் உறுப்பல்ல. இரவிலே அந்த பற்கள் "என்னை வெளியே எடுத்துவிடு" என்று சொல்லும். அவைகள் ஓரளவிற்கு பயன்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை, ஆனால் அவைகள் உனது சரீரத்தின் உறுப்பல்ல. உனது சரீர ஜீவன் அதில் ஊடுருவிச் செல்வதில்லை. நமது ஜீவனுள்ள இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவோடு நாம் தனிப்பட்ட அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்த பொய் பற்களைப் போல் அல்ல. "அவரே என் இரட்சகராக இருக்கிறார். அவரே என் பெலன்" என்று உண்மையாக, நேர்மையாக சொல்லமுடியுமா? நமது அன்புள்ள தேவன் தாமே இந்த வார்த்தைகளை உனது அனுபவமாக மாற்றுவாராக.

6)என் கேடகம்: (My Buckler)

கர்த்தர் நமது பாதுகாப்பான கேடமாகவும் இருக்கிறார். சத்துருவின் தீ போன்ற தீமையான தாக்குதல்களை தடுத்து நம்மைக் காப்பாற்றும் கேடகமாக இருக்கிறார். எபே.6:16-ன் படி சத்துருவின் தந்திரமான தாக்குதல்களிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள ஆவிக்குரிய ஆயுதமாக "கேடகம்" பயன்படுத்தப் படுவதை பார்க்கிறோம். அதுவே விசுவாசம் என்னும் கேடகம்.

பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத் தக்கதாக நாம் பயன்படுத்தும் ஆயுதம். தேவனுடைய ஊழியக்காரர்கள், பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் தோல்வியை கொண்டுவர சத்துருவானவன் அனேக தந்திரமான ஆயுதங்களை

உபயோகப்படுத்துவான். அவர்கள் விசுவாசத்தை பெலவீனப்படுத்த முயற்ச்சிப்பான். அவர்களின் மனதிலே சந்தேகம், பயம் போன்ற காரியங்களை கொண்டுவந்து நம்மை சாய்க்கப் பார்ப்பான். ஆனால் விசுவாசம் என்னும் கேடகத்தின் உதவியினால் நாம் சத்துருவை கடிந்து கொண்டு சத்துருவின் சகல தாக்குதலிலிருந்தும் முழு வெற்றி பெற்று ஆனந்திக்கலாம். இவ்வாறாக நாம் நம்மில் அன்பு கூர்ந்து நமக்காக தம்மை தாமே ஒப்புக்கொடுத்தவரால் முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாகிறோம். மத்.18:18ன்படி அந்தகார ஆதிக்கங்களை கட்டி விசுவாசத்தின் மூலமாக வெற்றியை கொண்டாடலாம். அதே நேரத்தில் நமது விசுவாசம் நாளுக்கு நாள் பெலப்படும். உண்மையான, உறுதியான விசுவாசம் உள்ளவர்களாக மாற வேண்டுமானால் நாம் அக்கினிப் பரீட்சையின் ஊடாக செல்ல வேண்டியது அவசியம்.

வெளி.3:21-ல் "ஜெயம் கொள்ளுபவன்;... என்று கர்த்தர் சொல்கிறார். ஆனால், இங்கே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட அவருடைய சிங்காசனத்தில் அவருடைய விருப்பத்தின்படி நாம் உட்கார வேண்டுமானால் நமக்குள் உறுதியான விசுவாசம் உருவாக்கப்படவேண்டும் என்று இங்கே நினைவுபடுத்தப்படுகிறோம். வெளிப்.3:18-ல் கர்த்தர்.........." இங்கே புடமிடப்பட்ட பொன், நமது விசுவாசத்தைக் குறித்துப் பேசுகிறது. 1 பேதுரு.1:7-ன்படியாக..................." தங்கத்தை 1 டன் (1000 கிலோ) சோப்பு போட்டு சுத்தம் செய்தாலும் அது சுத்தமாகாது. அது நெருப்பினால் புடமிடபட்டுத்தான் சுத்திகரிக்கப்படவேண்டும். பொதுவாக பொற்கொல்லன் (Gold smith) இரண்டு விதமான நெருப்பை பயன்படுத்தி சுத்திகரிப்பான். தங்கத்திற்கு கீழேயும், நெருப்பு அதினால் தங்கத்தை உருக்கி (melt) நீல ஜீவாலைப் (Blue flame) போன்ற நெருப்பை தங்கத்தின் மேல் வைத்து சுத்திகரிப்பான். அந்த நீல ஜீவாலையை தொடர்ந்து ஊதி, ஊதி தனது முகம் தங்கத்தில் தெளிவாக தெரியும் வரையிலும் அதிலுள்ள அழுக்கை நீக்கிக் கொண்டே இருப்பான். கண்ணாடியில் முகம் தெரிவது போல தங்கத்தில் தனது முகம் தெளிவாக தெரியும் வரையிலும் சுத்தம் பண்ணிக்கொண்டே இருப்பான். அதே போல நாமும் இரண்டு விதமான போராட்டங்களின் உபத்திரவங்களின் ஊடாக கடந்து

செல்ல வேண்டும். அப்பொழுது மட்டுமே நமது வாழ்க்கையில் அப்படிப்பட்ட விசுவாசத்தைப் பெற முடியும். ஆசை, இச்சைகளால் உண்டாகும் உள்ளான போராட்டம் வெளியிலே உபத்திரவமும், பாடுகளும் மற்றும் பலவித சோதனைகளும் வரும். ஆனால், நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கும் ஐக்கியத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலில் பங்கு பெறுவது மூலமாக நாம் நாம் பூரண வெற்றியை பெற்றுக் கொள்ளலாம். அதை அவர் சாத்தானை முறியடித்து சிலுவையிலே நமக்காக சம்பாதித்து வைத்திருக்கிறார். அதன் மூலமாக நமது சகல தேவைகளும் சந்திக்கப்பட முடியும். இவ்வாறாக நாம் முற்றும் ஜெயம் கொள்ளுபவர்களாகிறோம். அதே சமயத்தில் நாம் விசுவாசத்திலும் உறுதிபடுகிறோம். அதோடு கூட நாம் அவருடைய சிங்காசனத்தில் அவரோடு கூட உட்காரும் தகுதியை (qualaified) பெறுகிறோம். அதே காரணத்திற்காகவே தேவன் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் வாக்குதத்தம் பண்ணின பிறகு 25 வருடங்கள் காத்திருக்கும்படி செய்து அதன் பிறகு அவர்கள் விசுவாசத்தில் பெலப்பட்ட பின்னர் ஒரு குழந்தையை கொடுத்தார். அவர்களுக்கு சரீர பிரகாரமான சகல நம்பிக்கையும் அற்றுப்போன பிறகு அவர்கள் தேவன் சர்வ வல்லமையுள்ளவர், அவரால் சகலத்தையும் செய்ய முடியும் என்றும், அவரால் செய்யமுடியாத காரியம் ஒன்றுமில்லை என்றும் பூரணமாக நம்பினார்கள். அதின்படியே ஒரு குழந்தையை பெற்றுக் கொண்டார்கள். நமக்கு உறுதியாக செயல்படும் (Active) விசுவாசத்தை தரத்தக்கதாக தேவன் சகல விதமான சூழ்நிலைகளையும் உபயோகப்படுத்துவார். அதனால் நாம் சகல சூழ்நிலைகளுக்காகவும், நாம் கடந்து வரும் சகலவிதமான பாடுகளுக்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவரே நமது கேடகமாக இருக்கிறார். நமது விசுவாசம் நெருப்பிலே புடமிட்ட பொன்னை போல பிரகாசிக்கும். அவர் உண்மையுள்ள தேவன். அவரது வாக்குத்தத்தத்தின் படியே 1 கொரிந்.10:13....................அப்படிப்பட்ட உறுதியான உயிருள்ள விசுவாசத்தின் மூலமாகவே நாம் முழுமையாக காணப்படாத காரியங்களை புரிந்து கொள்ள முடியும். மேலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம்

முழுமையாக நிறைவேறுவதை நமது வாழ்க்கையில் பார்க்க முடியும். விசுவாசம் தேவனுடைய இடைவிடாத ஐக்கியத்தை கொண்டிருக்க உதவி செய்கிறது. விசுவாசத்தின் மூலமாகவே நமக்கு முழு சுயாதீனமும், தைரியமும் அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உண்டான வல்லமை (efficacy)யின் நிமித்தமாக நமது சகல தேவைகளுக்கும் அவரை நோக்கி கூப்பிடவும் நாம் கேட்பதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாக அவர் கிரியை செய்வதை காணமுடியும். விசுவாசத்தின் மூலமாகவே நமது அனுதின நடத்தையில் (daily walk) கர்த்தரோடு மகிழ்ந்து களிகூரவும், அவரை முழுமையாக நம்பி நமக்கு வரும் சகல சோதனைகளையும், நமது பாரங்களையும் அவரோடு பகிர்ந்து கொள்கிறோம். அவரே நமது கேடகமாக இருப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நமது உறுதியான, உற்சாகமான (active) விசுவாசத்தைக் கொடுக்க அவர் சகல விதத்திலும் சரிசெய்ய முடியும்.

7) என் இரட்சணிய கொம்பு:(The Horn of my salvation):

இப்பொழுது தாவீது, கர்த்தர் என் இரட்சணிய கொம்பு என்று சொல்வதன் அர்த்தத்தை ஆராய்ந்து பார்க்கலாம். முதலாவது அவன் கர்த்தர் என் கன்மலை, கோட்டை, என் தேவன் என்று சொன்னது போலவே கர்த்தர் என் இரட்சணிய கொம்பு என்று சொல்கிறான். (சங்.18:3) அவன் படிப்படியாக முன்னேறி செல்கிறான், கர்த்தர் தன்னை காப்பாற்றினதன் - இரட்சித்ததன் நோக்கத்தை அதிக தெளிவாக பார்க்க ஆரம்பிக்கிறான். நாம் மனந்திரும்பின ஆரம்பத்தில் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதை மட்டும் நினைக்கிறோம். ஆனால், கர்த்தர் நம்மை இரட்சித்ததில் உயர்ந்த நோக்கம் உண்டு. தேவன் நமது சிருஷ்டி கர்த்தராக இருக்கிறார். அவர் ஒரு வார்த்தை மட்டுமே சொன்னார். "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது. சங்.33:6. அவர் நமது சிருஷ்டிகர், ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும்,

துரைத்தனங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. கொலோ.1:16,17. அவர் தாங்குகிறவர். 'சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்... எபி.1:3. அதே போல, அவரது ஒரே வார்த்தையினால் இந்த முழு பிரபஞ்சமும் (universe) காணப்படாமற் போகும். '..அவைகள் அழிந்து போகும்.." எபி.1:11. அவரது ஒரே ஒரு வார்த்தையினால் சகலமும் உண்டானது என்றால் அவரது மகத்துவமான வல்லமை எவ்வளவு பெரியது என்று நாம் கற்பனை செய்து பார்ப்போம். அவர் ஒரு வார்த்தை சொன்னார். அது அப்படியே ஆனது. ஆனால், அவர் நமது மீட்பராக இருக்கத்தக்கதாக அவர் தம்மைத்தாமே தாழ்த்தினார். தம்மையே பொறுமையாக்கினார். அவரது முழு சரீரமும் உடைக்கப்பட தம்மை ஒப்புக் கொடுத்தார். அவர் தமது கரங்களையும் கால்களையும் ஆணிகளால் அடிக்கப்படவும், அவரது முகம் துப்பப்படவும், அவரது சிரசின் மேல் முள் கிரீடம் வைக்கப்படவும் ஒப்புக் கொடுத்தார். மறுபடியும் நாம் நினைத்துப் பார்ப்போம். நமது இரட்சகராக மாற அவர் எவ்வளவு சக்தியை உபயோகப்படுதினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்பட்ட பிள்ளைகள், அவரோடு கூட சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் என்று கர்த்தருடைய வசனத்தில் பார்க்கிறோம்.

.....................என்று நாம் பார்க்க முடியும்.சில விசுவாசிகள் மரணம் அடையும் சமயத்தில் அதிகமான வலியோடும், வேதனையோடும் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்கள் மகிமைக்குள் பிரவேசிக்கும் நேரம் வந்தபொழுது உடனடியாக அவர்களது முகம் மாறுதல் அடைகிறது. அவர்களது முகத்தில் தேவனுடைய வெளிச்சம் பிரகாசிப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் அமைதியாக தூங்குவது போல காணப்படுவார்கள். "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?" என்று கேட்பது போலவே காணப்படும். இல்லை என்றால் மரிக்கும் மனிதன் இருளைத்தான் பார்ப்பான். அவனது முகமும் இருளடைந்து காணப்படும். 'மரணம்' என்ற வார்த்தை அவர்களுக்கு பயத்தையும், பயங்கரத்தையும் அவர்களுக்கு கொடுக்கும்.

அவர்களது இருதயம் இருளடையும், முகங்களும் பயம் நிறைந்து இருளடைந்தே காணப்படும். உயர்ந்த கோபுரங்கள் தங்கள் செல்வாக்கையும், உயர்வையும் காண்பிப்பதற்காக கட்டப்படும். ஜப்பானில் உள்ள டோக்கியோ நகரில் ஒரு உயர்ந்த கோபுரம் கட்டப்பட்டது. அது அவர்களது தொழில் பல விதங்களில் வளர்ச்சியுற்று அநேக கடைகள் (shops) பெருகி இருப்பதை காட்ட கட்டப்பட்டது. இன்றும் அந்த கோபுரத்தைக் காண அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்து அநேகர் சென்ற வண்ணமாகவே இருக்கிறார்கள். ஆனால் ஒரு விசுவாசிக்கு உயர் கோபுரம் என்று சொல்லும்பொழுது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கனியுள்ள வாழ்க்கைதான். நாம் மறுபடியும் பிறப்பதற்கு முன்பாக நாம் அனைவருமே, வெட்கமும், தோல்வியும் நிறைந்த கனியற்ற வாழ்க்கை வாழ்ந்தோம். நாம் வெட்ககரமான காரியங் களை செய்து நமது நேரத்தை வீணடித்தோம். நமது பணமும் பலமும் விரயமானது. ஆனால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது வாழ்க்கையில் வந்து அதை அபரிதமான கனியுள்ள (abundantly fruitful) வாழ்க்கையாக மாற்றினார். கனியற்று வெறுமையாக ஒரு காலத்திலே வாழ்ந்து கொண்டிருந்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களது வாழ்க்கை தோல்வியுற்றதாக இருந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது அவர்கள் வல்லமை நிறைந்த தேவனுடைய மக்களாக மாறி இருக்கிறார்கள். மற்ற இடங்களில் உயர்ந்த கோபுரங்கள் கப்பல்களுக்கு எச்சரிப்பு கொடுப்பவைகளாக வைக்கப்படும். கடலில் சில இடங்களில் மறைந்திருக்கும் பாறைகள் உண்டு. தென்னிந்தியாவில் உள்ள குயிலன் (quilon) என்ற இடத்திற்கு அருகில் கடலின் சில பகுதிகளில் மறைந்துள்ள பாறைகள் (hidden rocks) உண்டு. அதனால் அங்கே விளக்கு கோபுரங்கள் (light houses) கட்டி மிகவும் உயரத்தில் மிகவும் சக்தி மிக்க விளக்குகளை வைத்திருக்கிறார்கள். அவைகள் இரவு பகலாக எரிந்து கொண்டே இருக்கும். அதன் மூலமாக அந்த பக்கமாக வரும் கப்பல்கள் எச்சரிக்கப்படுகின்றன. இல்லையென்றால் அந்த மறைந்த பாறைகளில் மோதி அநேக கப்பல்கள் உடைந்து போகும். அதேபோல கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு எச்சரிப்புக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார். அதோடு கூட நம்மையும் மற்றவர்களுக்கு எச்சரிக்கும்படி செய்கிறார். 1935-ம்

ஆண்டு வட இந்தியாவில் உள்ள குவாட்டா (quatta) என்ற இடத்திற்கு சுவிசேஷ கூட்டங்கள் நடத்த நான் அழைக்கப்பட்டேன். அதற்கு முன்பாக 1934-ல் நான் அங்கே இருந்திருக்கிறேன். அதனால் நான் குவாட்டாவுக்கு போக வேண்டிய அவசியமில்லை என்று நினைத்தேன். ஆனால் நான் ஜெபித்தபொழுது "நீ போ" என்று கர்த்தர் சொன்னார்.நான் இரண்டாம் தரம், மூன்றாம் தரம் ஜெபித்தேன். அதே பதில் மறுபடியும் மறுபடியுமாக கிடைத்தது. எனவே நான் அங்கு சென்றேன். எனது நண்பர்களில் ஒருவர் திரு.லாக்வுட் என்பவர் அப்பொழுதுதான் புதிதாக பிறந்தவர்: அவருக்கும் இந்த குவாட்டா மக்கள் மேல் மிகவும் பாரம் இருந்தது. அவர் ஒரு ஆங்கிலேயர். (Mr.Lock Wood-English Man) அந்த குவாட்டா ஒரு சோதோம் கொமாராவைப் போன்றது. பாவ இச்சைகள் நிறைந்த அநேகர் சிலர் சிற்றின்பத்திற்காக அங்கே போவார்கள். எனது நண்பர் ஒரு இராணுவ சபை கட்டிடத்தில் (Military church building) மிகவும் சிரமப்பட்டு கூட்டங்களை ஒழுங்கு செய்தார். அந்த கட்டிடத்தில் அப்படிப்பட்ட நற்செய்தி கூட்டங்களை அவர்கள் நடத்தினதில்லை. அந்த இடம் நகரத்திற்கு நான்கு மைல் தூரமிருந்தது. அந்த கூட்டங்களுக்கு வர விருப்பமாயிருந்தவர்கள் நான்கு அல்லது மூன்று மைல் தூரம் நடந்தே வரவேண்டி இருந்தது. மே மாதம் 29 முதல் 31 வரை நாங்கள் கூட்டங்களை நடத்தினோம். தேவனுடைய கோபாக்கினை (The Wrath of God)யைப் பற்றி பேசும்படியாக தேவன் அதிக பாரத்தைக் கொடுத்தார். அநேகர் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பினார்கள். அதன்பிறகு நடு இராத்திரியிலே பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. அது ஒரு பயங்கரமான பூகம்பம் (Earth Quake) ஏறக்குறைய 58,000 பேர் 18 நொடிகளில் பூமிக்குள்ளே புதைந்து போனார்கள். உயிரோடு 92% மக்கள் மாண்டு போனார்கள். உயிரோடிந்தவர்களில் அநேகரின் எலும்புகள் முறிந்து போயின. அது மிக மிக துக்கமான காட்சியாக இருந்தது. ஆனால் விசுவாசித்தவர்களில் ஒருவருக்கு கூட எலும்பு முறிவு ஏற்படவில்லை. அனைவரும் காப்பாற்றப்பட்டார்கள். ஒரு பெண்ணைத்தவிர. அவள் ஒரு தாதியாக (nurse) ஒரு மருத்துவ மனையில் வேலைசெய்தாள். சரியான நேரத்தில் அவர்கள் மனந்திரும்பி காப்பாற்றப்பட்டார்கள். அப்படியாக நமது உயர்ந்த கோபுரமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுகூட பரிந்து பேசுகிறவர்களாக

ஜெபத்தில் பரிந்து பேசி மற்றவர்களுக்காக மன்றாடுவோமானால் நமது ஜெபத்தைக் கேட்டுக் கர்த்தர் இரட்சிக்கிறார். அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். அநேக ஆண்டுகளாக நாங்கள் இவைகளைப் பார்த்திருக்கிறோம். நமது நண்பர்களும் உறவினர்களும் இரட்சிக்கும்படியாக தேவன் நம்மை எச்சரித்து உபயோகப்படுத்துகிறார். அதன் மூலமாக நம்மையும் உயர்ந்த சிகரங்களாக உபயோகப்படுத்தி நமக்கும் இந்த சிலாக்கியத்தையும், கனத்தையும் கொடுக்கிறார். பிறகு இந்த உயர்ந்த சிகரங்கள் ஆகாய விமானங்களுக்கு இரவில் வெளிச்சம் கொடுக்க விமான நிலையங்களில் கட்டப்படுகின்றன. அவைகள் விமானங்களை எங்கே தரையிறங்க வேண்டும், எப்படி இறங்க வேண்டும் என்று காண்பிக்கின்றன. விமானம் தரையில் ஓடும் பாதை (run way) தெளிவாக தெரிய இரவில் வெளிச்சம் மிகவும் அவசியம். விமானி அந்த கோபுரத்திலுள்ள விளக்கை கவனித்து ஓடு பாதையில் சரியாக ஓட்டுவான், விமானி ஏதாவது தவறு செய்தால் அநேகர் ஆபத்துக்குள்ளாவார்கள். சில நேரங்களில் பனிமூட்டமோ அல்லது மேகம் கருப்பாகவோ காணப்படும். அந்த சமயங்களில் வெளிச்சம் மிகவும் அவசியம். அதனால் விமான நிலைய கோபுர விளக்குகள் கண்டிப்பாக தேவை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது கோபுர விளக்காக இருந்து நம்மை சரியாக பாதையில் நடத்துகிறார். அவர் நமக்கு "இந்த வழியில் போக வேண்டாம், இந்த வழியில் போ என்று தெளிவாக சொல்கிறார். இவ்வாறாக, நாம் அநேக தவறுகளிலிருந்து காப்பாற்றப்படுகிறோம். அதனால் நாம் அநேக விசுவாசிகளை பார்க்கிறோம். அவர்கள் மிக மிக துக்கமாக காணப்படுகிறார்கள். அவர்கள் விவாக காரியங்களில் தவறாக தேர்ந்தெடுக்கிறார்கள். நமது சிறந்த கோபுர விளக்கினால் ஆளப்படாதபடிக்கு தங்கள் மாமா, அத்தை, நண்பர்கள், உறவினர்கள் போன்ற மனிதர்களின் ஆலோசனை கேட்கிறார்கள். அதன் மூலமாக நடத்தப்படுகிறார்கள். நமக்கு வழிகாட்டும் நம்மை வழிநடத்தும் கோபுர விளக்காகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விட்டு தவறிப் போகிறார்கள். தற்பொழுது அநேக இடங்களில் கடிகார கோபுரங்களை காண்கிறோம். அந்த விதமான கடிகார கோபுரங்களை (clock towers) பார்த்து நாம் சரியான நேரத்தை கணக்கிடலாம். லண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் (west

minister) என்ற இடத்தில் மிக உயரமான மணிகோபுரம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த கடிகாரத்தை தூரத்திலிருந்தும் மக்கள் தெளிவாக காணமுடியும். அதைப் பார்த்து அநேகர் தங்கள் நேரத்தைக் கை கொண்டு வருவார்கள். அதனால் அவர்களின் நேரம் வீணாக்கப்படுவதில்லை. அது மிகப்பெரிய கடிகாரமாகும். அது போலவே நம் காத்தரால் அடிக்கடி எச்சரிக்கப் படுகிறோம். முதலாவதாக நமது நேரம் நமது கர்த்தருடைய கரத்திலே இருக்கிறது. நமது நேரத்தை நாம் வீணாக்க முடியாது. ஆனால் சொல்லவும் சோகமாக இருக்கிறது. அநேக விசுவாசிகள் தங்கள் நேரத்தை விரயம் (waste) செய்கிறார்கள். அநேகர் அதிகாலையிலே எழுந்திருக்கிறார்கள். ஆனால் அமைதியாக கர்த்தரோடு ஜெபத்தில் நேரம் செலவிடாமல் வீண் பேச்சு பேசி (gossiping) பின் அதிக நேரத்தை பல் துலக்குவதில் செலவிடுகிறார்கள். அதனால்தான் அவர்களுக்கு அந்த நாள் முழுவதும் தோல்வியும், தொந்தரவுமாக இருக்கிறது. அவர்கள் கவலையாலும், பயத்தாலும் நிறைந்து காணப்படுகிறார்கள். அதனால் காலையில் கர்த்தருக்காக நேரம் ஒதுக்கி அமைதியாக (quite) கர்த்தரை துதிக்கவும் ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் நேரத்தை செலவிடுகிறார்கள் அந்த நாள் முழுவதும் ஆசீர்வாதமாக, கனி நிறைந்ததாக கண்டு கர்த்தரில் மகிழ்வார்கள். அவர்களுக்கு தெய்வீக பெலம் கொடுக்கப்படும். தேவனே அந்த நாள் முழுவதும் நடத்துவார். நமது கர்த்தரே நமது கடிகார கோபுரம். அவர் அறிவுறுத்தப்படுகிறார். நேரம் கடந்து சென்று கொண்டே இருக்கிறது, நாம் நேரத்தை வீணாக்கக் கூடாது. வாழ்க்கை குறுகினது. நேரத்தை சிறப்பாக பயன்படுத்துங்கள் (best use of time) வீண் பேச்சு புறங்கூறுதல் போன்ற அற்ப (silly) காரியங்களால் நேரத்தை வீணாக்க வேண்டாம். நேரத்தை தேவமகிமைக்காகவும் மற்றவர்களின் நலனுக்காகவும் (benefit) லாபகரமாக பயன்படுத்துங்கள். அவர் அற்புதமான உயர்ந்த அடைக்கலம். ஆனால், அவர் உனது உயர்ந்த அடைக்கலமாக மாறி இருக்கிறாரா? பழைய காலங்களில் உயர்ந்த கோபுரங்கள் காவல் காப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டன. காவல்காரர்கள் (watchman) உயாந்த கோபுரங்கள் மேலிருந்து பார்த்து விரோதி வருவதை முன்னதாக அறிந்து அறிவிப்பார்கள். குதிரைகளின்

தேடல் போராயுதங்களோடு விரோதிகள் வருவதைக் கண்டு மக்களை எச்சரிப்பார்கள். சில நேரங்களில் சத்துருக்குள் நடு இரவில் திடீர் என்று வருவார்கள். அந்த நேரத்திலும் எச்சரிப்பை கேட்டு மக்கள் தங்களை யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொள்வார்கள். பிரதான கதவுகளை (main gate) மூடிவிடுவார்கள். தங்கள் ஆயுதங்களை ஆயத்தப்படுத்தி, எதிரியை எதிர்க்க தயாராவார்கள். அவ்வாறாக தங்களை ஆபத்திலிருந்து காத்துக்கொள்வார்கள். கர்த்தர் நமது காவல் கோபுரம். சாத்தானின் தாக்குதல்களை முன்னதாக அறியச் செய்கிறார். "ஜாக்கிரதையாக இரு, இல்லையானால் ஏதாவது சோதனையில் வீழ்ந்து போவாய். சில இடங்களில் காவல் கோபுரத்தின் முன்பகுதியில் சில வாசகங்களையும், போதனைகளையும் எழுதுவார்கள். அசோக தூணில் (Ashok Pillar) எழுதப்பட்டது போல அதைக் கடந்து போகும் மக்கள் அந்த வாசகங்களைப் படிப்பார்கள். நமது கர்த்தர் நமது காவல் கோபுரம். அவர் பரிசுத்தமான வாழ்க்கையை உடையவர். அவர் மூலமாக நாம் தேவனுடைய முழு நோக்கத்திற்கும் திட்டத்திற்கும் கொண்டுவரப்படமுடியும். மற்றும் சில இடங்களில் உயர்ந்த கோபுரங்கள் தாங்கள் வெற்றி பெற்ற போராயுதங்களையும் பார்வைக்காக வைப்பார்கள். அது வெற்றிக்கு அடையாளமாகவும், எதிரி எந்த விதமான ஆயுதங்களை உபயோகிக்கிறான் என்பதற்கு நினைவாகவும் அது காணப்படும். அவர்கள் எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டுமானால் எதிரி எந்தவிதமான போராயுதங்களைப் பயன்படுத்துகிறான் என்று அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். சாத்தான் உபயோகப் படுத்தும் ஆயுதங்களைப் பற்றி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவர்தான் நன்கு அறிந்திருக்கிறார். அவன் எந்த விதத்தில் வந்தாலும், கெர்ச்சிக்கிற சிங்கம் போல, பீறுகிற ஓநாய் போல, ஒளியின் தூதனைப் போல பெறும் வெள்ளத்தைப் போல குற்றம் சாட்டுபவனாக வேறு எந்த உருவத்தில் வந்தாலும் அவனை எப்படி தோற்கடிப்பது என்று கர்த்தர் அறிந்திருக்கிறார். நீங்கள் அவரிடம் சாதாரணமாக சென்று, "கர்த்தாவே என்னை இந்த சமயத்தில் இரட்சியும்" என்று ஜெபித்தால் போதும். அப்பொழுது நீங்கள் சொல்லலாம், கர்த்தர் என் உயர்ந்த அடைக்கலம், அவர் எனக்கு ஆசீர்வாதத்தை நிறைவாக தருகிறார் என்று முடிவாக சங்.18:2-ல் குறிப்பிடப்பட்ட எட்டு வார்த்தைகள்

நமது இருதயப் பலகையில் ஆழமாக எழுதப்படுவதாக. பிறகு, "கர்த்தாவே இந்த வார்த்தைகளை எனது அனுதின அனுபவமாக்கும்" என்று தொடர்ந்து ஜெபிப்போம். ஆனால் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், அவரே நமது கன்மலையாக மாற வேண்டும். நமது அஸ்திபாரமாக நமது பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும். இதுவே ஆரம்பம். நமது பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால் நமது கர்த்தர் நமக்கு உதவி செய்ய முடியாது. அவர் நமக்கு போதிக்க மாட்டார். நீங்கள் உண்மையாக நிச்சயமாக சொல்லமுடியுமா? உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று. என் பாவங்கள் மன்னிக்கப் பட்டது. அவைகள் கிழக்கிற்கும் மேற்கிற்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாக நீக்கப்பட்டுவிட்டது. அவைகள் ஒரு கார்மேகத்தைப்போல அகற்றப்பட்டது!" என்று உன்னால் உண்மையாக சொல்லமுடியுமா? இல்லை என்றால் இப்பொழுதே அவரது பாதத்தின் அருகில்வா, உண்மையான மனஸ்தாபத்தோடு மனந்திரும்பின இருதயத்தோடு உன் பாவங்களுக்காக மனம் வருந்து. அவரிடம் எளிமையான வார்த்தை இல்லை. "கர்த்தாவே, நீர் எனக்காக மரித்ததற்காக நன்றி, எனக்காக உமது ஜீவனையே கொடுத்ததற்காக நன்றி. எனது சகல தீட்டுகளையும் கழுவினதற்காக நன்றி சொல்கிறேன்" என்று சொல்லுங்கள். அப்படிப்பட்ட எளிமையாக ஜெபம் எளிய விசுவாசம் இந்த அனுபவத்தின் ஆரம்பத்தை உங்களுக்குக் கொடுக்கும். பிறகு நீயும் சொல்லுவாய் "கர்த்தாவே நீரே என் கன்மலை, என் கோட்டை, என் இரட்சகர், என் தேவன், என் பெலன், என் கேடகம், என் இரட்சண்ய கொம்பு, என் உயர்ந்த அடைக்கலம்" என்று. நமது கர்த்தர் அப்படியே செய்வாராக.

8. ஆகையால், எனக்கு பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்கள்.

9. அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார்.

10 கர்த்தர் உன்னை எல்லா தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

11. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

12. கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முற்கொண்டு என்றைக்கும் காப்பார்.

13. கர்த்தர் என் கன்மலையும் என் கோட்டையும் என் இரட்சகரும் என் தேவனும் நான் நம்பியிருக்கிற என் துருகமும் என் கேடகமும், என் இரட்சண்ய கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.

14. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளகைளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

15. நீங்களெல்லோரும் கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.

16. கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

17. இந்த காரியங்கள் நடந்த பின்பு கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்கு தரிசனத்திலே உண்டாகி, அவர் ஆபிரகாமே, நீ பயப்படாதே, நான் உனக்கு கேடகமும், உனக்கு மகா பெரிய பெலனுமாயிருக்கிறேன் என்றார்.

18. உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய

ஊழியக்காரரின் சுதந்திரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

19. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்.

20. நீங்கள் வலதுபுறமாய் சாயும்போதும், இடதுபுறமாய் சாயும்போதும் வழி இதுவே. இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.

* * *

கட்டுவோம் வாருங்கள்

[Come Let us build]

அறிமுகவுரை:-

சகோ.பக்த்சிங்

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோனிலே எழுபது வருடங்கள் சிறைவாசம் முடித்த பின்னர், கோரேஸ் அரசனின் ஆளுகையின் சமயத்தில் பாபிலோனிலே இருந்து எருசலேமுக்கு திரும்பினார்கள். (எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே, அவன்: பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணினான். (2 நாளா.36:22,23) (எஸ்றா 1:1-11) அவர்கள் அங்கு போய் பார்த்த பொழுது அங்கே எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறதையும், சிறையிருப்பில் மீந்திருந்த மக்கள் அங்கே மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறதையும் கண்டு, இந்த செய்தியை நெகேமியாவுக்கு அறிவித்தார்கள். என் சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்: அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்து தப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன். அதற்கு

அவர்கள், சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும், நிந்தையையும் அனுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறது என்றார்கள். (நெகே.1:2,3) அதை கேள்விபட்ட நெகேமியா அழுது துக்கத்தோடு ஜெபம் செய்ய ஆரம்பித்தான். உபவாசத்தோடும் கண்ணீரோடும் கர்த்தரை தேடினான். தேவன் இஸ்ரவேலராகிய தமது மக்களுக்கு செய்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தான் (3) (லேவி.26:39-44). முதலாவதாக தனது சொந்த பாவங்களை அறிக்கையிடுவதிலிருந்து ஆரம்பித்தான். பின்னர் தனது தகப்பனுடைய வீட்டாரின் பாவங்களையும் அறிக்கையிட்டான். இன்றைய நாளிலும் கூட அனேக விசுவாசிகளின் நிலைமையும் அதே போலத்தான் இருக்கிறது. நெகேமியாவின் நாட்களில் இருந்த இஸ்ரவேல் மக்களின் நிலைமையிலேயே இன்றும் அனேகர் காணப்படுகிறார்கள். தேவனுக்கு சரியான முக்கியத்ததுவத்தை கொடுக்காத காரணத்தால், அனேகர் வேதனையோடும், வெறுமையோடும் காணப்பட்டார்கள். தங்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய வீட்டிற்கும், கர்த்தருடைய வார்த்தைக்கும் முதலிடம் தர தவறினதினால், அவர்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள் (1கொரிந்.3:1-7) நாம் தேவனுடைய அதிகமான ஆசீர்வாதங்களை (Rich Blessings) அனுபவிக்க வேண்டுமானால் மெய் மனஸ்தாபத்தோடு நம்மை நாம் தாழ்த்தி, மனந்திரும்பி முழு இருதயத்தோடும் தேவனை கனம் பண்ணுவோமானால் மட்டுமே முடியும். நாம் தேவனுக்கு முன்பாக பயத்தோடும், நடுக்கத்தோடும் நமது பாவங்களை அறிக்கை செய்யும் பொழுது தேவன் நம்மை மன்னித்து நமது ஜெபங்களை கேட்டு நம்மை ஆசீர்வதிக்கிறார். (2நாளா.7:14) "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்." இந்த வார்த்தைகளின் அடிப்படையில், வாக்குதத்தங்களை நம்பி, நெகேமியா ஜெபிக்க ஆரம்பித்தான். விசுவாசிகளான நமக்கும் இதே தத்துவம் (Principle) தான் ஏற்றது. அவர்கள் தங்களை தாழ்த்தி, தங்கள் பாவங்களை அறிக்கை செய்து தேவனிடத்தில் ஜெபித்தால், அவர்கள் இழந்துபோன ஆதி அன்பை திரும்ப பெற்றுக்கொள்ள முடியும்.

அப்பொழுது தேவனும் அவர்களுக்குள்ளே கிரியை செய்து, ஜெபத்தின் ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் அவர்கள் மேல் ஊற்றுவார். (6) (நெகே.1:5-11) இவ்வாறாக நாம் பார்க்கும் பொழுது நம்மை நாம் தாழ்த்தி நமது குற்றங்களை அறிக்கை செய்து, தேவனிடத்தில் திரும்பினால் தேவனோடு உள்ள உறவை சரிசெய்து கொண்டால் மட்டுமே நமது வாழ்க்கை கனியுள்ள வாழ்க்கையாக காணப்படும். நாம் ஆரம்பத்தில் அனுபவித்த ஆசீர்வாதங்களை திரும்ப பெற்று அனுபவிக்க முடியும்.

(1) உங்கள் கைகளை திடப்படுத்துங்கள் (Strengthen your hands):

(அ) **தலைவனை தயார் செய்தல்:** தேவன் முதலாவதாக நெகேமியாவின் வாழ்க்கையில் கிரியை செய்து அவனை ஆயத்தப்படுத்தினார். பின்னர் அவன் மூலமாக அனேகர் எழுச்சி அடைந்தார்கள். தேவ மக்களின் வரலாற்றில் தேவன் எப்படியாக தமது வேலையை நடப்பிக்க தமது உண்மையுள்ள ஊழியர்களை ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பினார் என்று, மீதியான தமது மக்களை (Ramnant) புதுப்பித்து பயன்படுத்தினார் என்றும் பார்க்கிறோம். கர்த்தர் தமக்கு உண்மையாக உள்ள (faithfull) ஒரு சிலரைக் கொண்டு மகத்தான காரியங்களை தமது மக்களுக்காக எப்பொழுதும் நிகழ்த்துகிறார். நம் ஒவ்வொருவருவரையும் அப்படிப்பட்ட உண்மை உள்ளவர்களாக, அவரது வேலையில் உபயோகப்படுத்தப்படும் வகையில் பங்குள்ளவர்களாக இருக்க விரும்புகிறார். தமது தெய்வீக நோக்கத்தையும், திட்டத்தையும் நிறைவேற்ற உண்மையாக உள்ளவர்களை தேடுகிறார். தேசம் வெறுமையாக கிடக்கிறது என்றும், அதின் வாசற்கதவுகள் (Gates) சுட்டெரிக்கப்பட்டது என்றும் கேள்விப்பட்டு நெகேமியா மிகவும் வருந்தினான். (நெகே.2:3) தேவ மக்களின் பரிதாபகரமான நிலைமையையும், ஆவிக்குரிய மோசமான (Anaemic) நிலையையும் பார்க்கும்பொழுது தேவனுடைய வேலையில் அதிக அக்கறையுள்ளவர்கள் வருத்தப்படுவார்கள். இந்த நாட்களில் உலகின் அநேக பகுதிகளில் ஆவிக்குரிய குழந்தைத்தனமானவா களையும் (Spiritual infancy) விசுவாசத்தில் நலிவடைந்தவர்களையும் (Leaness) அதிகமாக பார்க்கிறோம். தேவன் தமது வல்லமையை நமக்கு வாக்கு பண்ணி இருக்கிறார். அதினிமித்தமாக நாம் நமது வாழ்க்கையில் அதிக கனியுள்ளவர்களாக திகழ முடியும். அவரது விருப்பத்தின்படியும், சித்தத்தின்படியும் நாம் செயல்படுவோமானால்,

தேவ மக்களின் துக்ககரமான நிலைமைக்காக மனம் வருந்தி கரிசனையோடு அவரது சித்தத்தை செயல்படுத்துகிறவர்களாக நாம் இருப்போமானால் அவரது வல்லமை அதிகமாக நமக்கு கொடுக்கப்படும். **"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'.** (யோ.14:12) (வெளி.1:18) **"மரித்தேன் ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவரா யிருக்கிறேன்"** (வெளி.1:18) நேற்றும் இன்றும் என்றும் மாறாத ஜீவனுள்ள இரட்சகர் நமது ஆண்டவர். **"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"** (எபி.13:8) நாம் தேவனுக்கு கீழ்படிய தவறுவோமானால், தேவனுடைய வார்த்தையின்படிநடக்காமல் இருப்போமானால், துன்பமும், தோல்வியும், வெறுமையுமே நமது வாழ்க்கையாக இருக்கும். ஆவிக்குரிய வறட்சியும், வளர்ச்சி குன்றிய நிலையுமே நமது அனுபவமாக இருக்கும். இஸ்ரவேல் மக்கள் பாபிலோனிலே சிறைப்பட்டவர்களாக, சிறு கூட்டமாக இருந்தபடியினால் தாங்கள் எருசலேமுக்கு திரும்பிப் போவோம் என்ற நம்பிக்கை எள்ளளவும் இல்லாதவர்களாகவே காணப்பட்டார்கள். ஆனால், தேவன் தமது ஊழியக்காரனாகிய எரேமியாவிடம் கொடுத்த வாக்குறுதியை காத்துக்கொண்டார். இவ்வாறாக, புறஜாதி இராஜாவாகிய கோரேஸ் மூலமாக அவர்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்ல தருணம் கொடுக்கப்பட்டது. (2 நாளா.36:23) அந்த அறிவிப்பு வெளியிடப் பட்டது. கோரேஸ் மூலமாக வெளியான அறிவிப்பிற்கு பிறகு அவர்கள் எருசலேமிற்கு திரும்பினர். அவர்கள் சார்பாக தேவனுடைய தீர்க்கதரிசனம் நிறைவேறியதை அவர்கள் இறுதியாக பார்த்தார்கள். நடக்கமுடியாத காரியம் நடந்தேறியது.

(ஆ) நம்பி கீழ்படிதல் : (Trusting and Obeying) கோரேஸ் இராஜா மூலமாக வெளிப்படையான அறிவிப்பு வெளிவந்த போதிலும் அநேகர் அங்கேயே பாபிலோனில் தங்கியிருந்தனர். ஏனென்றால், அவர்களால் நம்ப முடியவில்லை. அவர்கள் விசுவாசிக்க விருப்பம் இல்லாதிருந்தார்கள். அதே போல நாமும் தேவனை விசுவாசிக்க தவறுவோமானால் தேவன் நம் மூலமாக

கிரியை செய்ய முடியாது. தேவனுடைய வாக்குத்தத் தங்களை உரிமை பாராட்டி விசுவாசிக்காமல் இருப்போமானால் தேவன் நமக்குள் கிரியை செய்ய மாட்டார். விசுவாசிகளான நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேல் உறுதியான நம்பிக்கை வைக்க வேண்டியது அவசியம். நமது தேவைகள் சந்திக்கப் படும்படியாக தேவனுடைய வாக்குத்தத் தங்களை உரிமை பாராட்ட வேண்டும். அநேகர் தங்கள் வேதத்தை நம்புவதாக சொல்லுவார்கள். ஆனால், வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படி செய்யமாட்டார்கள். அவர்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள், சடங்குகளை அதிகமாக பின்பற்றுவார்கள். ஒருபக்கம் தேவனை நம்புவதாக சொல்லுவார்கள். ஆனால், தங்களுக்கு பணத்தேவை வரும்போது பிச்சை எடுக்க ஆரம்பித்து விடுவார்கள். சிலர் அற்புத சுகம் அளிக்கும் கூட்டங்களை நடத்துவார்கள். கர்த்தர் சுகமளிக்கிறார் என்று அறிவிப்பார்கள், தங்கள் மூலமாக தேவன் குணமாக்குகிறார் என்று நம்பிக்கையோடு சொல்லுவார்கள். ஆனால், பணத்தேவை ஏற்படும்பொழுது அதே நம்பிக்கையை கடைபிடிக்க மாட்டார்கள். அப்பொழுது மனிதர்களை பார்ப்பார்கள். அவர்கள் கொடுப்பார்கள் என்று நம்புவார்கள். தேவனை நம்புகிறோம் என்று சொல்லுகிறவர்கள் மனிதர்களிடம் எதிர்பார்ப்பார்கள். சுகமளிக்கிற கர்த்தர் பணத்தேவைகளையும் சந்திக்க முடியாதோ? அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு உடனடியாக முழுவதுமாக கீழ்படியாமல் இருக்கிறார்கள். தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் நாம் கீழ்படியும்போது மட்டுமே முழுமையாக உடனடியாக கீழ்படிந்தால்தான் தேவன் நம் சார்பாக கிரியை செய்வார், அதை நாம் கண்கூடாக காணமுடியும். **நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்)** (யோ.15:7) இதன்படி நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நாம் நிலைத்திருக்க வேண்டும். அவரது தலைமைத்துவத்துக்குள் அடங்கியிருக்க வேண்டும். ஓவ்வொரு காரியத்திலும் அவருக்கு கீழ்படிந்து இருப்பதன் மூலமாகவே அவரால் நாம் ஆளப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு அவராலேயே படிப்படியாக நமது வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையில் நடத்தப்படுவோம். நாம் சகல காரியத்திலேயும் அவருக்கு கீழ்படிய வேண்டும். அப்பொழுது மட்டுமே அவரது வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை காண

முடியும். உதாரணமாக (12) (யோவான்.15:7) இவ்வாறாக நெகேமியா கர்த்தரை விசுவாசித்து கீழ்படிந்தான். கர்த்தரும் அவனது சார்பாக கிரியை செய்ய ஆரம்பித்தார்.

(இ) ஜெப வாழ்க்கை: அநேகர் தங்கள் விசுவாசத்தைக் குறித்து பெருமையாக அறிவிப்பார்கள். ஆனால், அவர்களுக்கு துன்பம் வருமானால் அழுவார்கள். அவர்களுக்கு பணத்தேவை ஏற்படும்பொழுது பலவிதமான தந்திரமான வழிகளில் அறிவிப்புகளையும் ஜெப அறிக்கைகளையும் அனுப்புவார்கள். சில நேரங்களில் அவர்களே சத்தமாக தங்கள் தேவைகளை ஜெபத்தில் தெரியப்படுத்தி ஜெபிப்பார்கள். ஆனால், நெகேமியாவின் காரியத்தில் அந்த விதமான எந்த ஒரு சிறிய அறிவிப்பையும் நாம் பார்க்கவே முடியாது. அவன் முதலாவதாக ராஜாவிடம் எந்த வேண்டுதலையும் முன் வைக்கவில்லை. அவன் அந்த அரசாங்க ஊழியர்களிலேயே பிரதானமானவனாக இருந்த போதிலும், அவனுக்கு எல்லாவிதமான சூழ்நிலைகளும் சாதகமாக இருந்தும் அவன் கேட்பதெல்லாம் கிடைக்கும் என்ற நிலையிலும், நெகேமியா முதலில் கர்த்தரிடம்தான் முறையிட்டான். தனது தேவையை இந்த பூமியின் அரசனிடம் சொல்வதற்கு முன்பாக, பரலோகத்தின் தேவனிடம் ஜெபம் செய்து தனது தேவையை தெரியப்படுத்தினான். தனது வேண்டுதலை சரியான முறையில் தெரியப்படுத்த தேவையான ஞானத்தை தேவன் தரவேண்டும் என்று கர்த்தரிடம் ஜெபித்தான். ராஜாவுக்கு முன்பாக தான் பேசவேண்டிய ஒவ்வொரு வார்த்தைக்காகவும் தேவனிடம் மன்றாடினான். இவ்வாறாக நெகேமியா தேவனையே முழுமையாக சார்ந்து கொண்டான். அதன் விளைவாக ராஜா அவனை தேவனுடைய மனிதன் என்றும், அவன் பேசும் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளே என்று அறிந்து கொண்டான். நெகேமியா தனக்கு விடுப்பு (Leave) வேண்டும் என்றுதான் ராஜாவிடம் வேண்டினான். அரசாங்க அலுவலர்கள் தங்களுக்கு விடுப்பு வேண்டும்போது எழுதும் விண்ணப்பத்தை போலத்தான் அவன் கேட்டான். "ராஜாவைப் பார்த்து: ராஜாவுக்கும் சித்தமாயிருந்து, அடியேனுக்கு உமது சமூகத்தில் தயை கிடைத்ததனால் என் பிதாக்களின் கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி, யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக் கொள்கிறேன் என்றேன்" (நெகே:2:5). அந்த நேரத்தில் நெகேமியாவுக்கு முன்பாக இருந்த வேலைகளைச் செய்வதற்கு அதிகமான பணம் அவசியமாக

இருந்தது. அதனால், அவன் மிகுந்த பொருளாதார நெருக்கடியில் இருந்தான். அவன் ராஜாவினிடத்தில் பணத்தேவைக்காக வேண்டி இருக்கலாம், எளிதாகவே கேட்டிருக்கக்கூடும். ராஜாவும் கூட அவன் கேட்பதை எல்லாம் அதிக அளவில் கொடுக்கக் கூடியவனே. ஆனால், நெகேமியா தேவனுடைய வேலைக்காக ராஜாவை சார்ந்திருக்க விரும்பவில்லை. அதனால், இங்கே நாம் பார்ப்பது என்னவென்றால் ராஜா அவனுக்கு எருசலேம் செல்வதற்கு அனுமதி கொடுத்தது மட்டுமல்லாமல் (2:6) அவனது பாதுகாப்புக்காகவும் மற்றும் சகல வசதிகளையும் ராஜா செய்து கொடுத்ததை பார்க்கிறோம். "....என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தபடியால் ராஜா அவைகளை (**அவனுக்குத் தேவையானவைகளை**) எனக்கு கட்டளையிட்டார். அப்படியே நான் நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாதிபதிகளிடத்துக்கு வந்து, ராஜாவின் கடிதங்களை அவர்களுக்குக் கொடுத்தேன் ராஜா என்னோடே கூட ராணுவச் சேர்வைக்காரரையும், குதிரை வீரரையும் அனுப்பியிருந்தார். நெகே.2:8,9 இதன் மூலமாக நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், நாம் ஏதாவது ஒரு தேவைக்காக பாரத்தோடு தேவனிடம் முழங்கால்படியிட்டு ஜெபிப்போமானால் நாம் அவரால் ஆட்கொள்ளப்பட்டு வழிநடத்தப்படுவது மட்டுமல்ல, நமது வெற்றிக்கும், பாதுகாப்புக்கும் தேவையான சகல காரியங்களையும் தேவனே நமக்கு தருவார். இத்தகைய சிலாக்கியத்தை நாம் கர்த்தரிடத்தில் பெற்றிருக்கிறோம். அதனால், நெகேமியா தான் செய்யப்போகிற வேலைக்கு வேண்டிய சகலவற்றோடும் எருசலேமுக்குச் சென்றான்.

(2) ஒன்றுபட்டு உழைப்போம் (Strive together):

(அ) நிலைமையை அளந்தறிதல் (Surveying the Conditions): இடிந்த சுவர்களையும், உடைந்த மதில்களையும், வெந்துபோன கதவுகளையும் சரிசெய்வதற்கு முன்பாக அவைகள் எவ்வாறு இருக்கின்றன என்று கணக்கிட்டான். எப்படி அவைகள் உடைக்கப்பட்டன என்று அளவிட்டுப் பார்த்தான். தனியாக சென்று, சுற்றித்திரிந்து நிலமையை ஆராய்ந்து அறிந்து கொண்டான். நாமும் தேவனுடைய வீட்டை மறுபடியும் சீர்படுத்த முயற்சிக்கும பொழுது முதலாவதாக என்ன காரணத்தினால் இந்த சீர்கெட்ட நிலமை ஏற்பட்டது என்று கண்டு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இந்த நாட்களில் அனேக இடங்களில் விசுவாசிகளும்,

கிறிஸ்துவ தலைவர்களும் உயிர் மீட்சி கூட்டங்கள் மற்றும் எழுப்புதல் கூட்டங்களை நடத்துகிறார்கள். ஆனால் ஏன் இந்த வெறுமையான, மலட்டுத்தன்மை மக்கள் மத்தியில் காணப்படுகிறது என்ற உண்மையை ஆராய்ந்து அறியாமலேயே வீனாக செயல்படுகிறார்கள். "நாங்கள் பாவம் செய்தோம்" என்று பழக்க வழக்கமாக ஜெபிப்பதன் மூலம் தேவன் கிரியை செய்ய மாட்டார். கடந்த கால விளைவுகளை எல்லாம் கண்டுகொள்ளாமல், அவைகளை மறந்தவர்களாக தாங்கள் நினைத்ததை சாதித்து விட்டோம் என்று எண்ணி ஏமாந்துபோய்விடுகிறார்கள். ஒரு நோயாளி தனது நோயையும் அதன் தன்மையையும் சரியாக மருத்துவரிடம் சொல்லாமல் எனக்கு உடல்நிலை சரியில்லை என்று மட்டுமே சொன்னால், எப்படி அவர் குணமாக்கப்பட முடியும்? மருத்துவரிடம் தனது நோயின் முழு காரணத்தையும், விளைவையும் தெளிவாக சொன்னால் மட்டுமே அவர் அதற்கேற்ற மருத்துவத்தை செய்வார். அது என்ன வியாதி, எப்படி வந்தது என சரியாக ஆராய்ந்து அறிந்து அதன்படி சரியான மருத்துவம் செய்தால்தான் நோய் குணமடையும். அதேபோல் இந்த கிறிஸ்தவ விசுவாசிகளும் தங்கள் தாழ்வான நிலைக்கு காரணம் என்ன என்று சரிவர கண்டு அறியாமல் அவர்கள் மத்தியில் எழுப்புதல் வரவேண்டும் என்று எதிர்பார்த்தால், அதற்காக ஜெபம் செய்தால் எப்படி உயர் மீட்சி (Revival) உண்டாகும்? மரித்துப்போன, மறத்துப் போன நிலைமைதான் காணப்படும். எருசலேமின் மதில்களின் இடிபட்ட நிலைமை இஸ்ரவேல் மக்களின் பாவத்தினால் உண்டானது. அது வெளிப்படையாக (Frankly) அறியப்பட்டது. அநேக வருடங்களாக தேவன் தமது அன்பின் நிமித்தமாக தமது தீர்க்கதரிசிகளைக் கொண்டு எச்சரித்து வந்தார். ஆனால், அவர்கள் தொடர்ந்து தேவனுக்கு கீழ்படியாமல் இருந்தார்கள். தேவன் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தாலும், அவர்கள் மூர்க்கத் தன்மையோடு கீழ்படியாமல் இருந்தார்கள். அதிகமான தருணங்களைக் கொடுத்தப்பிறகு தேவன் பாபிலோனின் இராஜாவாகிய நெபுகாத் நேச்சரை அனுப்பினார். அவன் அவர்களின் தேசத்தை அழித்துப்போட்டான். மதில்கள் இடிக்கப்பட்டன. கதவுகள் சுட்டெரிக்கப்பட்டன. இந்த நாட்களிலும் கூட அதே நிலையை நாம் பார்க்கிறோம். விசுவாசிகளுக்கு மத்தியில் வெறுமை, கனியற்ற தன்மை காரணம் அவர்கள் தேவனுக்கு கீழ்படிவதை விட்டு சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், பழக்கவழக்கங்களையும், பண்டிகைகளையும் கொண்டாடுகிறார்கள்.

அவர்கள் தங்கள் வீழ்ச்சிக்கான மூலக்காரணத்தை கண்டறியாமல் தவறிப் போகிறார்கள். ஒரு மனிதன் உறுதியான வீட்டைக் கட்ட வேண்டுமானால், அசையாத அஸ்திபாரத்தை (Strong Foundation) போட வேண்டியது அவசியம். ஆவிக்குரிய காரியத்திலும் நாம் ஆழமாக தோண்டி கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போடவேண்டும். அப்பொழுதுதான் அது பலத்தக் காற்றுக்கும் புயலுக்கும் பெரும் வெள்ளத்திற்கும் அசையாமல் நிற்கும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். கர்த்தரே கற்பாறையாக இருக்கிறார். பாறையாகிய அவர்மீதுதான் நாம் கட்ட வேண்டும். நாம் கட்டும் ஆவிக்குரிய கட்டிடம் அவருடைய ஆலோசனையின் படியும், பரலோக சித்தத்தின்படியும், பரம திட்டத்தின்படியும், பரலோக ஞானத்தின்படியும், பரலோக வல்லமையோடும் அவரது போதனையின் படியே கட்ட வேண்டும் (எபே.2:20) "அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" என்று வாசகிக்கிறோம். அது போலவே, விசுவாசிகளான நாம் ஆவிக்குரிய வீட்டை அசையாத ஆவிக்குரிய அஸ்திபாரத்தின்மேல் கட்டவேண்டும். அநேகர் இந்த முதலாவது விதியை (First Law) மறந்துவிட்டு மணலின் மேல் தேவனுடைய வீட்டைக் கட்டுகிறார்கள். தேவனிடத்திலிருந்து எந்த உதவியும் இல்லாத காரியங்களின் மேல் கட்டுகிறார்கள். அதனால்தான் எல்லாம் தூள் தூளாக உடைந்து போகிறதைப் பார்க்கிறோம். (எபி.12:26) "அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப் பண்ணிற்று. இன்னும் ஒரு தரம் நான் பூமியை மாத்திரம் அல்ல வானத்தையும் அசையப் பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்" என்ற கடும் எச்சரிப்பை கர்த்தர் கொடுக்கிறார். அவர் மனிதனால் உண்டாக்கப்பட்ட (Man Made) தலைமை, பழக்க வழக்கங்கள், பாகுபாடுகள், பிரிவினைகள் மற்றும் அனைத்தையும் அவர் அசைக்கப்போகிறார். அப்படி இருக்கிறபடியினால், நாம் எதை செய்தாலும் தேவனுடைய வார்த்தையை ஆதாரமாக கொண்டுதான் செய்ய வேண்டும். நமது வேலைகள் உறுதி உள்ளதாக நிலைத்திருப்பதாக சகல சோதனைகளுக்கும் நிற்க வேண்டுமானால் எதிர்ப்பான சக்திகளுக்கு தாக்குப்பிடித்து உறுதியாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், கர்த்தருடைய வார்த்தையை மையமாகக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்.

(ஆ) நிலைமையை எதிர்கொள்ளுதல் (Facing the conditions): நகரத்தின் நிலைமைக் கவலைக்கிடமாகக் காணப்பட்டதினால் நெகேமியா மற்றவர்களுக்கும் நிலைமையை அறிவித்தான். "பின்பு நான் அவர்களை நோக்கி எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடப்பதையும் நாம் இருக்கிற சிறுமையையும் பார்க்கிறீர்களே் நாம் இனி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி (நெகே.2:17) இதை கேட்ட அநேகர் அவனோடு சேர்ந்து வேலை செய்ய முன்வந்தனர். வேலை ஆரம்பிக்கப்பட்டது. தேவனுடைய கரம் அவனோடு நன்மைக்கேதுவாக இருக்கிறது என்றும் அவர்களுக்கு சொல்லி இருந்தான். (வ.18) இந்த நாளிலும் கூட "தேவனுடைய கரம் இவர்மேல் இருக்கிறது" என்று சாட்சியாக சொல்லத்தக்கவர்கள் அனேகர் தேவைப்படுகிறார்கள். (அப்படிப்பட்டவர்களை தேவன் தாமே எழுப்பும்படி நாமும் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்). தேவனுடைய கரம் நெகேமியா மேல் இருப்பதைக் கண்ட மக்கள் அவனோடு சேர்ந்து தேவனுடைய வேலையை செய்ய ஆரம்பித்தார்கள். ஓரோனியன் (Horonite) ஆகிய சன்பல்லாத்தும், அம்மோனியனாகிய தொபியாவும், அரபியன் (Arabian) ஆகிய கேஷேமும் இவைகளை கேள்விப்பட்டு கேலியாக சிரித்தார்கள். அவர்களை ஏளனம் பண்ணி நிந்தித்தார்கள். இதன் மூலமாக நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நாம் தேவனுடைய வேலைக்கு நம்மை ஒப்புகொடுப்போமானால் தேவனுடைய வேலையில் ஏதாவது பங்கெடுப்போமானால் நாம் பரிகாசம் பண்ணப்படுவோம். தேவனுடைய சத்துருக்கள் நம்மை பகைப்பார்கள். அதுதான் பிசாசு பயன்படுத்தும் முதலாவது ஆயுதம். நம்மை பயமுறுத்தி, சோர்ந்து போகப்பண்ணுவான். நெகேமியாவின் நாட்களில் இந்த மூன்று பேரும் அந்த நகரத்தில் மிகவும் பிரபலமானவர்கள். நாமும் சன்பல்லாத், தொபியா போன்றவர்களால் எதிர்க்கப்படுவோம். ஒவ்வொரு நாடுகளிலும் அப்படிபட்டவர்கள் தேவனுடைய வேலையை மிகுந்த வல்லமையாக எதிர்க்கிறார்கள். நாம் தேவனுடைய பெலத்திற்காக ஜெபிக்காவிட்டால் அப்படிப்பட்டவர்களால் நாம் எளிதாக தடைபடுத்தப்படுவோம். தேவனுடைய எந்தவிதமான வேலையாக இருந்தாலும் அதை நாம் தேவனுக்காக செய்வோமானால் நம்மை சோர்ந்து போக பண்ணத்தக்கதாக அவர்கள் பரிகாசம் செய்வார்கள்.

நெகேமியா இந்தவிதமான தடைகளை எல்லாம் ஜெபத்தின் மூலமாக வெற்றிக் கொண்டான். அவர்களின் பரிகாசத்தை குறித்து எந்தவிதமான கவனமும் அவன் செலுத்தவில்லை. தனது மனதை தேவன் மேலேயே நிலையாக வைத்திருந்தான். அதனால்தான் அவனால் தைரியமாக சொல்ல முடிந்தது. "அதற்கு நான் மறுமொழியாக: பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தை கைகூடிவரப் பண்ணுவார் அவருடைய ஊழியக்காரர்களாகிய நாங்கள் எழுந்து கட்டுவோம் உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை, பாத்தியமுமில்லை, உங்கள் பேர் விளங்க ஒன்றும் இல்லையென்று அவர்களுடனே சொன்னேன்" (2:20) மறுபடியும் பிறக்காதவர்கள் உலக பிரகாரமான சிந்தை உள்ளவர்கள் (Wordly Minded) மிகவும் புத்திசாலிகளாக காணப்படுவார்கள். ஆனால், அவர்களுக்கு தேவனுடைய வேலையில் எந்தவிதமான பங்கும் இல்லை. ஏன் என்றால் அவர்கள் தேவனால் அழைக்கப்படவில்லை. அனேகர் தேவனுக்கு கீழ்படிகிறார்கள். ஆனால், கஷ்டம் வரும்போது தேவன்மேல் நம்பிக்கை வைப்பதைவிட்டு, பணக்காரர்களையும் செல்வாக்கு உள்ளவர்களையும் நாடிப்போகிறார்கள். தேவனுடைய மக்கள் ஒருபோதும், எந்த சூழ்நிலை வந்தாலும் உலக மக்களையோ, தேவனற்றவர்களையோ சார்ந்து கொள்ளக்கூடாது. நாம் தேவனுக்காக உறுதியான தீர்மானம் எடுக்கும்போது, நம்மை பயமுறுத்தி, தடை செய்பவர்களையும் நமது சத்துருக்களையும் ஜெபத்தின் உதவியினாலும், தேவனுக்கு முற்றிலுமாக கீழ்படிவதன் மூலமாகவும் நாம் வெற்றி கொள்ளலாம். அவர்களை தோல்வியுற செய்யலாம். அப்படியாக நெகேமியா தேவனை சார்ந்து கொண்டதன் மூலமாக எதிர்ப்புகளை சமாளித்தது மட்டுமல்லாமல் சத்துருவையும் தோற்றுப்போக செய்தான். நாம் தேவனுடைய வார்த்தைக்கு மட்டும் கீழ்படிவதன் மூலமாக நமது ஆவிக்குரிய வெறுமை, மலட்டுத்தன்மை எப்படியாக நீக்கப்படுகிறது என்று தெளிவாக பார்த்தோம். எருசலேமின் இடிக்கப்பட்ட சுவர்களும், எரிக்கப்பட்ட கதவுகளும் தற்பொழுதுள்ள தேவனுடைய மக்களின் சீர் அழிந்த நிலைமையைக் காட்டுகிறது. இந்த நிலைமை உலக முழுமையிலும் பரவிக் காணப்படுகிறது. தேவன் அனேக தீர்க்கதரிசிகளை அனுப்பி இஸ்ரவேல் மக்களை எச்சரித்தார். ஆனால் அவர்கள் தண்டிக்கப்படும்வரையிலும் முரட்டாட்டம்

பண்ணி, முழுமையாக கீழ்படியாமல், அவரது வார்த்தைக்கு விரோதமாக செயல்பட்டார்கள். அவரது எச்சரிப்பின்படியே பாபிலோனின் ராஜாவாகிய நெபுகாத் நேச்சார் மூலமாக எருசலேமின் எல்லா மக்களும் சிறைக் கைதிகளாக கொண்டு போகப்பட்டார்கள். எருசலேமின் மதில்கள் இடிக்கப்பட்டது. கதவுகள் சுட்டெரிக்கப்பட்டன. தேவன் சொன்னபடியே, தமது தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னறிவித்தபடியே எழுபது வருடங்களுக்குப் பின்னர் அவர்கள் திரும்பி வரும்படி செய்தார். அவர்கள் தேவனுடைய உடன் வேலை ஆட்களாக இருந்து எருசலேமின் எரிந்துபோன கதவுகளையும் இடிக்கப்பட்ட சுவர்களையும் திரும்ப கட்டினார்கள். அதே போலவே விசுவாசிகளாகிய நாமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட ஒப்புரவாக்கப்பட்டவர்களாக, அவரது உடன் வேலை ஆட்களாக இருக்கிறோம். எழுபது வருட சிறையிருப்புக்குப்பின் திரும்பி வந்த இஸ்ரவேல் மக்களை போலவே நாமும் இருக்கிறோம். விசுவாசிகளாகிய நமக்கு கொடுக்கப்பட்ட பல பெயர்களில் "தேவனுக்கு உடன் வேலையாட்கள்" (1 கொரி. 3:9) என்ற ஒரு பெயரும் உண்டு. 2 கொரி.6:1-ல் வாசிக்கிறோம் "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்". தேவன் விரும்பி இருந்தால் மற்ற மக்களைக் கொண்டு எருசலேமின் மதில்களை திருப்பி எடுப்பித்திருக்கலாம் அல்லது அதே கோரேஸ் ராஜா மூலமாக கூட கட்டி இருக்கலாம். அவன் தனது சேனைகள் மூலமாக கூட கட்டிட சாமான்களைக் கொண்டுவந்து கட்டி இருப்பான். அல்லது ராஜாவாகிய ஆகாஸ் வேருவை போன்றவர்களால் வெகு விரைவாக கட்டி இருக்கலாம். ஆனால், அவர் அப்படியெல்லாம் செய்யவில்லை. ஏன் என்றால் தேவன் தமது மக்களுக்கு அந்த சிலாக்கியத்தையும், பொறுப்பையும் ஒதுக்கி வைத்திருந்தார். இதுவே தேவனுடைய விருப்பமாக இருந்தது. மெய்யாகவே மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே நித்திய ஜீவனாகிய ஈவைப் பெற்றவர்களே, தேவனுடைய வீட்டைக் கட்டும் பணியில் பொறுப்பேற்று செயலாற்ற முடியும். அவர்களே இந்த சிலாக்கியத்தைப் பெற்றவர்கள். எப்படியாக இருந்தாலும் நாம் ஒரு சபைப்பிரிவையோ (Denomination) அல்லது ஒரு குழுவையோ (Group) கட்டும்படிக்கு இரட்சிக்கப்படவில்லை. நாம் அவருடைய வாசஸ்தலத்தை கட்டும்படிக்கு அவரது பெயரால் அழைக்கப

படுகிறோம். பரலோக வீடு, தேவனுடைய நித்திய வாசஸ்தலம். எபே.2:22-ன்படி கர்த்தருடைய வாசஸ்தலமாக விசுவாசிகளான நாம் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறோம். தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம். இந்த ஆலயம் செங்கல், கல், மண், மரம் போன்றவற்றால் கட்டப்பட்டதல்ல. அது ஆவிக்குரிய வாசஸ்தலம் அது உலக மக்களுக்கு அப்பாற்பட்டது. அது நித்தியமானது. இந்த சிலாக்கியம் தூதர்களுக்கு கொடுக்கப்பட்டதல்ல. ஆனால் இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கிரயமாக கொள்ளப்பட்டவர்களுக்கு விசேஷமாக கொடுக்கப்பட்ட சிலாக்கியம் இது.

(இ) நிலைமைகளை வெற்றிக் கொள்ளுதல் (Overcoming the Conditions): (1) கர்த்தரில் பெலன் பெறுதல் (Taking Strength in the Lord)-நெகேமியா எருசலேமுக்கு வந்தபிறகு இடிக்கப்பட்ட மதிலையும், சுட்டெரிக்கப்பட்ட கதவுகளையும் கண்டு தனது மற்ற மக்களிடம் சென்று நிலமையை விவரித்து சொன்னான். அதனால் அவர்கள் கட்டிடம் கட்ட தயரானார்கள். தேவனே தன்னை இங்கே அனுப்பினதினால், அவரே வழியை திறப்பார் என்று நெகேமியா அறிந்திருந்தான். அதனால் தவறாமல் தேவன் தனக்கு உதவி செய்வார் என விசுவாசித்தான். எனவே, எந்தவிதமான தயக்கமும், தாமதமும் இல்லாமல் தொடர்ந்து முன்னேறி சென்று மக்கள் அனைவரும் தங்கள் பங்கை பெறும்படியாக அவரவர்களுக்கு அந்த கடினமான வேலையை பகிர்ந்து கொடுத்தான். எருசலேமின் மதில் சுவர்கள் மிகவும் கனமானது, அதை கட்டஅனுபவ முள்ளவர்கள், அதிகம் படிக்கப்பட்டவர்தான் வேண்டும். அந்த சுவர்கள் மிகவும் மோசமான நிலமையில் இருந்தபடியினால் அதை மறுபடியும் செப்பனிடுவது அதிக கடினம். அதேபோல இந்த நாட்களிலும் மக்கள் மத்தியில் காணப்படும் வெறுமையான நிலைமையை கண் நோக்கிப் பார்க்கும் போது இந்த மக்களை எப்படி சீர்திருத்தி மேம்படுத்துவது என்று யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அது நம்மால் முழுமையாக முடியாது (Impossible). அநேகர் சோர்ந்து போனார்கள் (Discouraged). "நாம் அப்போஸ்தலர் நாட்களில் வசிக்கவில்லை. அதனால், மக்களின் நிலைமையை பற்றி நாம் கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை" என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரத்திற்கு தகுந்தாற்போல வேலை செய்தால் போதும் என்று நினைக்கிறார்கள். ஆனால், தேவன்

தமது மக்களின் இந்த நிலைமையில் மகிழ்ச்சியாக இல்லை. நீங்கள் அவருக்கு கீழ்படிந்து, அவரை பின்பற்றுவீர்களானால் அவரது கட்டளைக்கு ஆவலாக காத்திருப்பீர்களானால் அவரே உங்களுக்கு அதிகப்படியான பெலத்தையும், அதிக கிருபையையும் அளிப்பார். நாம் அவரை நம்பி, கீழ்படிய சித்தமாயிருப்போமானால் நமது மனித மட்டுப்பாடுகள், பெலவீனங்கள், குறைபாடுகளோடு கூட நம்மையும் ஆண்டவர் அற்புதமாக உபயோகப்படுத்துவார் என்பதை மறந்து போகக் கூடாது.

(2) வேலை செய்ய விருப்பம் (Willing to Work): தெய்வீக ஒழுங்கின்படியாக அந்த முழு மதிற்சுவரையும் நெகேமியா பலப் பிரிவுகளாகப் பிரித்தான். அதைப் பற்றி ஒருவரும் மறுத்துச் சொல்லவும் இல்லை. புகார் செய்யவும் இல்லை. எனக்கு இந்த மூலைதான் வேண்டும், எனக்கு அந்த பாகம்தான் வேண்டும் என்று எவரும் ஆசைப்பட்டு கேட்கவுமில்லை. சிலர் தங்கள் மனவிருப்பத்தின்படியான வேலையை மட்டும்தான் செய்வோம் என்று தெரிந்தெடுப்பார்கள் (Select). சில குறிப்பிட்ட வேலைகளை தான் செய்வோம் மற்ற வேலைகளை செய்ய மாட்டோம் என்பார்கள். **உதாரணமாக:-** பரிசுத்த ஐக்கிய சபை கூட்டங்களில் (Holy Convocations) சிலர் நாங்கள் பாத்திரங்களை மட்டும்தான் கழுவ முடியும் என்று சொல்லுவார்கள். மற்ற வேலைகளை செய்ய மாட்டார்கள். தேவ ஊழியர்களிலும் கூட அனேகர் தங்கள் சொந்த விருப்பத்தின்படி தேவனுடைய ஊழியத்தை செய்ய ஆசைப்படுவார்கள். எனவே, அவர்கள் தேவனுடைய ஒழுங்கிற்கும், திட்டத்திற்கும் ஒத்து வரமாட்டர்கள் (Can not fit). **உதாரணமாக:-** அவர்களுக்கு அனேக பிள்ளைகள் இருந்தால், நல்ல பள்ளிகள் (Good Schools), சிறந்த வீடுகள் (Nice Houses) போன்ற வசதிகள் நிறைந்த இடங்களைத்தான் விரும்புவார்கள். தேவன் எங்கே அனுப்பினாலும் அங்கே போக மகிழ்ச்சியாக இணங்க மாட்டார்கள். அவர்களது மனைவி விரும்பும் இடத்தையே அவர்களும் கேட்பார்கள். சில மனைவிகள் தங்கள் கணவர்களின் மனதை எளிதில் திசை திருப்பி விடுவார்கள். ஒருவன், கணவன் மனைவிக்கு தலையாக இருக்கிறான் என்று ஒரு மனைவியிடம் சொன்னான். அதற்கு அவள் ஆமாம், அதை நானும் நம்புகிறேன். ஆனால், மனைவி அந்த தலையை திருப்பும் கழுத்தாக இருக்கிறாள் என்று பதிலுரைத்தாள். இது தேவனுடைய வார்த்தையின்படி சரியானதல்ல. நெகேமியா அந்த முழுவேலையையும் தேவனுடைய

வழிநடத்துதலின்படி (Guidance) அவரவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தான். அதில் பணக்காரன் அல்லது ஏழை வாலிபர் அல்லது வயோதிகர் என்ற எந்த வித்தியாசத்தையும் அவன் பார்க்கவில்லை. தேவனுடைய வழிநடத்துதலைத் தவிர அவன் எந்த விதமான காரியத்தையும் கவனிக்கவில்லை. தேவனுடைய ஒழுங்கும் திட்டமும் எப்பொழுதும் நமக்கு மிகச் சிறந்தது (Best) என்று நாம் அறிந்திருக்கிறோம். ஏதாவது ஒரு துன்பம் வருமானால் தேவனே அதை வெற்றி கொள்ள தேவையான பலத்தை தருவார். ஏதாவது தடை இருக்குமானால் அவரே அதை முடித்துக்கொடுப்பார். ஏதாவது தேவை இருக்குமானால் அவரே தேவைகளை ஏற்ற வேளையில் சந்திப்பார். வேலை பிரித்துக் கொடுக்கப்பட்டவர்கள் அனைவரும் தாங்கள் தங்கள் பகுதிகளை முழுமனதோடு கட்டிக்கொண்டிருந்தனர். அவர்கள் உண்மையோடும், சந்தோஷத்தோடும் உழைத்தனர். ஒருவரும் முறு முறுக்கவில்லை. "என்னால் இந்த கடினமான வேலையை செய்ய முடியாது" என்று மறுக்கவில்லை. **உதாரணமாக:-** (நெகேமியா: 3-ம் அதிகாரம்) ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலையை முழுமையாக செய்து முடித்தனர். ஒரு விசுவாசியுனுடைய வாழ்க்கையில் இது மிகப்பெரிய இரகசியமாகும். நாம் எதை செய்தாலும் முழுமனதோடு தேவனுக்கென்றே செய்ய வேண்டும் "**நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனை கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து**" கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். (கொலோ.3:23) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விசுவாசிகளான நமக்கு வீட்டிலோ அல்லது வெளியிலோ எந்த வேலை கொடுக்கப்பட்டாலும் இதயப்பூர்வமாக செய்ய தவறிப்போகக் கூடாது. ஒரு குறிப்பிட்ட மருத்துவமனையில் ஒரு விசுவாசியான செவிலியர் (ரேசளந) வேலை செய்தார்கள். அவள் தனது வேலையில் மிகவும் கவனமாக இருப்பாள். சிலகாலங்களுக்குப் பிறகு அவள் ஒரு புது பகுதிக்கு (ருயசன) மாற்றப்பட்டாள். அங்கேயும் வழக்கமாக தனது வேலையை கவனத்துடனும், முழுமனதுடனும் செய்ய ஆரம்பித்தாள். அந்த பகுதியின் ஒவ்வொரு பொருட்களையும் ஒழுங்காகவும், சுத்தமாகவும் பரிபூரணமாக சீர்படுத்தினாள். அதை பார்த்துக்கொண்டிருந்த ஒரு நோயாளி அவளைப் பார்த்து யாராவது பரிசோதனை செய்ய (inspect) வருகிறார்களா என்று கேட்டான். அதற்கு அவள் ஒருவருமில்லை என்றாள். தொடர்ந்து அவன் கேட்டான், ஏன்

அவள் இவ்வளவு கஷ்டப்படுகிறாள் என்று கேட்டான். அதோடு கூட இதற்கு முன் இருந்த செவிலியர் அந்த பகுதியில் உண்மையாக வேலையே செய்வதில்லை என்று குறிப்பிட்டான். அதற்கு அந்த செவிலியர், தான் எந்த மனிதனையும் பிரியப்படுத்த வேலை செய்வதில்லை ஆனால், தனது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை பிரியப்படுத்தவே தான் உழைப்பதாக அறிவித்தாள். கர்த்தர் நமக்கு கொடுக்கும் எந்த பணியாக இருந்தாலும் அதை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டு உண்மையாக செயல்பட கற்றுக்கொள்ள வேண்டும். 1932-ம் ஆண்டு என்னை கர்த்தருடைய பணிக்கு ஒப்புக்கொடுத்தபொழுது நான் கர்த்தருக்கு வாக்கு கொடுத்தேன். எந்தவிதமான வேலை என்பதை பற்றியும், எந்த வகையான உணவு, எப்படிப்பட்ட சூழ்நிலை (Climate) அல்லது எதுவாக இருந்தாலும் சரி கர்த்தர் எங்கு அனுப்புகிறாரோ அங்கே மனப்பூர்வமாக செல்ல ஆயத்தமாக இருந்தேன். அவர் என்னை தனியாக விடமாட்டார் என்று மட்டும் நான் பூரணமாக விசுவாசித்தேன். அது எனக்குப் போதும் என்று இருந்தேன். அவர் நமக்கு முன்பாக செல்லுகிறார். பின்னாக பாதுகாக்கிறார். நம்மோடுகூட இருக்கிறார். எந்தவிதமான வேலையாக இருந்தாலும் அதை செய்ய பெலன் தருகிறார். அவரது பரிபூரண சித்தப்படி, திட்டப்படி இருக்குமானால் அதை முழுமையாக முடிக்கும் வரையிலும் அவரே பொறுப்பேற்று நம்மை நடத்துகிறார். எருசலேமின் மதிலை கட்டுகிற வேலையிலே நெகேமியாவுக்கு உதவியாக இருந்தவர்கள் தச்சர்கள் (Carpenters) கொத்து வேலையாள் (Masons) போன்ற தகுதிவாய்ந்தவர்கள அல்ல. ஆனாலும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை தேவனால் கொடுக்கப்பட்டது என்றதால் அதை அங்கீகரித்துக்கொண்டார்கள். அதன் விளைவாக தேவனே அவர்களுக்கு அறிவும், திறமையையும், வேலைக்கு தேவையான அனைத்தையும் கொடுத்தார். மறுபக்கத்தில் சிலர் மனப்பூர்வமாக வேலையை செய்யாமலிருந்தார்கள். இதை நெகே.3:5-ல் வாசிக்கிறோம். பிரபுக்களில் சிலர் வேலை செய்ய மறுக்கவில்லை. ஆனால், அவர்கள் முழுமனதுடன் வேலை செய்யவில்லை. எங்கள் பரிசுத்த ஐக்கிய கூட்டங்களில் தன் ஆர்வ பணியாளர்கள் (volunteers) வேண்டும் என்று கேட்கும்பொழுது சிலர் முன்னுக்கு வருவார்கள். சில நாட்கள் சந்தோஷமாக வேலை செய்வார்கள். ஆனால் நாட்கள் செல்ல செல்ல விருப்பம் குறைந்து தங்கள் முழுமையான

பங்கை மேற்கொண்டு செய்ய வேண்டும் என்ற உண்மையை மறந்துவிடுவார்கள். தேவனுடைய வீட்டில் எந்த வேலைக் கொடுக்கப்பட்டாலும், அதை முழுமனதோடும், விருப்பத்தோடும் செய்ய வேண்டும்.

(3) **வேலையை பகிர்ந்து கொள்வதில் சந்தோஷம்: (Joy in Sharing the Work)** நெகேமியா மூன்றாம் அதிகாரத்தில் எந்த விதமான பாகுபாடும் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் சில முக்கியமாக வேலைகளை பகிர்ந்து அளிக்கப்படுவதை பார்க்கிறோம். தட்டான், தைலக்காரன், மளிகைக்காரன், பிரபு என்ற எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் அவரவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பங்கை பழுது பார்த்து காட்டினார்கள் என்று பார்க்கிறோம். (வ.8,31,22) "…..எருசலேம் பட்டணத்தின் மறுபாதிக்குப் பிரபுவாகிய அலோகேசின் குமாரன் சல்லூமும், அவன் குமாரத்திகளும் பழுதுபார்த்து கட்டினார்கள். "3:12 இங்கு அலோகேசின் குமாரன் சல்லூம் எருசலேமின் பாதி பகுதிக்குப் பிரபுவாக இருந்தாலும், அவனும் அவன் குமாரத்திகளும் கட்டுகிறதை பார்க்கிறோம். பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும் அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் சேர்ந்து கட்டுகிறதைப் பார்க்கிறோம். (வ.1) இந்த நாட்களில் தேவனுடைய ஊழியக்காரர்கள் மத்தியிலும் பாகுபாடுகள் காணப்படுவதைப் பார்க்கிறோம். அவர்கள் தாங்கள் சிறப்பானவர்கள், தங்களுக்கு சிறப்பான கவனிப்பு வேண்டும் (Superior) என்றும் நினைத்து, தாழ்வான, கடினமான வேலைகளை செய்ய தயங்குகிறார்கள். அதனால் அவர்களில் சிலர் எந்தவிதமான கடினமான வேலைகளையும் செய்யாமல் இருக்கிறார்கள். நாம் அனைவரும் தேவனுடைய வேலையில் ஏதாவது ஒரு பங்கை ஏற்று செயல்பட தயங்கக்கூடாது. நாம் யாராக இருந்தாலும், எந்த பின்னனியிலிருந்து வந்திருந்தாலும் வித்தியாசமே பார்க்கக் கூடாது. இங்கே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால் மனவிருப்பத்தோடு, தேவனுடைய ஒழுங்கில் தவறாது செயல்படவேண்டும். தேவனுடைய வீட்டில் நமது சொந்த விருப்பத்தை செயல்படுத்த முயற்சி செய்யாமல், தேவனுடைய சித்தத்தை, தேவ திட்டத்தை, தேவனுடைய ஒழுங்கை, அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். அன்று நெகேமியாவுக்கு மக்கள் கீழ்படியாதிருந்தால் எருசலேமின் மதில் சுவர் கட்டப்பட்டு முடித்திருக்க முடியாது. சத்துருக்களின் எதிர்ப்புகளின் மத்தியில் அவர்கள் தொடர்ந்து

வேலையில் முன்னேறிச் சென்றார்கள். நெகேமியாவின் தலைமையின் கீழ் அனைவரும் ஒருமனப்பாட்டோடு கீழ்படிந்து வேலையை முடித்தார்கள். நெகேமியாவிடம் மக்கள் எந்தவிதமான சிறப்பான சலுகைகளையோ (Special Concessions) அல்லது தள்ளுபடிகளையோ எதிர்பார்க்கவில்லை. நமது பரம நெகேமியாவாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். புதிய எருசலேமைக் கட்டும்படியான பரலோகத் திட்டத்தின் பரிபூரணமான மாதிரி (Perfect Plan) அவரிடம் இருக்கிறது. நாம் அனைவரும் அந்த மாதிரியை பின்பற்ற வேண்டும். அவரது வீட்டில் அவரது ஒழுங்கு கடைபிடிக்கப்பட வேண்டும். நாம் அவரது தலைமைத்துவத்தின் கீழ் அடங்கியிருந்து அவருக்காக சகலவற்றையும் செய்துவருவோமானால், அப்பொழுது நமக்குள் இருந்து ஜீவன் பிரவாகித்து உலகின் பாகங்களுக்கும் செல்லும்.

நாம் அவரது உடன் வேலையாட்களாக அவரோடு கூட உழைக்கும் சிலாக்கியத்தை பெற்று ஆனந்திப்போம். நாம் என்ன செய்கிறோம் எப்படி செய்கிறோம் என்ற கணக்கை கர்த்தர் வைத்திருக்கிறார். அதனால் நாம் கர்த்தருடைய திட்டம் தீர்மானத்தின்படியான தேவனுடைய வேலையை முழுமனதோடு செய்தும் இரகசியத்தைக் கற்றுக்கொள்வோமாக. அப்பொழுது, நமக்கு கொடுக்கப்பட்ட வேலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதை செய்து முடிக்க தேவையான அதிகப்படியான பலம், (Extra Strength) கிருபை, ஞானம் போன்ற சகலவற்றையும் தேவன் நமக்கு ஏற்ற சமயத்தில் கொடுப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவோம். நமக்குள்ளே ஆவிக்குரிய அன்பையும், ஒருமைப்பாட்டையும் அனுபவித்து மகிழ்வோம்.

(4) சத்துருவை விலக்க ஜெபித்தல் (Praying the Enemies Away): உலகம் முழுவதும் சிதறியிருக்கும் தேவ மக்களின் வறட்சியான கனியற்ற நிலைமைதான் எருசலேமின் மதில்கள் இடிபட்டதும், கதவுகள் சுட்டெரிக்கப்பட்டதான நிலைமை என்பதை ஏற்கனவே நாம் பார்த்தோம். அந்த நிலைமைக்கு காரணம் இஸ்ரவேல் மக்களின் முரட்டாட்டமும், பாவமுமே என்றும் பார்த்தோம். இந்த நாட்களிலும் தேவ மக்களின் பாவமும், தேவனுக்கு கீழ்படியாமையும்தான் அவர்களது கனியற்ற மலட்டுத் தன்மைக்கு காரணமாகும். ஆனால், கிருபையின் தேவன் எப்பொழுதும் தமக்கு மீதியான சிறுபகுதி மக்களை (Remnant) தேவன் வைத்திருக்கிறார்.

அவர்கள் மூலமாக புதிய ஜீவனை (New Life) கொடுத்து அவரது இரட்சிப்பை நாம் பெற்று முழுமையாக மகிழும்படி செய்கிறார். தேவன் நெகேமியாவையும் அவனோடு இருந்த மக்களையும் பயன்படுத்தி உடைக்கப்பட்ட மதில்சுவரையும், எரிக்கப்பட்ட கதவுகளையும் பழுதுபார்த்து செப்பனிடும்படி செய்தார். தேவனுக்கு கீழ்படிந்து அவரது சிறுமந்தையாக இருக்க ஆசைப் படுவோர் இந்த வேலையில் பங்கு பெறுகிறார்கள். அவர்கள் எந்தவிதமான எதிர்ப்புகளுக்கும், கேலி, பரிகாசத்துக்கும், நிந்தைகளுக்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். நெகேமியாவும் அவனோடு இருந்தவர்களும் எப்படியாக எதிர்ப்புகளையும், உபத்திரவங்களையும் எதிர்கொண்டார்களோ அதேபோல நாமும் எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும். சன்பல்லாத் பிரதானமாக கேலி செய்து உபத்திர படுத்தினவன். (4:1) தொபியா என்ற அவனது நண்பன் ஒருவனும் அவனோடு இருந்தான். (வ.3) அந்த நாட்களில் இருந்தவர்களில் இந்த இருவரும் மிகவும் செல்வாக்குப் படைத்தவர் களாகவும், வலிமை வாய்ந்தவர்களாகவும் (Most Powerful) இருந்தார்கள். தேவ ஊழியர்களான நாமும் இப்படிப்பட்ட அதிகாரம் உள்ளவர்களையும், பிரபலமானவர்களையும் (Influential), பெரிய கிறிஸ்தவ தலைவர்கள் என்று அழைக்கப்படுபவர்களையும் எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும். 1941-ம் வருடம் பலவிதமான சபை பிரிவுகளை (Different Denomination) சேர்ந்த தலைவர்களை நாங்கள் சென்னை (Madras) பட்டணத்திலே சந்திக்க வேண்டியதாக இருந்தது. அவர்கள் எங்களை எதிர்த்துப் போராடினார்கள். சன்பல்லாத், தொபியா என்பவர்கள் தங்களது உயர்பதவிகளின் உதவியால் தேவனுடைய எருசலேமின் மதில் சுவர்களை கட்ட உதவியாக இருந்திருக்கலாம்.

ஆனால், அதற்கு மாறாக அவர்கள் தங்கள் பதவி வெறியினால் தேவனுடைய வேலைக்கும் ஊழியருக்கும் விரோதியாக இருந்தார்கள். வேலையை தடை செய்தார்கள். (பிலிப்.2:21)ல் "**மற்றவர்களெல்லாம் கிறிஸ்துவுக் குரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்**" என்று பவுல் சொல்லுவது போல் நடந்தது. சென்னையில் தேவனுடய வேலை ஆரம்பித்த உடனே இந்தவிதமான எதிர்ப்புகளை எப்படி எதிர் கொள்ளுவது என்று தேவன் எங்களுக்கு போதித்தார். எச்சரிக்கையும் செய்தார். நாங்கள் சென்னையில் உள்ள யெகோவா, ஷம்மாவுக்கு செல்வதற்கு முன்பாக எங்களில் ஒருசிலருக்கு ஒரு இரவு முழுவதும் ஜெபம் செய்ய வேண்டும் என்ற பாரம் இருந்தது. சத்துருவினால்

அதிகமான எதிர்ப்பும், தாக்குதல்களும் இருக்கும் என்று நாங்கள் முன்னதாக அறிந்திருந்தோம். அதே நேரத்தில் நாம் ஊக்கமாக ஜெபிக்கா விட்டால் சத்துருவை எதிர்கொள்ளமுடியாது என்றும் அறிந்திருந்தோம். அதனால் அருகிலிருந்த பல்லாவரம் என்ற இடத்திலிருந்த மலைக்கு சென்று 25 முதல் 30 பேர் சேர்ந்து இரவு முழுவதும் ஜெபம் செய்ய தீர்மானித்தோம். நாங்கள் ஆங்கே சென்றபோது பழங்காலத்து கல்லறைகள் (old Tombs) அங்கே இருந்தன. அதில் அதிகமான தேள்களும், பூரான்களும் (Centipedes and Scorpions) இருந்தன. சிறிது நேரம் தேவனுடைய வசனத்தை தியானித்த பிறகு ஜெபிக்க ஆரம்பித்தோம். தேள்களும், பூரான்களும் நாங்கள் வைத்திருந்த விளக்கின் (petromax) வெளிச்சத்தினால் கவரப்பட்டவைகளாக அதிகமாக வந்து கொண்டே இருந்தன. அவைகளை கொன்றுபோட்டுக்கொண்டே இருந்தோம். இது எங்களுக்கு வழக்கத்திற்கு மாறான அனுபவமாகப்பட்டது. ஒருபக்கம் ஜெபித்துக்கொண்டே இருந்தோம். மறுபக்கம் அவைகளை கொன்று போட்டுக்கொண்டே இருந்தோம். இப்படியாக இரவு முழுவதும் ஜெபித்தோம். மறுநாள் காலையில் சூரியன் சென்னை பட்டிணத்தின் மேல் உதித்த உடன் தேவன் எங்களோடு கூட தெளிவாக பேசினார். நாங்கள் இனிவரும் நாட்களில் கசப்பான விஷம் நிறைந்த கொடுக்குகளை உடைய தேள்களை போலும், பூரான்களை போன்ற மக்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என வெளிப்படையாக தேவன் பேசினார். பயப்பட வேண்டாம், மக்கள் தீங்கு செய்ய முயற்சித்தாலும் தேள்களையும் பூரான்களையும் கொன்று போட்டதை போல அவர்களையும் வெற்றி கொள்ள முடியும் என்று தைரியப்படுத்தினார். அந்த தேள்களையும், பூரான்களையும் கொண்டு தேவன் பேசின காரியங்கள் தொடர்ந்து வந்த வருடங்களில் எங்களது அனுபவமாக மாறியது. தேள்களையும், பூரான்களையும் போன்ற மக்களை அதிகமாக எதிர்கொண்டோம். அதனால், நாங்கள் அங்கே சென்று ஜெபித்தது எங்களுக்கு மிகவும் உதவியாக உற்சாகமாக இருந்தது. நமது சொந்த ஞானத்தினால் நாம் சத்துருவை வெற்றிகொள்ள முடியாது. நமது அறிவு, வரங்கள், தாலந்துகள் அல்லது நமது சொந்த பெலம், வல்லமையினால் நாம் எதிரியை எதிர்க்க முடியாது. கடந்த 31 வருடங்களாக தேவன் தமது வாக்குத் தத்தங்களை உண்மையாக காத்துக் கொண்டார் என்று இப்பொழுது சாட்சியாக சொல்ல முடியும். எவ்வளவுக்கு அதிகமாக அவர்கள் எங்களை

எதிர்த்தார்களோ அவ்வளவுக்கு அதிகமாக தேவனே எங்களை ஆசீர்வதித்தார். தேவனுடைய வேலை ஆசீர்வதிக்கப்பட்டது. முதலாவது அவர்கள் பயன்படுத்தின ஆயுதம் கேலி பரிகாசம் செய்தல். (வ.1) தேவனுடைய வேலையை தடைசெய்ய சத்துரு பயன்படுத்தும் பொதுவான ஆயுதம் இது. பெரிய தலைவர்களை (leading men) பயன்படுத்தி சாத்தான் கேலி, பரிகாசம் செய்வான். அதன் மூலமாக தேவனுடைய வேலையை தடை பண்ணுவான். அது அவனுடைய மிகவும் சக்திவாய்ந்த ஆயுதமாகும். சன்பல்லாத், தொபியா இருவரும் உயர்ந்த பதவியில் இருந்தது மட்டுமல்ல, அவர்களுக்கு அதிக செல்வமும் (Money) இருந்தது. அவர்கள் தங்கள் பணம், பதவி, பட்டம் நிலம் சொத்து, அதிகாரம் போன்றவைகளால் பெருமை கொண்டு இருந்தனர். அதனால் அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய, அவருக்கு கீழ்படிய விரும்பினவர்களை கேலி பரியாசம் செய்ய பயப்படவில்லை. கடந்த வருடங்களில் அதேவிதமான காரியங்கள் நடைபெற்றதை நாங்கள் கண்டோம். பெரிய பள்ளிகளுக்கும், மருத்துவனை களுக்கும் மற்ற பல நிறுவனங்களுக்கும் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள், அதிகபணம் படைத்தவர்கள் தங்கள் பதவி வெறி (intoxcation). பண மயக்கத்தினாலும், நிறைந்தவர்களாக அதிகமாக இடையூறுகளை செய்தார்கள். கர்த்தருடைய வசனத்தின்படி ஞானஸ்நானத்திற்கு கீழ்படிய விருப்பமாக இருந்தவர்களை பரியாசம் பண்ணினார்கள். உங்களை யார் விவாகம் (marry) பண்ணுவார்கள்? யார் உங்களுக்கு உத்தியோகம் (job) எப்படி கிடைக்கும், உங்களை யார் பராமரிப்பார்கள் பார்க்கலாம் என்று ஏளனமாக பேசினார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யவும், அவருக்கு கீழ்படியவும் விரும்பினவர்களை சாத்தானும் அப்படியாகவே ஆதிநாட்களிலும் பரியாசம் பண்ணினான். ஆனால், நாங்கள் கர்த்தரை ஸ்தோத்தரித்து துதிக்கிறோம். ஏன் என்றால், அதிக பலமான ஆயுதமான ஜெபம் சத்துருவின் சகல காரியங்களையும் தோற்கடித்தது. ஜெபம் சர்வ வல்லமை பொருந்தினது. நாம் தேவனுக்கு முழுவதுமாக கீழ்படிய விரும்பினால், நாம் எல்லாவிதமான எதிர்ப்புகள், உபத்திரவங்கள், பரியாசங்களை எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும். நெகேமியாவும் அவனது உதவி ஆட்களும் சத்துருவினால் தாக்கப்பட அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். எவ்வளவிற்கு அதிகமாக அவர்கள் தாக்கப்பட்டார்களோ (attaked) அவ்வளவிற்கு அதிகமாக அவர்கள்

ஜெபித்தார்கள். அதேபோல நாங்களும் சத்துருவின் தாக்குதல்களினால் சோர்ந்து போகாமல் (discourage), அவனது சகல தாக்குதல்களுக்காகவும் நாங்கள் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே இருந்தோம். தேவனுடைய உதவியை தேடினோம். அதன் பின்னர் எங்களை பரிகாசம் செய்தவர்கள் எங்களிடத்தில் வந்து கெஞ்ச (beg) ஆரம்பித்தார்கள். தங்களுக்கு உதவி செய்யும் படியும், தங்களுக்காக ஜெபிக்கும்படியும், தங்கள் இடங்களில் நற்செய்தி கூட்டங்கள் (Gospel Compaigns) நடத்தும்படியும், எங்களிடத்தில் வந்து வேண்டிக்கொண்டார்கள். நாங்கள் எல்லா பரிகாசங்களையும் பொறுமையாக சகித்துக்கொண்டதால் ஏற்ற காலத்திலே (due time) தேவன் எங்களுக்கு உதவி செய்து, எங்களை கேலி செய்தவர்களுக்கும், பரியாசம் செய்தவர்களுக்கும் உதவி செய்யும்படி ஆசீர்வாதத்தின் ஊற்றாக (channels of blessings) எங்களை தேவன் பயன்படுத்தினார். இதை எங்கள் அனுபவத்தில் அறிந்து கொண்டோம். நமது கடமை பரலோக தரிசனத்துக்கு, (Heavenly Vision) உண்மையாக, உறுதியாக இருந்து தொடர்ந்து ஜெபிப்பது. 4:6-ல் **"நாங்கள் அலங்கத்தை கட்டி வந்தோம், அலங்கமெல்லாம் பாதி மட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது: ஜனங்கள் வேலை செய்வதற்கு ஆவலாய் இருந்தார்கள்"**. என்று வாசிக்கிறோம். ஜனங்களுக்குள்ளே ஒற்றுமையும், ஒருமனப்பாடும் இருந்தது. (Oneness and unity) தேவன் எப்படி கட்டவேண்டும் என்று கட்டளையிட்டாரோ அப்படியே அவர்கள் தொடர்ந்து கட்டிக்கொண்டே வந்தார்கள். சில நேரங்களில் விசுவாசி களுக்கு மத்தியிலேயே சத்துரு பொறாமையையும், சண்டையையும் உண்டாக்கி விடுவான். அதன் மூலமாக தேவனுடைய வேலைக்கு தடை கொண்டு வருவான். நாம் ஆவியின் ஒருமையை (oneness in the Spirit) காத்துக்கொள்வாற்காக, நமக்குள்ளே ஒற்றுமை நிலவ வேண்டும் என்பதற்காக அதிகமாக ஜெபிக்க வேண்டும். சன்பல்லாத்தும், தொபியாவும் செய்த பரிகாசம் பலிக்கவில்லை என்றதால் அவர்களுக்கு கோபம் அதிகமாக வந்தது. அதனால் அவர்கள் தங்கள் அதிகாரத்தினால் தேவனுடைய வேலை தடை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் நெகேமியாவோடும் அவனது உதவி ஆட்களோடும் போராட சதி ஆலோசனை செய்தார்கள். அதிகாரத்தை பயன்படுத்தி பயமுறுத்துவதால் (threateining) தேவனுடைய வேலையை நிறுத்திவிடலாம் என்று நினைத்தார்கள். கடந்த அனேக வருடங்களாக இதே அனுபவத்தை நாங்கள்

சந்தித்துக் கொண்டு வருகிறோம். எங்களுக்கும் அதே ஆயுதமான "ஜெபம்" தான் சத்துருவின் சகல ஆயுதங்களையும் தோற்கடிக்கிறது. "ஆனாலும், நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்: (4:9) இந்த வசனத்தின்படி "முழு இரவு ஜெபங்களை ஏற்பாடு செய்தோம். மற்ற சபை ஜெபங்களிலும் ஊக்கமாக (persevering) ஜெபிக்க ஏவப்பட்டோம். மிகுந்த பாரத்தோடும், வேதனையோடும் (Travailing) ஜெபித்தோம். சத்துருவை தோற்கடிக்க எங்களால் முடிந்தது. சத்துரு தேவனுடைய மக்களுக்கும், தேவ ஊழியர்களுக்கும் விரோதமாக கசப்பான எதிர்ப்புகளை (bitter opposition) கொண்டு வருவான். அவைகளை தோற்கடிக்க வேண்டுமானால் ஊக்கமான ஜெபமும், மிகுந்த பாரத்தோடும் வேதனையோடும் தொடர்ந்து போராடி ஜெபிக்கும் ஜெபமும் அவசியம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், சீமோன் பேதுருவுக்காக இப்படியாக ஜெபிப்பதை பார்க்கிறோம். "பின்னும் கர்த்தர்: **சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன். நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்."** லூக்கா22:31,32 **(5) குப்பையை அகற்றுதல் (Removing the Rubbish):** "அப்பொழுது யூதா மனிதர்: சுமைகாரரின் பெலன் குறைந்து போகிறது. மண்மேடு: மிச்சமாயிருக்கிறது. நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாது என்றார்கள்: (4:10) மதில்கள் எரிக்கப்பட்டதினால் அதிகமான குப்பைகள் அங்கு நிறைந்து காணப்பட்டது. உறுதியான சுவர் கட்டப்பட வேண்டுமானால், முதலாவது குப்பைக் கூளங்களை அகற்ற வேண்டியது அவசியம். இந்த குப்பைகள் மனிதனால் உண்டாக்கப்பட்ட பழக்க வழக்கங்கள் (Man-Made customs) சடங்குகள், சம்பிரதாயங்கள் (traditions and practices) போன்றவைகள் ஆகும். தேவனுடைய வேலை உறுதியானதாக இருக்க விரும்பினோமானால் அப்படிப்பட்ட குப்பைகளை அகற்றியே ஆக வேண்டும். (மாற்கு.7:1-13) அனேக இடங்களில் காணப்படும் பெயர் கிறிஸ்துவ சபைகளில் (Denominational Churches) தேவனுடைய வசனத்தைப் புறக்கணித்து மனிதனால் உண்டாக்கப்பட்ட பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை பற்றிக்கொண்டு, அவைகள்

தங்களது முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டவைகள் என்றும், எங்கள் பாரம்பரியம் என்றும் பெருமையாக சொல்லிக்கொள்வார்கள். அவைகள் தேவனுடைய வசனத்தின்படியானவைகள் அல்ல. ஒரு நாள் நல்ல பக்தியோடும், தேவ பயத்தோடும் நீண்ட அங்கிகளை அணிந்தவர்களாக பத்துபேர் என்னிடத்தில் வந்து மிகுந்த பணிவோடு, கர்த்தர் எங்கள் கூட்டங்கள் மூலமாக செய்யும் காரியங்களை பாராட்டினார்கள். பின்னர் இரண்டு காரியங்களை எனக்கு விரோதமாக குற்றம் சுமத்தினார்கள். ஒன்று: நான் ஏன் இரண்டாவது ஞானஸ்நானம் கொடுக்கிறேன்? அடுத்தது: அவர்கள் ஞாயிறு கூட்டங்கள் (Sunday Services) நடத்தும்போது நான் ஏன் தனியாக ஞாயிறு கூட்டங்கள் நடத்துகிறேன்? என்று கேட்டார்கள். அதற்கு நான் சொன்னேன், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை பற்றி வேதத்தில் எங்காவது குறிப்பிட்டுள்ளதா? ஏதாவது ஒரு வசனமோ அல்லது அரைவசனமோ கூட காட்டுங்கள் என்றேன். அதோடு கூட ஞானஸ்நானம் என்றால் என்ன? அதன் அர்த்தத்தை எனக்கு விளக்கி சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு ஒரு தலைமை போதகர் (leading pastor) சொன்னார் எங்களது அதிக பயபக்திக்குரிய முற்பிதாக்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள், அவர்கள் செய்தது தவறாக இருக்க முடியுமா? என்றார். நான் அவர்களை கேட்டேன், எனது பாட்டனார் (grand father) மிகவும் நல்லவர், தெய்வ பயம் உள்ளவர். நான் அவரை அவரது வார்த்தைகளை பின்பற்ற வேண்டுமா அல்லது தேவனுடைய வார்த்தைகளை பின்பற்ற வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் எனது கேள்விகளுக்கு பதில் கொடுக்க தயாராக வரவில்லை என்றார்கள். அதனால் நான் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டேன். தயவு செய்து ஒரு நாளை நியமித்துக் கொள்வோம், ஒரு இடத்தையும், நேரத்தையும் குறிப்பிட்டுக் கொள்வோம், இங்கு நீங்கள் அனைவரும் வாருங்கள், இன்னும் எத்தனை பேர் வேண்டுமானாலும் வாருங்கள். நானும் வருகிறேன், ஆனால் அனைவரும் தங்கள் கைகளில் முழு வேதாகமம் (full bible) கொண்டுவரவேண்டும். ஏன் என்றால் எதை சொன்னாலும், அதை வேதத்தின் ஆதாரத்துடன் சொல்ல வேண்டும் என்றேன். அவர்கள் அனைவரும் சம்மதித்தார்கள். ஒரு இடமும், தேதியும், நேரமும் குறிக்கப்பட்டது. கண்டிப்பாக வருவதாக வாக்குப் பண்ணினார்கள். ஆனால் இன்றுவரையிலும் ஒருவர் கூட திரும்பிப் பார்க்கவில்லை. ஆராதனை கூட்டங்களைக் குறித்து நான்

அவர்களிடம் சொன்னது: நாங்கள் எந்தவொரு உறுப்பினர் பதிவும் செய்வதில்லை, நாங்கள் சந்தா (Membership Subscription) வசூல் செய்வதில்லை, நாங்கள் அங்கும் இங்கும் போய் ஆட்களை எங்கள் கூட்டங்களுக்கு வாருங்கள் என்று அழைப்பதில்லை. பால் பவுடர், கோதுமை மாவு போன்றவற்றை கொடுத்து மக்களை கவர்ச்சிப்பதில்லை. ஆனால், அவர்களாகவே தங்கள் சொந்த விருப்பத்தில் தேவனுடைய வீட்டில் தேவனை தொழுது கொள்ள வேண்டும் என்ற ஆவலோடு வருகிறார்கள். நாங்கள் அவர்களை நிறுத்த முடியாது. மேலும் தேவன் வேத வசனத்திலே வழிகாட்டின படியாக நாங்கள் தேவனை ஆராதிக்கிறோம். அப்படியாக ஆராதனை செய்யும் உரிமை எங்களுக்கு உண்டு. அவர் எங்கள் பாவங்களை மன்னித்து இருக்கிறார் என்ற தெளிவான நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அவர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் எங்களை கழுவி இருக்கிறார். நான் வேதத்திற்கு விரோதமாக எந்த கூட்டத்திலாவது பேசினது உண்டா? என்று எனக்கு சொல்லுங்கள் என்று அவர்களிடம் கேட்டேன்.

பொதுவாக எங்களது ஆராதனைக் கூட்டங்கள் நீண்ட நேரம் நடக்கும். ஒரு ஞாயிற்றுக் கிழமை ஒரு தலைமை போதகர் (Leading Pastor) எங்களது ஆராதனை கூட்டத்திற்கு பிற்பகல் 11 மணிக்கு வந்து இருக்கிறார். எங்களது கூட்டம் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்ததால் சில தடவைகள் அவர் வெளியே சென்று பின்னர் வந்து அமர்ந்து இருக்கிறார். அதன்பிறகு அவர் என்னிடம் சொன்னார், அவர் அநேக கேள்விகளோடு அங்கு வந்ததாகவும், கர்த்தர் தன்னோடு பேசி எப்படியாக எல்லா கேள்விகளுக்கும் பதிலளித்தார் என்றும் சொன்னார். ஆராதனை நேரத்திலேயே ஒவ்வொரு கேள்விகளுக்கும் கர்த்தரே பதிலளித்திருக்கிறார். அவரே எங்களை தமது இடத்திற்கு அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கான சகல ஏற்பாடுகளையும் தாமே செய்து தருவதாக வாக்களித்தார்.

தேவன் தமது ஜனங்களில் சிலரை மேய்ப்பர்களாகவும் (Pastors) சிலரை சுவிசேஷகர்களாகவும் மற்றும் சிலரை போதகர் களாகவும், இன்னும் பலவிதங்களில் தேவன் அழைக்கிறார். அவர் அழைக்கும் பொழுது அவர்களை அவரே ஆயத்தப்படுத்தி ஏற்பாடு செய்கிறார். (appoints) சில சபைகளில் எப்படியாக பதவி ஆசையில் மக்கள் சண்டையும், சச்சரவும், பரிவினைகளும், கோஷ்டி கட்சி

தகராறுகளும் ஏற்படுவதை பார்த்திருக்கிறோம். அதனால் சபைக்குள்ளே அதிகமான குப்பைகள்- கூச்சல் குழப்பங்கள் உண்டாவதை பார்த்திருக்கிறோம். இந்த விதமான கூச்சல் குழப்ப குப்பைகள் அகற்றப்படாவிட்டால் தேவன் கிரியை செய்யமுடியாது. தேவனுடைய பணி பரலோகத்திட்டம் நிறைவேறும்படியான தேவனுடைய வார்த்தையை நிறுவ (establish) முடியாது. நெகே.4:19..." வேலை பெரிதும் விஸ்தாரமாயிருக்கிறது நாம் அலங்கத்தின்மேல் சிதறப்பட்டு, ஒருவருக்கொருவர் தூரமாயிருக்கிறோம்". தேவனுடைய விரிவாக்கப்படும்போது அடிக்கடி நாம் கூடி வருவது கடினம். நாம் விரும்பும்போது ஒன்று கூடி வருவது சிரமமாக இருக்கும். இது சபையில் பெலவீனத்தை கொண்டு வரும். இந்த விதமான பெலவீனம், வேறுபாடுகள், பிரிவினைகள் போன்ற குப்பைகளை கொண்டுவரும். இவைகளை களைந்து போட தக்கதாக, நாம் ஒருமனப்பட்டு ஒன்று கூடி வர, அதிகப்படியான முயற்சிகள் தேவைப்படுகிறது. பரிசுத்த ஐக்கிய சபை கூட்டங்கள் (holy conveycation) மற்றும் சிறப்புக் கூட்டங்கள் (special meetings) அவ்வப்பொழுது ஏற்படுத்தப்பட்டு அன்னியோன்ய ஐக்கியம் பலப்படுத்தப்பட்டு வேறுபாடுகள் களையப்பட்டன. இவ்வாறாக இந்த நெருக்கடிகளை சமாளிக்கமுடிந்தது.

(4) தேவன் வேலையை வாய்க்கச் செய்வார் (god will prosper the work)

(அ) ஏழ்மை இருந்தும் செழுமை (poor yet prosperous) எருசலேமின் இடிக்கப்பட்ட மதில்களையும் எரிக்கப்பட்ட கதவுகளையும் மறுபடியும் புதுப்பிக்கும் பொழுது சத்துருக்களால் அதிகமான எதிர்ப்புகளையும், துன்பங்களையும் இஸ்ரவேலர் சந்திக்க வேண்டியதாக இருந்தது என்று பார்த்தோம். இப்பொழுது அவர்கள் மத்தியில் அன்புக்குறைவு (lack of love) காணப்பட்டதினால் அதிக பிரச்சினைகள் ஏற்பட்டதை பார்க்கிறோம் அதனால் தேவனுக்கு முழுமையான கீழ்ப்படிதலும், தேவனுடைய வேலையும் தடைப்பட்டதைப்பார்க்கிறோம். அப்பொழுது தேசத்தில் பஞ்சம் (famine) இருந்தது. அந்த பஞ்ச காலத்திலே சாப்பிட்டு பிழைக்கும் படி சிலர் தானியத்தை கடனாக வாங்கினார்கள். "வேறு சிலர் எங்கள் நிலங்களையும் எங்கள் திராட்சைத் தோட்டங்களையும்

எங்கள் வீடுகளையும் நாங்கள் அடைமானமாக வைத்து இந்தப் பஞ்சத்திலே தானியம் சாங்கினோம் என்றார்கள். இன்னும் சிலர் இராஜாவுக்கு தீர்வை செலுத்த நாங்கள் எங்கள் நிலங்கள் மேலும் பணத்தை கடனாக வாங்கினோம்" (5:3,4) யூதரில் சிலர் கடும் வட்டி(ரளரசல) வாங்கினார்கள். விசுவாசிகளான நாம் தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது நம் கடமையாகும். அப்படி நாம் செய்ய தவறும் பொழுது தேவனுடைய வேலைக்கு அது தடையாக இருக்கும். தேவனுடைய பிள்ளைகளான நாம் பணத்துக்காகவோ, ஆகாரத்துக்காகவோ பிச்சை எடுக்க மாட்டோம். "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டிணியாய் இருக்கும். கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" சங்கீதம் 34:10 "நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ள வனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை. "சங்கீதம் 37:25 தேவனை நம்ப முடியாத விசுவாசிகள் பிச்சை எடுக்கிற பழக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் தேவைகளுக்காக வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுப்பவர்களாக காணப்படுவார்கள். தேவையில் இருப்பவர்கள் தங்கள் தேவைகளுக்காக தேவனிடத்தில் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். தங்கள் தேவைக்கு மேல் அதிகமாக வைத்திருப்பவர்கள் தங்களது உதவி யாருக்குத் தேவை என ஜெபித்து அறிந்து கொள்ள வேண்டியது அவர்களது கடமை. இந்த நியதி தேவனுடைய வழிநடத்துதலின்படி ஒத்து போகுமானால் (Comply) அனேக தேவைகள் சந்திக்கப்படும். ஒரு நஷ்டமும் ஏற்படாது. சில வருடங்களுக்கு முன்னர் நான் ஒரு ஏழை குடும்பத்தில் தங்கி இருந்தேன். அவர்கள் நல்ல விசுவாசிகள். அந்த நேரத்தில் அந்த வீட்டுத் தலைவர் (lost) இறந்துவிட்டார். ஒருநாள் அந்த வீட்டில் உணவு இல்லை. ஒரு ரொட்டி துண்டு (Bread) கூட இல்லை. அவர்கள் அனைவரும், சிறு குழந்தைகளுடன் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். குழந்தைகள் கூட தங்கள் குறையை வெளியே சொல்லி முறுமுறுக்கவில்லை. தேவன் அவர்களது தேவையை சந்திப்பார் என்று அவர்கள் விசுவாசித்தார்கள். அதனால் அவர்கள் பிச்சை எடுக்க வேண்டிய அவசியமில்லை. நாங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது கதவுக்கு அருகில் பெரிய சத்தம் கேட்டது. யாராவது பெரிய கல்லை போட்டிருப்பார்கள் என்று நாங்கள் நினைத்தோம். கதவை திறந்து பார்த்த போழுது: ஒரு பெரிய

சாக்குப்பை (gunny bag)யில், ரொட்டி, காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்கள்! அந்த முழுக்குடும்பத்துக்கும் தேவையான அளவுக்கு இருந்தது. விசுவாசிகளான நாம் பிச்சை எடுக்க ஆரம்பிப்போமானால் தேவன் நம்மில் பிரியமாக இருக்க மாட்டார். நாம் தொடர்ந்து பிச்சைக் காரர்களாகவே இருப்போம். எனது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலேயே முதன் முதலாவதாக கர்த்தர் எனக்கு கற்றுக்கொடுத்த பாடம் இது: எனது தேவையை ஒருவரிடமும் வார்த்தையாலோ அல்லது குறிப்பால் கூட தெரியப்படுத்தக் கூடாது. தேவனிடத்தில் மட்டும் சொல்ல வேண்டும். அநேக நாட்கள் (many days) உணவில்லாதபடி இருக்கவேண்டிய ஒரு சமயம் (time) இருந்தது. அதோடு கூட அதிக தூரம் நடக்க வேண்டியதாகவும் இருந்தது.ஒரு நாள் எனக்கு அதிகமாக பசித்தது. அப்பொழுது நான் நினைத்தேன் "எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது: உணவுக்காக நான் யாரிடத்திலும் பிச்சை எடுக்க முடியாது, சாப்பாட்டு வேளையில் எனது நண்பனுடைய வீட்டுக்கு போகலாம்: அவன் சாப்பிட சொன்னால் "வேண்டாம் நன்றி" (No thank you) என்று சொல்லலாம், இரண்டாம் தரம் கேட்டாலும் அப்படியே வேண்டாம் என்று சொல்லலாம், மூன்றாவது தடைவ கேட்டால் சாப்பிடலாம் என்று எண்ணிக்கொண்டு சென்றேன். நான் நினைத்தது போலவே நடந்தது. அவனது வீட்டில் சாப்பிட முடிந்தது. சில வாரங்கள் கழித்து அதே சோதனை வந்தது. நான் மிகவும் பசியாக இருந்தேன். எனது நன்பனுடைய வீட்டிற்கு மறுபடியும் போவேன், முன் நடந்தது போலவே (last experience) செய்யலாம் என்று நம்பினேன். நான் வழி நடந்து செல்லும்பொழுது பிற்பகல் 1.30 (பி.ப) மணிக்கு கர்த்தர் என்னை கடிந்து கொண்டார். "உன் விசுவாசம் எங்கே? என்றார். "கர்த்தாவே நான் சாப்பாட்டுக்காகவோ பிச்சை எடுக்கவோ கேட்கவோ போகவில்லை, அவன் இரண்டு முறை என்னை கேட்டாலும் வேண்டாம் என்றுதான் சொல்லப்போகிறேன். மூன்றாம் தரம் கேட்டால்தானே சாப்பிடுவேன்". என்று சொன்னேன். அதன்பின்னர் கர்த்தர் கேட்டார், "நீ உனது நண்பனுடைய வீட்டிற்கு போவதற்கான நோக்கம் (motive) என்ன" என்று கேட்டார். நான் மிகவும் வெட்கப்பட்டேன். உடனே கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டேன். பின்னர் அவருக்கு வாக்கு (Promise) கொடுத்தேன். இனி எவரிடமும் எந்த தேவைக்காகவும் போக மாட்டேன்.

"**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்** நான் தாழ்ச்சியடையேன்" சங்:23:1. அவ்வாறாகத்தான் கர்த்தர் எனக்கு

உறுதியான விசுவாசத்தைக் கொடுத்தார். இன்னுமொரு சமயத்தில் ஒரு நாள் முழுவதும் சாப்பாடு இல்லாமல் இருந்தேன். நடு இரவிலே ஒருவன் எனது கதவை தட்டி என்னை எழுப்பினான். பின்னர் "சகோதரனே, இந்த நடு இரவில் உன்னை எழுப்பினதற்காக என்னை மன்னித்துவிடு: நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அந்தக் கனவில் ஒருவர் உனக்கு சாப்பாடு கொடுக்கும்படி சொன்னார். சமையல் அறைக்குச் சென்று பார்த்தேன், ஒரு தட்டு சாதம் இருந்தது. அதனால்தான் கேட்கிறேன் நீர் சாப்பிட்டீரா இல்லையா சொல்லும் என்றார். நான் அவரிடம் பொய் சொல்ல முடியவில்லை, அதனால் இன்று நான் சாப்பிடவில்லை என்று சொன்னேன். உடனடியாக என்னை தமது வீட்டிற்கு அழைத்து சென்று சாப்பாடு கொடுத்தார். இந்த காரியம் தற்செயலாக நடந்தது அல்ல (not by chance). "உங்கள் விஷயம் (case) வித்தியாசமானது" என்று சொல்லாதே. நாம் தேவனை முழுமையாக நம்பினால் அவரது உண்மையை (faithfulness) நாம் நிரூபிக்கலாம். இன்னும் கூட ஒரு சம்பவம் நடந்தது. நாங்கள் 25 பேர் ஒரு நற்செய்தி ஊழியத்திற்கு (Gospal Campaign) சென்றோம். அந்த சமயத்தில் நாங்களாகவே சமைத்துக்கொண்டோம். ஞாயிற்றுக் கிழமை வந்த போது சமையல் வேலையில் பொறுப்பெடுத்து இருப்பவர்கள் பின் தங்கி எங்கள் அனைவருக்காகவும் சமைக்க வேண்டும். நான் சொன்னேன்: நாம் அனைவரும் ஞாயிறு ஆராதனைக்கு போக வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்று. நமது மத்திய சாப்பாட்டிற்கு என்ன செய்வது? என்று அவர்கள் கேட்டார்கள். தேவன் ஏற்பாடு (provide) செய்வார் என்று பதிலளித்தேன். எனவே நாங்கள் அனைவரும் சென்றோம். ஆராதனை கூட்டத்தில் பங்கு பெற்றோம். கூட்டம் முடிந்ததும் நாங்கள் அனைவரும் பேருந்து நிறுத்தத்தில் (bus stop) நின்று கொண்டிருந்தோம். எனக்கு அறிமுகமான ஒருவர் ஒரு பெரிய கூடையை (basket) தூக்கிக் கொண்டு அங்கு வந்தார். அவர் என்ன செய்கிறார் என்று நான் விசாரித்தேன். அவர் ஒரு விவாகத்துக்கு சென்றதாகவும், அதிகமான உணவு அங்கே மீந்து விட்டதாகவும், அந்த விருந்து அளிப்பவர் (host) யாராவது விரும்பினால் சாப்பாட்டை எடுத்து செல்லலாம் என்று சொன்னாராம். அதனால் அவருக்கு குடும்பம் இல்லாத படியினால் அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுக்கலாம் என்று அவர் எடுத்து வந்ததாகவும், எங்களை பார்த்தவுடன் எங்களுக்கு தரவேண்டும் என்று நினைத்ததாகவும் சொன்னார். அதனால் அந்த

சாப்பாடு நிறைந்த கூடையை எங்களிடம் கொடுத்து விட்டார். அதில் எங்கள் அனைவருக்கும் போதுமான நல்ல சாப்பாடு இருந்தது. இவ்வாறாக தேவனை நம்பி நாம் கடமையை சரியாக செய்யும் போது அவர் நமது தேவைகள் அனைத்தையும் அருமையாக சந்திக்கிறார். ஒரு நாள் அதிகாலையில் நான் ஜெபித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு விதவைக்கு 5 ரூபாய் கொடு என்று தேவன் சொன்னார். அந்த விதவைக்கு அவசியமாக 5 ரூபாய் வேண்டும் என்று தேவன் தெரியப்படுத்தினார். அதனால் நான் எழுந்து எனது பையில் தேடிப்பார்த்தேன். அதில் ஒன்றுமில்லை. ஆண்டவர் என்னிடம் தொடர்ந்து பேசினார். "போய் கொடு" என்று. எனவே நான் எனது மேல் சட்டையை (coat) போட்டுக் கொண்டு எனது வேதாகமத்தை (bible) எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். என்னிடம் பணம் இல்லாமலேயே நடந்து சென்றேன். நான் சிறிது தூரம் சென்ற பிறகு சாலையிலே ஒரு 5 ரூபாய் நோட்டு கிடப்பதை கவனித்தேன். அதை எடுத்துக் கொண்டு நான் சத்தமாக மூன்று முறை அறிவித்தேன். 'யாராவது 5 ரூபாய் தொலைத்து விட்டீர்களா' என்று ஒருவரும் அதை கேட்கவில்லை (உடயஅை) நான் அந்த நோட்டை எடுத்துக் கொண்டு அந்த விதவையின் வீட்டிற்கு சென்று அந்த பணத்தைக் கொடுத்தேன். அவள் அழுது கொண்டே சொன்னாள். இன்று இரவு கனவில் எனது கணவர் வந்து கவலைப் படாதே, சகோதரன் பக்த்சிங் வந்து உனக்கு 5 ரூபாய் தருவார் என்று சொன்னார். மேலும் அவள் என்னை நினைத்துக் கொண்டிருந்தபொழுது கர்த்தர் அனுப்பினார் என்றும் சொன்னால், இது தற்செயலாக நடந்தது (not by chance) அல்ல. தேவன் நமக்கு உதவி செய்து வழி நடத்துகிறபடி நாம் மற்றவர்களுக்கு, தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். நாம் கர்த்தரிடத்தில் ஜெபத்தில் கேட்க வேண்டும். யாராவது சாப்பாடு, அல்லது துணி அல்லது பணத்தேவையில் இருக்கிறார்களா? அதைக் காட்டும் ஆண்டவரே என்று கேட்க வேண்டும். அவ்வாறாக நமது சக ஏழை விசுவாசிகளையும், விதவைகளையும், அனாதைகளையும் ஆதரித்து உதவி செய்து உற்சாகப்படுத்த வேண்டும். அனேக விசுவாசிகள் தங்கள் தேவைக்குமேல் அதிகமான பணம் வைத்திருக்கிறார்கள். தேவையில் உள்ள மற்றவர்களுக்கு கொடுத்து உதவலாம். ஆனால், அவர்கள் மற்றவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும் என்ற மனம் அற்றவர்களாக (No mind) காணப்படுகிறார்கள். இந்த விதமான

சயநலம் அவர்களது இதயத்தில் பொறாமையையும், வெறுப்பையும் முறுமுறுப்பையும் முழுமையாக நிறையச் செய்யும். அப்.6:1-ல் எப்படியாக சமாளித்தார்கள் என்று பார்க்கிறோம். "...பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற..." 6:3 மனிதரை தெரிந்தெடுத்து பந்தி விசாரணை வேலைக்காக நியமித்ததன் மூலமாக இந்தவிதமான பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டது. இந்த நாட்களிலும் பேராசையும் (ambitious), அதிகாரம், வல்லமை (power and authority) நிறைந்த பதவி ஆசையும் கொண்டவர்களில் சிலர் மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் (elders and deacons) மாறிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய கரிசனையோ, ஏழைவிசுவாசிகளுக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற அக்கறையோ, அன்போ இருப்பதில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தங்களுக்கு மேன்மை, உயர்வு, முக்கியத்துவம்" (prominence). ஆவிக்குரியவர்கள் தேவனால் ஆயத்தப்படுத்தப்பட்டவர்கள் மட்டுமே மெய்யான மேய்ப்பர்களாக முடியும் (Shepherds). அப்போஸ்தலர் 11-ம் அதிகாரத்தில் எப்படியாக யுதேயா முழுவதும் பஞ்சம் உண்டானது என்றும், அப்பொழுது அந்தியோக்கியாவிலிருந்த விசுவாசிகள் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யுதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து, பவுல் பர்னபா என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் என்று பார்க்கிறோம். பவுலும், பர்னபாவும் எருசலேமுக்கு சென்ற பொழுது, அங்கே விசுவாசிகள் அனைவரும் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் பஞ்சத்தினாலும், பலவிதமான உபத்திரவங்களினாலும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அதினால் அவர்கள் அந்தக்கஷ்டங்களுக்காக கவலைப்பட்டு கலங்குவதற்கு பதிலாக "அவர்கள் விசுவாசத்தோடு ஜெபித்தார்கள்." "(அப்.12:5) பவுலும், பர்னபாவும் எருசலேமிலே நெருக்கத்திலே கஷ்டத்திலே (needy) இருந்த பரிசுத்தவான்களுக்காக பணமும், பொருளும் கொண்டுவந்திருந்தார்கள். அவர்கள் அவைகளைக் கொடுத்துவிட்டு, அவர்களிடமிருந்து பதிலாக சிலவற்றை பெற்றுக் கொண்டார்கள். அவைகள்தான் புதிய ஜெப பாரம் (new burden of prayer). இவ்வாறாக அவர்கள் எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு மிகுந்த அசீர்வாதத்தை கொண்டு வந்தார்கள். (அப்.13:1-3) நாம் மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலமாகவும், நம்மிடத்தில் உள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதன் மூலமாகவும்

பரலோக தரிசனத்தைப் பெற்றுக் கொள்கிறோம். விசுவாசிகளாகிய நாம் மற்றவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். சிறப்பாக (Specially) தேவையில் இருப்பவர்களின் தேவையை அறிந்து அவர்களின் தேவைகளுக்காகவும் ஜெபிக்க கற்றுக்கொள்ள வேண்டும். தினமும் குறிப்பிட்ட தேவையில் உள்ளவர்களுக்காக பெயர் சொல்லி ஜெபிக்க வேண்டும். எல்லா மூப்பர்களும், உதவிக்காரர்களும், மேய்ப்பர்களும் கூட இந்த ஆவிக்குரிய இரகசியத்தை அறிந்து கொள்வது அவசியம். நெகேமியா:5:14,15-ல் கடந்த 12 வருடங்களாக நெகேமியா எவரிடத்திலும் எந்த வெகுமதியும் (gifts) வாங்கவில்லை என்று சொல்கிறான். அவன் ஒரு ஆளுனராக (governor) இருந்த போதிலும் பணமோ, உணவுப் பொருள்களோ கூட அவன் எவரிடத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லை. உலக பிரகாரமான நீதியில் பார்க்கும் பொழுது அவன் வெகுமதிகளை ஏற்றுக்கொள்வது எல்லா விதத்திலும் சரியானதே. இதற்கு முன்பு அவனது பதவியில் இருந்தவர்கள் உணவையும், திராட்சை ரசத்தையும் மக்களிடத்தில் வாங்கினார்கள். அவர்கள் பணத்திற்கும், பதவிக்கும், பெயருக்கும் புகழுக்கும் வேலை செய்தார்கள். ஆனால் நெகேமியா தேவபயம் உள்ளவனாக வேலை செய்தான். ஊழியக்காரர்கள் மத்தியிலும் சிலர் பணத்தினால் ஆளப்படுவதை (Governed) பார்க்கிறோம். சிலர் ஆடம்பரமான வசதிகளை (Comforts) விரும்புவதைப் பார்க்கிறோம். எங்கே வெகுமதிகளை தருகிறார்களோ (gifts) அப்படிப்பட்ட வீடுகளுக்கே சந்திக்க (Visit) செல்லுவார்கள். அவர்களது தேவையை சபை சந்திக்காவிட்டால் தங்கள் செய்திகளில் மக்களை கடிந்து கொள்வார்கள். கர்த்தரை எப்படி தங்கள் பொருளால் கனம் பண்ண வேண்டும் என்று இவர்களுக்கு தெரியவில்லை என்று சொல்லுவார்கள். இப்படிபட்ட ஊழியர்கள் தேவனை தங்கள் தேவைகளுககாக நம்பி இருக்க அறியாதவர்கள். இதன் விளைவாக இவர்களது வாழ்க்கை வறட்சியானதாகவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் கனியற்றவர்களாகவும் (Barren) காணப்படுகிறார்கள். நாம் தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்வோமானால் நமது சகல தேவைகளுக்கும் அவரையே சார்ந்திருப்போமானால், எந்த விதத்திலும் முறுமுறுக்காமல் அவரை கேள்வி கேட்காமல் தேவனையே நம்பி இருப்போமானால் அப்பொழுது நமது வாழ்க்கை மிகவும் கனி உள்ளதாக (யுடிரனெயவெடல கசரவைகரட) காணப்படும். அனேக தேவ ஊழியர்கள் தங்கள் விசுவாசத்தில் (கயவைா) வாழ்வதாக சொல்கிறார்கள். ஆனால், உண்மையாக

அவர்கள் மற்றவர்களின் விசுவாசத்தில்தான் வாழ்கிறார்கள். அதனால், தேவ ஊழியர்கள் பணத்துக்காக, உணவுக்காக, வசதிக்காக வழ்வதைவிட்டு, அவைகளுக்காக ஊழியம் செய்யாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு காரியத்தையும் தேவனுக்காக மட்டுமே செய்ய வேண்டுமானால் அவரையே முழுமையாக நம்பி இருக்க கற்றுக் கொள்வோமானால் ஏற்ற சமயத்தில் தேவன் நமது தேவைகளை எல்லாம் நிறைவேற்றுவதை பார்க்கலாம். அற்புதமான வகையில் நம்மை கவனித்துக்கொள்ள தேவன் ஒருபோதும் தவறுவதே இல்லை. நம்முடைய விசுவாசத்தை வளர செய்ய நம்மை போதித்து நடத்த அவர் தமது சொந்த முறையை (Method) கையாளுகிறார். தேவனுடைய ஊழியர்கள் விசுவாச வாழ்க்கையை நிருபித்து (demonstrate) காட்டவில்லையானால் அவர்கள் மற்ற விசுவாசிகளுக்கு மாதிரிகளாக இருக்க முடியாது. தேவ ஊழியர்கள் பிச்சைக்காரர்களானால் தேவனுடைய ஊழியம் அதிகமாக (Suffer), நஷ்டப்படும். அவர்கள் அமைதியாக இருப்பது மிகவும் சிறந்தது (for better). அவர்கள் தேவனுடைய வேலைக்கு நன்மை செய்வதற்கு பதிலாக அதிகமான தீமை செய்கிறார்கள். அப்படிபட்டவர்கள் தேவ ஊழியருக்கு தகுதி அல்ல. ஏன் என்றால் அவர்கள் தேவனுடைய நாமத்துக்கு நிந்தையை (Reproach) கொண்டு வருகிறார்கள். நமது தேவன் அன்புள்ள, உண்மையுள்ள தேவன். நமது ஊழியத்தின் மூலமாகவும், வாழ்க்கையின் மூலமாகவும் அவரது இதயத்துக்கு திருப்தியையும், சந்தோஷத்தையும் நாம் கொண்டுவர வேண்டும்.

(ஆ) சோதனைகள் இருந்தும் வெற்றி (Trials yet Triumphant): அலங்கத்தை கட்டுகிற வேலையிலே நெகேமியாவுக்கு வெற்றி கிடைத்தது. இனி அதிலே திறப்பு ஒன்றுமில்லை என்று சன்பல்லாத்தும், தொபியாவும் மற்றும் கேஷேமும் கேள்விபட்டபோது அவர்கள் நெகேமியாவுக்கு பொல்லாப்பு செய்ய நினைத்தார்கள். சத்துரு தேவனுடைய வேலைக்கு தடை கொண்டு வரும்பொழுது அந்த தடைகள் முறியடிக்கப்பட்டு தேவனுடைய வேலைகள் தொடாந்து வெற்றியாக நடக்குமானால் அடுத்து தேவனுடைய ஊழியர்களை தாக்கும்படியாக செய்வான். தனது ஆயுதங்களை ஊழியர்களுக்கு விரோதமாக உபயோகிப்பான். எங்களது ஊழியகாலம் முழுவதிலும் சத்துருவோடு போராட்டம் இருந்து கொண்டே இருக்கிறது. அடிக்கடி தொந்திரவு செய்து

கொண்டே இருக்கிறான். ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஊழியத்திலே சகலவிதமான போராட்டங்களையும் சந்திக்க நாம் ஆயத்தமாகவே இருக்க வேண்டும். நெகேமியா.6:2,3-ல் "நான் வாசல்களுக்கு இன்னும் கதவு போடாதிருக்கையில், சண்பல்லாததும், கேஷேமும் ஆள் அனுப்பி: நாம் ஓனோ பள்ளத்தாக்கில் இருக்கிற கிராமங்கள் ஒன்றில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் என்று கூப்பிட்டார்கள்: அவர்களோவென்றால் எனக்கு பொல்லாப்புச் செய்ய நினைத்தார்கள். அப்பொழுது நான் அவர்களிடத்திற்கு ஆட்களை அனுப்பி, நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது: நான் அந்த வேலையை விட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கெட்டுப் போவானேன்? என்று சொல்லச் நெகேமியா சொன்னேன். "அவர்கள் வேலையை முடிக்காதபடி தனது பொறுப்பிலிருந்து தவறச் செய்ய முயற்சித்தார்கள். அதே போல தேவனுடைய வேலையில் ஈடுபட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மையும் உலக மக்கள், உலக காரியங்கள், விழாக்கள் (Wordly Functions) போன்றவற்றிக்கு தவறான நோக்கத்தோடு அழைப்பார்கள் (invite). அதன்மூலம் தேவனுடைய வேலையிலிருந்து வெளியே நம்மை இழுப்பார்கள். அந்த நேரங்களில் விசுவாசிகளுக்கு பட்டமும் பதவியும் தருவதாக சொல்வார்கள். அதன்மூலமாக சுய மகிமையை காட்டி கவர்ச்சிப்பார்கள் (Attract). சில இடங்களில் புதிதாக மறுபடியும் பிறந்த (newly born again) நபர்கள் தேவனுடைய காரியங்களில் அதிகமான உற்சாகத்தோடு செயல்படும்போது: சபை பிரிவுகளின் (denominations) தலைவர்கள் அப்படிப்பட்டவர்களை அழைத்து மூப்பர்கள் அல்லது அவைத் தலைவர்கள் (chair man) போன்ற பதவிகளை தங்கள் சபைகளில் தருவார்கள். அவ்வாறாக புதிதாக மறுபடியும் பிறந்தவர்களை சபைகளில் மூப்பர்களாக்குவது வேதத்திற்கு புறம்பானதாகும் (Unscriptunal). 1:தீமோத்தேயு 3:1-10 மற்றும் தீத்து.1:6-9 பொன்ற வேத வசனங்களின்படி..." இவர்கள் அப்படி சோதிக்கப்பட்டு நிருபிக்கப்பட வேண்டும்..." அப்படி சோதிக்கப்பட்டு நிருபிக்கப்படவில்லையானால் அவர்களை மூப்பர்களாக நியமிக்கக்கூடாது. புதிதாக பிறந்த தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய கிருபையிலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளராதபடிக்கு தடை செய்ய சாத்தான் உபயோகிக்கும் தந்திரமான ஆயுதங்கள்தான் பட்டம், பதவிகள். ஒரு புதிதாக பிறந்தவர் தேவனுடைய

வார்த்தையில் அதிகம் விருப்பத்தோடும், வைராக்கியத்தோடும் (Zeal) ஆவிக்குரிய காரியங்களில் வளர முயற்சிக்கும்போது அவர்களை, சபை பிரிவுகளின் மேய்ப்பர்கள் (Pasters) அழைத்து தங்கள் சபைகளில் செய்தி கொடுக்க (speech) சொல்வார்கள். பொதுவாக மற்ற மக்களும் தாங்கள் பிரபலமாக வேண்டும் என்ற ஆசையில் வஞ்சிக்கப்பட்டு தவறாக நடத்தப்படுகிறார்கள் (Misled). அநேக நல்லவர்கள் கூட இதனால் கெட்டுப்போகிறார்கள். பொதுவாக ஆசை உள்ள மக்களே அதிக தொல்லை கொடுப்பார்கள். அவர்களது சொந்த வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை மற்றவர்களுக்கு மாதிரியாக (Exemplary) இருப்பதில்லை. அவர்களது பிள்ளைகள் கலகக்காரர்களாக காணப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஜெப பாரம் இருப்பதில்லை. ஆனால், அவர்கள் மூப்பர்களாக வேண்டுமென்று விரும்புவார்கள். அவர்களுக்கு அந்த தருணம் கிடைக்காவிட்டால் பொய்யான வதந்திகளை (false propaganda) பரப்பி தொந்தரவு கொடுப்பார்கள். பலவிதமான இம்சைகளை தர ஆரம்பிப்பார்கள். நெகேமியா 6:5,6ல் எவ்வாறாக சன்பல்லாத், தொபியா தொடர்ந்து தொந்திரவு கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம். அவர்களது திட்டங்கள் அனைத்தும் தோற்றுப்போனபோது: அவர்கள் நெகேமியாவின் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை எழுதி அனுப்பினார்கள். மிகவும் தந்திரமான முறையில் இதை செய்தார்கள். இந்த நாட்களிலும் கூட மக்கள் தேவனுடைய ஊழியக்காரருக்கு விரோதமாக அசுத்தமான (கடைவால) கடிதங்களை அனுப்புகிறார்கள். ஆதாரமற்ற காரியங்களை வைத்து பொய்யான காரியங்களை மிகைபடுத்தி தங்கள் குற்ற மனசாட்சி (Guilty Conscious) யோடு வெறுமையாக காரியங்களை ஜோடித்து கடிதங்களை அனுப்புகிறார்கள். ஆனால் நமது அதிக சக்தி வாய்ந்த ஆயுதமான ஜெபத்தைக் கொண்டு ஒருபோதும் தவறாக (never failing) நமது தேவனிடம் காரியத்தை: ஒப்புக் கொடுப்பதே ஆகும்.

(இ) **ஜெபம்:** சக்திவாய்ந்த ஆயுதம் (Prayer, The Powerful Weapan): நெகேமியா.:8,9-ல் “அந்த வேலை நடந்தேறாதபடிக்கு, அவர்கள் கை சலித்துப்போம் என்று சொல்லி, அவர்கள் எல்லோரும் எங்களை பயமுறுத்தப்பார்த்தார்கள், ஆதலால், தேவனே, நீர் என் கைகளை திடப்படுத்தியருளும்” என்று நெகேமியா ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். ஏனென்றால் பொல்லாத பொய்யான (false and wicked) குற்றச்சாட்டுகளைச் சொல்லி தேவனுடைய

ஊழியக்காரனாகிய நேகேமியாவை பயமுறுத்தி இருதயத்திலே வேதனையை உண்டாக்கினார்கள். உடனடியாக அவன் தேனை நோக்கி, தனது கரங்களை பலப்படுத்தும்படி ஜெபிக்கிறான். நமக்கும் அதே விதமான அனுபவங்கள் உண்டு. சத்துருவின் பலமான தாக்குதல்களின் சமயத்தில் நாம் கர்த்தரிடத்தில் விரைந்து சென்று ஜெபிக்கும்போது அவனது ஆயுதங்கள் முறிந்து போவதை காணலாம். மக்கள் நம்மீது பொய்யாக குற்றம்சாட்டும் பொழுது நமது சார்பாக நியாயத்தை நிரூபித்து வாக்குவாதம் (argue) பண்ணுவது நேரத்தை விரயம் பண்ணுவதாகும் (waste of time). நம்மை துன்பப்படுத்த சத்துரு எடுக்கும் சகல முயற்சிகளிலும்,அவனது புத்திசாலிதனமான திறமையான காரியங்களை எல்லாம் முறியடிக்க வேண்டுமானால் நமது விடாமுயற்சியுள்ள (persevering) ஜெபத்தினால் மட்டுமே முடியும். சத்துரு நம்மை தாக்கும்போது நாம் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஜெபத்தில் தரித்திருப்போமானால் அவனது தாக்குதல்களுக்கு நாம் தப்பித்துக் கொள்ளலாம். "……….. செமாயா தன் வீட்டிலே அடைக்கப்பட்டிருக்கும்போது, நான் அவனிடத்தில் போனேன். அப்பொழுது அவன்: நாம் இருவருமாய் தேவனுடைய வீடாகிய ஆலயத்துக்குள்ளே போய், தேவலாயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும் உம்மை கொன்று போட வருவார்கள், …..என்றான்." அதற்கு நான்: என்னைப் போன்ற மனிதன் ஓடிப்போவானோ? என்னைப் போன்றவன் உயிர்பிழைக்கும்படி தேவலயத்திலே போய் பதுங்குவானோ? நான் போவதில்லை என்றேன்.தேவன் அவனை அனுப்பவில்லை என்றும், தொபியாவும், சன்பல்லாத்தும் அவனுக்கு கூலி கொடுத்ததினால், அவன் எனக்கு விரோதமாய் அந்த தீர்க்க தரிசனத்தைச் சொன்னான் என்றும் அறிந்து கொண்டேன்." சன்பல்லாத்தும், தொபியாவும் முன்செய்ய சகல திட்டங்களும், முயற்சிகளும் தோற்றுப்போனபடியினால், வேறொரு திட்டத்தை தீட்டினார்கள். செமாயா என்ற நெகேமியாவின் உடன் ஊழியக்காரனை கூலி கொடுத்து அவனுக்கு விரோதமாக தீமையான ஆலோசனை (harmful advice) சொல்லும்படி அனுப்பினார்கள். அதன் மூலமாக அவனை தவறாக திசைதிருப்பப் (mislead) பார்த்தார்கள். நெகேமியாவை உயிர் பிழைக்கும்படி தேவாலயத்திலே போய் பதுங்கும்படி செமாயா ஆலோசனை சொல்ல அதன்படி அவன் செய்தால், பாவங்கட்டிக் கொள்வதற்கும், அவனை நிந்திக்கத்தக்க அபகீர்த்தி உண்டாகும் என்று அவர்கள்

அவனை உபயோகித்தார்கள். இந்த நாட்களிலும் கூட சத்துருவானவன் அதே ஆயுதங்களை விசுவாசிகளுக்கு விரோதமாக பயன்படுத்துகிறான். நாம் தேவனுக்காக உழைப்பதை தடைசெய்யும்படி நமது நண்பர்கள், உறவினர்கள் மூலமாக அவர்களின் உலகபிரகாரமான மனதின்படி (ருழசனடல அனெ) தவறான ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேவனுடைய பரலோக சித்தம் மற்றும் ஆலோசனைகள் நமக்கு இருக்கும்பொழுது: அவைகளை நாம் ஜெபத்தின் மூலமாக அறிந்துகொள்ளும் வழியை தேவன் நமக்கு வைத்திருக்கும் பொழுது, உலக பிரகாரமான நண்பர்கள் உறவினர்களின் ஆலோசனைகளை உடனடியாக குப்பைக் கூடையில் (dust bin) போட்டுவிடுவது நல்லது. மத்தேயு.12:46-50ன்படி தேவனுடைய சித்தத்தை செய்யும் விசுவாசிகளே கர்த்தருடைய தாயாரும், சகோதரனும், சகோதரியுமாய் இருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். அதனால் தேவனுடைய வேலையில் நமது உலகபிரகாரமான நண்பர்கள், உறவினர்களின் யோசனைகளினால் ஆளப்படாதபடி (govern) இருக்கவேண்டும். இப்படிபட்ட காரியங்களில் அநேக தேவஊழியர்கள் கூட தவறுகிறார்கள் என்று பார்க்கிறோம்.

தேவனுடைய வேலைக்கு பணம் தேவைப்படும்பொழுது, ஒரு நிலத்தை வாங்கி, பந்தல் (pandal) போட வேண்டும் என்ற அவசியம் ஏற்படும்பொழுது, அவர்கள் தேவனை நம்புவதற்கு பதிலாக உலக நண்பர்களை அணுகி உலக ஞானத்தைப் பயன்படுத்தி உதவிக்காக அவர்களிடம் போகிறார்கள். கர்த்தருடைய வேலைக்கு கடன் வாங்குவது தவறு இல்லை என்று நினைக்கிறார்கள். அதை நாம் திரும்பக் கொடுக்கத்தான் போகிறோம், அதனால், அது ஒரு குற்றமில்லை என்று நினைக்கிறார்கள். இப்படியாக நம்மை அறியாமலேயே உலக வழிகளில் (methods) ஈடுபடுவதன் மூலமாகவும், பணம் திரட்டுவதன் விளைவாகவும் நமக்கு வெறுமையும், மலட்டுத்தன்மையும் (barreness) உண்டாகிறது. எப்படியோ நெகேமியாவிற்கு செமாயா தவறான ஆலோசனை கொடுக்கிறான் என்று பகுத்தறிய (discern) முடிந்தது. அநேக நேரங்களில் தங்களை தேவ ஊழியர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் விசுவாசிகளின் உள்ளத்தில் பயத்தையும் தேவையற்ற சந்தேகங்களையும் உண்டாக்கி விடுகிறார்கள். சில காரியங்கள் பற்றி எச்சரிக்கும்படி தேவன் என்னோடு பேசினார் என்று சொல்லி அநேகருடைய இருதயத்தில் சந்தேகத்தையும்,

பயத்தையும் உண்டாக்கி விடுவார்கள். அதன் மூலமாக சந்தோஷமற்ற (unhappy) சூழ்நிலையை உருவாக்கிவிடுவார்கள். அப்படிப்பட்ட தந்திரமான மக்களால் நாம் வஞ்சிக்கப்பட்டு விடாதபடி எச்சரிப்பு (warning) எடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம். நமது அனுதின ஆலோசனைகளுக்கும், போதனைகளுக்கும் வழிநடத்து தலுக்கும் நமக்கு தேவனுடைய வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முடிவுரை:-

"அப்படியே அலங்கமானது ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு ஏழாம் மாதம் இருபத்தைந்தாம் தேதியிலே முடிந்தது. எங்கள் பகைஞர் எல்லாரும் அதைக் கேட்டபோதும், எங்கள் சுற்றுப்புறத்தாராகிய புற ஜாதியான அனைவரும் கண்டபோதும் மிகவும் முனையற்றுப் போய் இந்த கிரியை எங்கள் தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்தார்கள். "நெகேமியா 6:15,16. அலங்கம் கட்டி முடிக்கப்பட்ட கிரியை தேவனால் கூடிவந்தது என்று அறிந்து கொண்டார்கள். நாமும் உண்மையோடும் (faithfully) ஜெபத்தோடும் (prayerful) தேவனுடைய வேலையை செய்வோமானால், தேவன் நமக்கு ஒப்புக் கொடுத்ததை, சத்துருவின் தாக்குதல்களை மேற்கொண்டு, ஊக்கமாக உறுதியாக தொடர்ந்து முன்னேறி நெகேமியாவை போல திடமானதோடு செயல்படுவோமானால் தேவன் நம்மைக் கொண்டு உடைந்த உள்ளங்களை, வாழக்கை (lives)யை உருவாக்கும்படியும், உடைக்கப்பட்ட குடும்பங்களை ஒன்றுகூட்டும்படியும் மேலும், சத்துருவினால் சின்னா பின்னமாக்கப்பட்ட சபைகளை (assemblies) கூட சீர்படுத்தும் படியாக தேவன் நம்மை உபயோகப்படுத்துவார். அப்படிப்பட்ட வேலைகள் வெற்றிகரமாக நடந்தேறும்போது நமது சத்துருக்கள் கூட முனை மழுங்கிப் போவார்கள். இந்த வேலை தேவனால் கை கூடினது என்று அறிக்கையிடுவார்கள். தேவனுக்கே மகிமை உண்டாகும்.

* * *

பரத்திலிருந்து வரும் உதவி

சகோதரர். நெவில்

அறிமுகவுரை:-

சங்கீதங்களின் புத்தகத்தில் பதினைந்து சிறப்பு சங்கீதங்கள் (Special Psalms) ஆரோகன சங்கீதங்கள் (ascent) – மேலேறும் என அழைக்கப்படுகின்றன. அவை 120 முதல் 134 வரை யாரும் ஏன் அவைகள் மட்டும் அப்படி அழைக்கப்படுகின்றன என்ற காரணம் வேதாகமத்தில் தரப்படவில்லை என்றாலும், அந்த சங்கீதங்கள் இஸ்ரவேல் மக்களின் பண்டிகை நாட்களில் பாடப்படுபவை என்று நம்பப்படுகிறது. இஸ்ரவேலரில் ஆண் மக்கள் அனைவரும் வருடத்துக்கு மூன்று தரம் தேவனுடைய சந்நிதியில் வரவேண்டும் என்று உபாகமம்.16:16-ல் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஆலயமானது எருசலேம் நகரின் உயரமான இடத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது. இவ்வாறாக வருடா வருடம் நடைபெறும் மூன்று பண்டிகைகளிலும் கலந்துகொள்ளத் தக்கதாக அவர்கள் உயரமாக செல்லும் சாலைகளிலே ஏறிப்போக வேண்டும். அப்படியாக ஏறிச் சென்று ஆலயத்தை அடைவார்கள். அப்படியாக அவர்கள் மேல் ஏறிச் செல்லும்போது, இந்த சிறப்பான பாடல்களை பாடிக்கொண்டுச் செல்வார்கள் என்று நம்பப்படுகிறது. அவர்கள் அப்பாடல்களைப் பாடிக்கொண்டே தேவனுடைய ஆலயத்தைச் சென்றடைவார்கள். இப்படிப்பட்ட அனுபவத்தைப் பற்றி சங்கீதக்காரன் சங்கீதம்.42:4-ல் குறிப்பிடுகிறான். 'முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்போடும், துதியுமான சத்தத்தோடும், தேவாலயத்திற்குப் போய்வருவேனே இவைகளை நான் நினைக்கும் போது என் உள்ளம் எனக்குள் உருகுகிறது."

இன்னும் கூட ஏசாயா.30.09-ல் 'பண்டிகை ஆசரிக்கப்படும் இராத்திரியிலே பாடுகிறது போலப் பாடுவீர்கள் கர்த்தருடைய கன்மலையண்டைக்குப் போக நாதசுரத்தோடே நடந்து வருகிறபோது மகிழுகிறது போல மகிழுவீர்கள்." இஸ்ரவேல் ஜனங்களுடைய இந்தவிதமான மேலே ஏறிச் செல்லும் பிரயாணமானது கர்த்தருடைய மலையின் மேல் உள்ள தேவனுடைய வீட்டை சென்றடையும் இந்தச் செயலை ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் ஆவிக்குரிய மேலான பரலோக பிரயாணத்துக்கு ஒப்பிடலாம். ஆமாம். நமது கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு ஆவிக்குரிய மேலான பிரயாணமாகும். இந்த ஆரோகன சங்கீதங்களிலிருந்து நாம் அநேக ஆவிக்குரிய முக்கியமான பாடங்களை கற்றுக் கொள்ளலாம் என நான் விசுவாசிக்கிறேன். அவைகள் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உபயோகமாக இருக்கக் கூடியவைகள். நீங்கள் சங்கீதம். 120 முதல் 134 வரையிலான ஒவ்வொரு சங்கீதத்தையும் தியானம் செய்தால் அப்படிப்பட்ட பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். 121-ம் சங்கீதமானது ஆரோகன சங்கீதங்களில் இரண்டாவதாகும். அது அநேக தலைமுறைகளாக விசுவாசிகள் மத்தியில் அதிகமாக நேசிக்கப்பட்டு வாசிக்கப்படும் ஒரு பிரபலமான சங்கீதமாகும். இந்த சங்கீதத்தை வாசிப்பதன் மூலம் விசுவாசிகள் தேவனுடைய சமூகத்தையும், பாதுகாப்பையும் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். பெட்டி கானர்டு (Pete Conrad) என்ற ஒரு வான சாஸ்திரி (Astronant) (சந்திரனில் இறங்கிய மூன்றாம் நபர்) சந்திரனில் காணப்பட்ட அழகான மலைகளைக் கண்டபோது, அவர் மிகவும் உற்சாகத்தோடு இந்த சங்கீதம்.121:1-ஐ நினைவு கூர்ந்தாராம். 'எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்." என்று ஆனந்தமாக பாடி மகிழ்ந்தாராம். நாம் இந்த 121-ம் சங்கீதத்தை புதிய விதத்தில் தியானித்துப் பார்ப்போம். அப்பொழுது கர்த்தர் தாமே நமக்கு தேவையான, மேலான ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும் எளிய ஆனால் விலையேறப்பெற்றப் பாடங்ளைக் கற்றுத் தருவார். நீதிமொழிகள்.4:18ல் 'நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமாய் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்" என்று நாம் வாசிக்கிறோம். அதே போல நமது வாழ்க்கையும் இருப்பதாக. இந்த 121-ம் சங்கீதத்தின் முதல் வசனமானது மூலபாஷையில் ஒரு கேள்வியைப் போலவே உள்ளது. 'எனக்கு ஒத்தாசை எங்கிருந்து வரும்? அந்த பருவதங்களுக்கு நேராக எனது கண்களை ஏறெடுக்கலாமா"? என்பதாகவே அமைந்துள்ளது.

மலை உச்சியிலே அமைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களை வழிபடும் பாவப்பழக்கம் அநேக இஸ்ரவேலருக்குள்ளே காணப்பட்டது. 'ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கலாமா? என்ற கேள்வியைக் கேட்ட சங்கீதக்காரன் இரண்டாம் வசனத்தில் பதிலைத் தருகிறான். 'வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" என்று நீயும் உண்மையாக இப்படிச் சொல்ல முடியுமா? யெகோவா தேவனே மெய்யான ஜீவனுள்ள தேவன். தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாக அவரை ஏற்றுக் கொள்ளும் பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (யோவான்.1:12). இந்தவிதமான உதவியை தேவன் உனக்கு கொடுக்க முடியும் என்றும், நீ முழு இருதயத்தோடு மனந்திரும்பினால் அவர் உனக்கு உதவி செய்ய ஆவலாக காத்திருக்கிறார் என்றும் நீ யோசித்தது உண்டா? சங்கீதம்.121ல் இந்தவிதமான ஏழு உதவிகள் அல்லது ஆசீர்வாதங்களைப் பற்றி நான் எழுதியிருக்கிறேன்.

1) **இரட்சிப்பின் சங்கீதம்**: சங்கீதம்.121-ஐ நாம் பாட்டாகப் பாடுவதில்லை. ஆனால், அதில் உள்ள வார்த்தைகளை பரிசுத்த வேதாகமத்திலிருந்து வசனங்களாகத்தான் வாசிக்கிறோம். ஆனால் மூலபாஷையில் (Originally) அவைகள் மிக அழகான பாடலாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன. அந்தப் பாடலின் இசையும் இராகமும் (original tune) நமக்கு தெரியாதபடியினால் நாம் இந்த சங்கீதத்தை பாடலாக பாட முடிவதில்லை. எனவே, கர்த்தர் இந்த சங்கீதத்தின் மூலமாக, கர்த்தர் நமக்கு ஒரு புதிய பாடலைக் கொடுக்கிறார். இதுவே நாம் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முதலாவது ஆசீர்வாதமாகும் (First Blessings). கிறிஸ்தவர்கள் எல்லாரும் எல்லா தலைமுறைகளிலும் பாடகர்களாகவே (singers) அறியப்படுகிறார்கள். நமது உதடுகளில் எப்பொழுதும் பாடல்களைப் பாடிக்கொண்டே இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அப்படி ஒரு பொருளை (mean) நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். தேவன் நமது இருதயத்திலே ஒரு பாடலைக் கொடுத்திருக்கிறார். அந்தப் பாடல் நமது இரட்சிப்பின் அனுபவத்தினால் வருகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை எனது இருதயத்தில் நான் ஏற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்த அந்த நாளிலே (born again) நாளிலே எனது இருதயத்திலே அப்படிப்பட்ட பெரிய ஆனந்தம் இருந்தது. நான் மிகவும் மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டே இருந்தேன். அந்த

நேரத்திலே எனக்கு ஆவிக்குரிய பாடல்கள் அல்லது பல்லவிகள் (songs and hymns) ஒன்றும் எனக்குத் தெரியாது. இருந்தும் நான் பாடினேன். பாடிக்கொண்டே இருந்தேன். இரட்சிப்பின் சந்தோஷம் நமக்கு கீதம் பாடத் தூண்டுகிறது. இதை நான் இரட்சிப்பின் கீதம் (song of salvation) என்று சொல்வேன். உனது இருதயத்தில் இப்படிப்பட்ட இரட்சிப்பின் கீதம் இருக்கிறதா? ஒருவேளை நாம் ஒரு பாடலின் ஒரு வரியை கூட இரக்கத்தோடு பாட முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் நமது இருதயத்தில் இந்த இரட்சிப்பின் கீதத்தை உடையவர்களாக இருக்கிறோம். அந்த கீதம் நம்மில் இருக்க வேண்டியது அவசியம். சங்கீதங்களைப் பற்றி சங்கீதக்காரன் எழுதும்போது பலவகை சங்கீதங்கள் இருப்பதாக சங்கீதங்களின் புத்தகத்தில் பார்க்கிறோம். அவைகளை பட்டியலிட்டு அவற்றுள் சிலவற்றை சிந்திப்போம். முதலாவதாக: சங்கீதம்.40:3ல் 'புதுப்பாட்டு' எனப் பார்க்கிறோம். 'நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். 'அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள்" இந்தப் புதுப்பாட்டு நமது இரட்சிப்பின் அனுபவமாக நமக்குக் கிடைக்கிறது. நமது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் மக்கள் நமது வாழ்க்கையில் வித்தியாசத்தைக் காண ஆரம்பிக்கிறார்கள். நமது இரட்சிப்பின் அனுபவத்தின் மூலமாக தேவன் அப்படிப்பட்ட மறுரூபமாகுதலை (transformation) நமது வாழ்க்கையில் தருகிறார். அதை மற்றவர்கள் காணாமல் இருக்க முடியாது. 'ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியா யிருக்கிறான்." (2 கொரிந்தியர் 5:17) உனது இருதயத்தில் புதுப்பாட்டு இருக்கிறது என்று உன்னால் உண்மையாக சொல்ல முடியுமா? இந்த அனுபவத்தை அடைய நீ ஒரு பாடலை இயற்ற (compose) வேண்டிய அவசியமில்லை. ஆனால், கிறிஸ்துவை உனது இரட்சகராக, ஆண்டவராக உனது இருதயத்திற்குள் ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியம். உலகத்திலே அநேகர் வித்தியாசமான பாடல்களைப் பாடுகிறார்கள். சில பாடகர்கள் மிகவும் பிரபலமானவர்கள் (popular). அவர்களின் பாடல்களை விரும்பி அநேகர் அதிக பணம் செலவிட்டு அவைகளை ரசிக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் அவைகளை முட்டாள்களின் பாடல்கள் (songs of fools) என்று சொல்கிறது. 'ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்" (பிரசங்கி.7:5) சங்கீதம் 14:1 சொல்லுகிறது 'தேவன் இல்லை என்று மதி கெட்டவன்

(fool) தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான்." அதனால் இரட்சிப்பின் அனுபவத்தோடு கூடின புதுப்பாட்டு உன் இருதயத்தில் இருக்க வேண்டும். அதை உறுதி செய்து கொள்.

இரண்டாவதாக: சங்கீதம் 137:4-ல் 'கர்த்தரின் பாட்டு' என்று பார்க்கிறோம். "கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?" இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாக பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டார்கள். அவர்கள் அங்கே இருக்கும் பொழுது பாபிலோனியர்கள் தங்கள் கேளிக்கைக்காக (entertainment) சீயோன் கீதங்களை விரும்பி, அவைகளை பாடும்படி சொன்னார்கள். அதற்காகவே, சங்கீதக்காரன், 'கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?" என்று கேட்கிறான். அதனால் ஆவிக்குரிய பாடல்களை அவர்கள் கர்த்தருடைய பாடல்கள் என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். அதன் பொருள் அந்தப் பாடல்கள் கர்த்தரால் கொடுக்கப்பட்டவை என்று பொருள். அவைகளில் அநேக பாடல்கள் சங்கீதங்களின் புத்தகத்தில் எழுதப்பட்டு உள்ளன. இன்றும் அப்படிப்பட்ட பாடல்களை எழுதக்கூடிய விசுவாசிகள் இருக்கிறார்கள். கர்த்தருடைய ஏவுதலினால் (inspiratin) எழுதப்பட்ட பாடல்கள் அதிகமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை உடையவைகள். அவைகளை பாடுகிறவர்களும், அதைக் கேட்பவர் களும் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். இன்று, அவ்வாறாக கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பாடல்களையும் பல்லவிகளையும் சபைகளில் பாடுகிறோம். அப்படியாக பாடல்களை எழுதும்'ஊழியத்தை செய்கிறவர்கள் கர்த்தரிடமிருந்து பாடல்களைப் பெற்றுக் கொள்ளும் இரகசியத்தை அறிந்திருக்க வேண்டியது அவசியம். அப்பொழுது மட்டுமே 'இது கர்த்தருடைய பாடல்" என்று நாம் உண்மையாக சொல்லமுடியும். 'ப்பேணி குரோஸ்பி" (Fanny Crosby) என்பவள் குழந்தையாக இருந்த பொழுதே குருடானவள். அவளுக்கு கர்த்தர் ஆவிக்குரிய அற்புதமான உள்பார்வையை (insight) கொடுத்திருந்தார். அவள் தனது வாழ்நாளில் ஆயிரக்கணக்காக பாடல்களை எழுதினாள். அவைகள் சபைகளில் மிகவும் பிரபலமாக பாடப்படுபவைகள். அதிகமானவர்களால் மிகவும் விரும்பிப் பாடப்படுபவைகள். அதிகமானவர்களால் மிகவும் விரும்பிப் பாடப்படும் பல்லவிகளில் 'Blessed assurance Jesus is mine' என்பதும் ஒன்று. (இயேசு கிறிஸ்து என்னுடையவர், எவ்வளவு ஆசீர்வாதமான நம்பிக்கை) அந்த பல்லவியில் 'உயிர்த்தெழுதலின் காட்சி' அவளது பார்வையில்

வெடிப்பதாக (visions of rapture bursting) என்று எழுதுகிறாள். ஒரு குருடான பெண்ணுக்கு உயிர்த்தெழுதலின் காட்சியைப் பற்றியும், அது வெடிப்பதைப் பற்றியும் தெரிகிறது என்றால் அது வித்தியாசமான காரியம் அல்லவா? அவள் சரீர பிரகாரமாக குருடாக இருந்தாலும் கர்த்தரோடு கூட நெருக்கமான நடக்கையினால் ஆவிக்குரிய நல்ல வெளிப்பாட்டை பெற்றுக் கொண்டாள். கர்த்தரோடிருந்த அப்படிப்பட்ட நெருக்கமான உறவினால் (Association) கர்த்தரிடமிருந்து பாடல்களைப் பெற்றுக் கொள்ளக் கற்றுக் கொண்டாள். அப்படிப்பட்ட பாடல்கள்தான் கர்த்தரின் பாடல்கள் என்று அழைக்கப்படும். கர்த்தரே சந்தோஷமாய் மகிழ்ந்து பாடுவார் என்பதாக செப்பனியா.3:17ல் வாசிக்கிறோம். 'உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார், அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்: அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார். அவர் உன் பேரில் கெம்பீரமாய் களிகூருவார்.' நாம் உண்மையாக கர்த்தரின் பாடலைப் பாடத்தக்கதாக தேவனுடைய இருதயத்திலிருக்கும் அந்தப் பாட்டு இறங்கி வருவதாக. பாடல்களை எழுதுவதும் இசைக்கருவிகளை வாசிக்கும் ஊழியமும் சபைகளில் முக்கியமானவைகளாகும்.

மூன்றாவதாக: சங்கீதம்.32:7ல் 'இரட்சண்யப் பாடல்கள்;' என்று பார்க்கிறோம். "நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர், என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து, இரட்சண்யப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்வீர்". நாம் சோதனைகளை வெற்றிக் கொள்ளும்போது இந்த இரட்சணியப் பாடல்கள் நமக்கு கிடைக்கின்றன. பிசாசானவன் நம்மை எப்பொழுதும் சோதித்து விழச் செய்கிறான். ஆனால் சங்கீதக்காரன் சொல்கிறான் "நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்" நாம் தேவனோடு நெருங்கி இருக்கும்போது, அவர் நம்மை தீமையிலிருந்து விடுவிக்கிறார். "...தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்: உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுங்கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரிந்தியர் 10:13) நாம் சோதனையை மேற்கொள்ளும்போது நமது இருதயத்திலே ஒருபாட்டு வருகிறது. நாம் சந்தோஷத்தினால் பாடிக்கொண்டிருப்போம். ஒரு வேளை ரம்மியமான வார்த்தைகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், உங்களது இருதயம் விடுதலையின் பாடலைப் பாடும். இரட்சிப்பின் பாடல் நம்மில் இருக்கும்.

<u>நான்காவதாக</u>: சங்கீதம் 119:54ல், 'நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்கு கீதங்களாயின" என்று சொல்வதைப் பார்க்கிறோம். சங்கீதக்காரன் வேத வசனங்களை நேரடியாக, பாடலாக மாற்றிப் பாடும் பழக்கமுள்ளவன். நாமும் அப்படி செய்வோமானால் அது நமக்கும் மிகுந்த அசீர்வாதத்தைக் கொடுக்கும். அப்படிப்பட்ட பாடல்கள் 'வேத வசனப் பாடல்கள்" (Scripture Songs) என்று அழைக்கப்படும். அப்படிப்பட்ட பாடல்கள் அநேகம் இன்றும் பாடப்படுகின்றன. அவைகள் வேத வசனங்களிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டவைகள். அப்படிப்பட்ட பாடல்களை நாம் பாட ஆரம்பிக்கும்போது வேத வசனங்களை மனப்பாடமாக அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். எனவே அவ்விதப் பாடல்களை நாம் தொடர்ந்து பாடுவோமாக.

கடைசியாக: சங்கீதம்.137:3ல் 'சீயோனின் பாடல்கள்' என்று பார்க்கிறோம். 'சீயோனின் பாடல்கள் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்.' எருசலேமிலே 'சீயோன்" எபூசியருடைய கோட்டையாக இருந்தது. பின்னர் அது தாவீதினுடைய நகரமாயிற்று (2 சாமுவேல். 5:7) வேதாகமத்தில் 'சீயோன்' ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த வித்தியாசமான பொருள்களால் பேசப்படுகிறது. சீயோன் என்றால் பரலோகம் என்றும், சபை (church) என்றும் பொருள்படும் விதத்தில் பேசப்படுகிறது. பரலோகம் பாடல்கள் பாடப்படும் இடமாகும். வெளிப்படுத்தல்.5:9-ல் நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் புதிய பாட்டை பாடினார்கள் என்று பார்க்கிறோம். அந்த பரலோக புதிய பாடல் கர்த்தராகிய இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டதை குறிப்பிடுகிறது. நாம் பரலோகத்திலே நித்திய காலமாக பாடிக்கொண்டே இருக்கப்போகிறோம். அதனால் இங்கே, இப்பொழுதே பாட ஆரம்பிப்போம். சரியான இராகத்தைப் பற்றியோ, இசையைப் பற்றியோ (pitch and tune) கவலைப்படவேண்டாம். நமது கரடு முரடான பாடல்களே பரலோகத்தில் இனிமையான பாடல்களாக கேட்கப்படும். 19-ம் நூற்றாண்டின் கிறிஸ்தவர்கள்' இரண்டு புத்தக மக்கள் (People of two books) என்று அழைக்கப்பட்டார்கள். அந்த இரு புத்தகங்களில் ஒன்று பரிசுத்த வேதாகமம் மற்றது பாடல் புத்தகம். அவர்கள் எப்பொழுதும் இந்த இரு புத்தகங்களையும் சுமந்து செல்வார்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும், அவர்கள் பாடல்களைப் பாடுவார்கள். நாமும் இந்தப் பழக்கங்களை கடைபிடிக்க வேண்டும். நமது சந்தோஷத்தை சங்கீதத்தின்

மூலமாக வெளிப்படுத்த வேண்டும் (யாக்கோபு.5:13). ஆவியினால் நிறைந்தவர்களின் அடையாளமும் இதுவே. "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து: சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" (எபேசியர்.5:18,19) உறுதியான நடைகள் (steady steps) சங்கீதம்.121:3ல் கர்த்தர் அருளும் இரண்டாம் அசீர்வாதத்தைக் காண்கிறோம். 'உன் காலை தள்ளாடவொட்டார்" ஆவிக்குரிய நடக்கையில் உறுதியான நடையின் (நிச்சயம்) வாக்கை ஒரு விசுவாசிக்கு கர்த்தர் தருகிறார். நம்மை சுற்றிலும் நிச்சயமற்ற (uncertain) நிலையில்லாத நிலைமையை பார்க்கிறோம். வாழ்க்கையின் முக்கியமான தீர்மானம் எடுக்கவேண்டிய காலகட்டம் வரும்பொழுது அநேகர் தடுமாறுகிறார்கள். தாங்கள் தவறு செய்துவிடுவோமோ என்று பயப்படுகிறார்கள், கவலைப படுகிறார்கள். மற்றவர்கள் இருளிலே இருந்து கொண்டு தாங்கள் செய்கிறது சரிதானா என அறியாமலிருக்கிறார்கள். அந்தவிதமான சூழ்நிலையில் (environment) ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய நடத்துதலை உணர்ந்து நிச்சயமான சாட்சியாக விளங்கமுடியும். 'அவன் தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது: அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை' (சங்கீதம். 37:31) எப்படிப்பட்ட நடைகள் உனக்கு இருக்கிறது: உறுதியான நடையா? அல்லது தவறி நடக்கும் நடையா? உனக்கு உறுதியான நடை வேண்டுமானால் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய இயக்கத்திற்கு (direction) உன்னை ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொள். 'நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார்' (சங்கீதம்.37:23). எனவே, தேவனால் உனது நடைகள் உறுதிபட அவரை அனுமதிக்கக் கற்றுக் கொள். சங்கீதக்காரனைப் போல ஜெபி. 'உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப் படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும். 'சங்கீதம் 119:133) என்று வேண்டிக்கொள். நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நடக்கையை, அடிச்சுவடுகளை பின்பற்ற வேண்டும் என வேதாகமம் சொல்கிறது. 'இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்." 1 பேதுரு

2:21. அவரது அடிச்சுவடுகளை பின்பற்றவே ஒரு கிறிஸ்தவன் அழைக்கப்படுகிறான். கிறிஸ்தவனாக இருப்பதன் பொருளும் (meaning) இதுவே. சுவிசேஷத்தினாலே அநேக தடவைகள் ஆண்டவர் தம்மை பின்பற்றி வரும்படி மக்களை அழைப்பதைப் பார்க்கிறோம். (1) விட்டு பின்பற்று (leave and follow) 'இயேசு கலிலேயக் கடலோரமாய் நடந்து போகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு எனப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு, என்பின்னே, வாருங்கள், உங்களை மனுஷர்களை பிடிக்கிறவர் களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள். (மத்தேயு.4:18-20) இது பேதுருவுக்கும் அந்திரேயாவுக்கும் ஒரு புது ஆரம்பம் ஆகும். கர்த்தராகிய இயேசு அவர்களை அழைத்துத் தம்மை விசுவாசிக்கும்படி மட்டும் சொல்லவில்லை. ஆனால், தம்மை பின்பற்றும்படி சொன்னார். இதை நாம் கவனிக்கவேண்டியது நல்லது. இன்றும் நாம் இதைச் செய்யவேண்டும் என்று கர்த்தராகிய இயேசு விரும்புகிறார். பேதுருவும், அந்திரேயாவும் வலைகளை விட்டு அவரை பின்பற்றி சென்ற பொழுது, அது அவர்கள் முழுமனதோடு சென்றார்கள. கர்த்தராகிய இயேசுவை விருப்பத்தோடு பின்பற்றினார்கள் என்பதை காட்டுகிறது. இங்கே நாம் பார்க்க வேண்டிய முக்கியமான கருத்து என்னவென்றால் நாம் கர்த்தராகிய இயேசுவை முழுமனதோடு பின்பற்ற வேண்டும். கர்த்தராகிய இயேசுவை பின்பற்ற வேண்டி எதையெல்லாம் விட்டிருக்கிறோமா? இந்த எளிய மனிதர்களை எவ்வாறாக உபயோகப்படுத்தினார் என்று நம்மால் வேதத்தில் பார்க்கமுடிகிறது. விட்டு பின்பற்றும் விஷயத்தில் விருப்பத்தோடும் முழுமனதோடும் அவர்கள் செய்ததால் அவர்களை வல்லமையாக உபயோகப்படுத்தினார். உங்களில் சிலரை தேவன் அனைத்தையும் விட்டு அவரை மட்டும் சேவிக்கும்படி அழைத்திருக்கலாம். தேவனுடைய பெரிய மனிதர்களின் சவாலான சாட்சிகளை நாம் வாசித்திருக்கலாம், அவர்கள் அனைத்தையும் விட்டு கர்த்தரை சேவித்தார்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள் எல்லாருக்கும் அவ்விதமான அழைப்பில்லை. நாம் நமது பழைய காரியங்களை விட்டு அவரை பின்பற்ற அழைக்கப்படுகிறோம். நமது பாவ பழக்க வழக்கங்கள், சுய மகிமை மற்றும், உலக ஆசாபாசங்கள் யாவும் நமது, ஆண்டவரை பின்பற்றும் போது நம்மோடு வரமுடியாது. நான்

கர்த்தரை பின்பற்றுவதற்கு முன்பாக எனது ஆசை கராத்தே வீரனாக வேண்டும்' என்பது. அதனால் அந்த கராத்தே கலையை மணிக்கணக்காக பயிற்சி செய்தேன். ஆனால் நான் எனது வாழ்க்கையை கர்த்தருக்கு ஒப்புவித்த பொழுது நான் கராத்தேயை விட்டு கர்த்தரை பின்பற்ற வேண்டும் என்று கர்த்தர் எனக்குக் காட்டினார். அது எனக்கு கடினமான தீர்மானமாகவே இருந்தது. ஆனாலும், கர்த்தர் எனக்கு கிருபை கொடுத்தார். உனக்கு நேரமும், சுயாதீனமும் (liberty) உடையவராக கர்த்தரை பின்பற்ற தக்கதாக சிலகாரியங்களை விடவேண்டும் என்று கர்த்தர் உன்னோடு பேசலாம். அவைகளை விட்டு கர்த்தரை பின்பற்றுவதன் மூலம் நமது ஆவிக்குரிய நடக்கையில் உறுதியான நடைபோட முடியும். (2) கவனித்துப் பின்பற்று (listen and follow) 'என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக் கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது.' (யோவான்.10:27) கர்த்தராகிய இயேசுவை பின்பற்ற வேண்டுமானால் அவரது சத்தத்தை கவனிக்கக் கற்றுக்கொள்ளவேண்டியது மிகவும் முக்கியமாகும். கர்த்தராகிய இயேசு சொன்னார் 'என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது' அவரது சத்தம் எழுதப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளின் மூலமாக வருகிறது. கர்த்தர் நம்மோடு பேச ஆசையாக இருக்கிறார். ஆனால் நாம் அதை கேட்க ஆவலாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது வேதத்தை தொடர்ந்து வாசிக்க வேண்டும். '...மனுஷன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று இயேசு சொன்னார். நாம் வேதத்தை வாசிக்கும்போது தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தை நம்மிடம் வருகிறது. தேவனுடைய வார்த்தையே நமது ஆவிக்குரிய ஆகாரமாகும். நமது சரீரத்தை போஷிக்க நாம் மூன்று வேளை ஆகாரம் புசிக்கிறோம். ஆனால் நமது ஆவியைப் பற்றி என்ன? தேவனுடைய வார்த்தை மட்டுமே நமது ஆவியை போஷிக்க முடியும். நாம் தேவனுடைய வார்த்தையை தினமும், பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் தொடர்ந்து வாசிக்க வேண்டும். நாம் இந்த புத்தகங்கள் எல்லாவற்றையும் சமமாகவே பாராட்ட வேண்டும். சிலர் சங்கீதங்களை மட்டுமே வாசிக்க ஆசைப்படுவார்கள். சிலர் நற்செய்தி புத்தகங்களை மட்டுமே விரும்புவார்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள் முழுவேதாகமும் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள். நாம் கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்ற

விரும்பினால் கட்டாயம் வேதத்தை வாசிப்பதன் மூலமாக எனது அனுதின தேவைகளுக்கு ஏற்ற தேவன் உன்னோடு பேசுவார். அந்த சத்தம் உனது காதினால் கேட்கப்படும் சத்தமல்ல. அது உனது இருதயத்தில் உணரப்படும் சத்தம். தேவனுடைய வார்த்தையில் ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி, உரிமைப் பாராட்டக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவரை நன்றாக கவனித்து பின்பற்று வோமானால் நமது நடைகள் (steps) உறுதிப்படும். எப்பொழுதும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட ஆவலுள்ளவர்களாயிருங்கள். தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலமாக வழிநடத்துவார். 'எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்' (ரோமர்.8:14).

(3) **உனது வாழ்க்கையை பணயம் வைத்து அவரை பின்பற்று (Lay down ylur life and follow):-**

'அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்' (மத்தேயு 16:24). கர்த்தராகிய இயேசுவை ஆயிரக்கணக் கானோர்கள் பின் சென்றார்கள். ஏனென்றால், அவர் அற்புதங்களை செய்ததினாலும், அவர்கள் பசியாக இருந்தபொழுது அவர்களுக்கு புசிக்க ஆகாரம் கொடுத்ததினாலும் அவரைப் பின்பற்றினார்கள். அடிக்கடி அவரை அநேகர் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு இந்த சவாலை அவர் விடுத்தார். எளிமையான வார்த்தைகளில் கர்த்தராகிய இயேசு சொன்னார் 'நீ எனது சீஷனாக இருக்க விரும்பினால், நீ சாக (die) ஆயத்தமாக இருக்க வேண்டும். நீ உன்னுடைய சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது உனது பாடுகள், கஷ்டங்கள், சோதனைகள், பாரங்கள், நிந்தைகள் அனைத்தையும் என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னிடம் இருந்து என்ன கிடைக்கும் என்று சிந்திப்பதை நிறுத்திவிட வேண்டும். பின்னர் என்னை பின்பற்ற வேண்டும். கிறிஸ்தவர்களின் அழைப்பு பாடுகளை அனுபவிக்கவே என்பதை நினைவில் கொள். பவுல் தீமோத்தேயுக்கு சொல்கிறான்., 'நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கனுபவி.' (2 தீமோத்தேயு 2:3) என்று. ஒருவன் தன் தோள்மேல் சிலுவையை தூக்கினால் அவன் உயிரோடு திரும்புவதில்லை என்று சொல்லப்படுகிறது. சிலுவை

ஒரு மரண சாதனம் (Instrument of Death) 'உன் சிலுவையை எடுத்துக கொண்டு என்னை பின்பற்றி வா" என்று கர்த்தராகிய இயேசு சொன்ன பொழுது அது ஒரு புதுமையாக தோன்றி இருக்கும். அநேகர் இன்று கர்த்தராகிய இயேசுவின் காரியங்களை மதிப்பிடுகிறார்கள். செழிப்பும், செல்வாக்கும், ஆசீர்வாதமும் பூமிக்குரிய மேன்மையும் கிடைக்கும் என்பதாக நினைக்கிறார்கள். கர்த்தராகிய இயேசுவை அவர்கள் விசுவாசித்தால் அவர்கள் விரும்பின அனைத்தும் கிடைத்து விடும் என்று தப்புக்கணக்கு போடுகிறார்கள். அநேக கிறிஸ்துவ பிரசங்கிமார்கள் கூட தங்களை கவனிக்கிறவர்களுக்கு செழிப்பும் செல்வாக்குமான வழியைக் காட்டுகிறார்கள். நீ தேவனை பிரியப்படுத்தினால் உனக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கும் என்று பிரசங்கிக்கிறார்கள். சிலர் இப்படியும் சொல்கிறார்கள். உங்களுக்கு என்ன வேண்டும், சிறிய தாளில் எனக்கு எழுதி அனுப்புங்கள். நான் ஜெபிக்கிறேன், அது உங்களுக்குக் கிடைக்கும் என்று வாக்குப் பண்ணுகிறார்கள். கர்த்தராகிய இயேசு தமது சீஷர்களிடம் சொன்ன வார்த்தைக்கு இவர்கள் சொல்லும் காரியமானது முற்றிலும் விரோதமானதாகும். தமது சீஷர்களில் தங்களை வெறுத்து தம்மை பின்பற்றும்படி அவர் விரும்பினார். நாம் சுயநலக் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டாம். நாம் சுயநலமற்றக் கிறிஸ்தவர்களாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நீ உனது கிறிஸ்தவ வாழ்க்கையில் உறுதியாக நடக்கும்படி (Steady Steps) பார்த்துக்கொள். சங்கீதம்.121:3ன்படி இது நமக்குக் கர்த்தர் கொடுக்கும் இரண்டாவது ஆசீர்வாதமாகும். (3) சமாதானம் (Peace);: சங்கீதம்.121:3,4 வசனங்கள், தேவனுடைய முக்கியமான குணாதிசயம் (attribute) வெளிப்படுத்துகின்றன. அந்த குணாதிசயமானது தமது மக்கள் மேல் அவர் கொண்டுள்ள கரிசனையும், என்றும் தவறாத கண்காணிப்பும் ஆகும். 'இஸ்ரவேலைக் காக்கிறவர் தூங்குகிறதுமில்லை, உறங்குகிறதுமில்லை. உன்னைக் காக்கிறவர் உறங்கார்" இந்த வார்த்தைகள் நமக்கு அதிக ஆறுதலையும், உறுதியான நிச்சயத்தையும் தருகின்றன. இந்த வசனத்தின்படி தேவன் ஒரு காவல்காரனைப் போல செயல்படுகிறார் என்று பார்க்கிறோம். பணக்காரர்கள் தங்கள் சொத்துக்களையும், வீட்டையும் உடமைகளையும் பாதுகாப்பதற்காக பாதுகாவலர்களை (Security Guards) நியமிப்பார்கள். அந்த பாதுகாவலர்கள் இரவு பகலாக தங்கள் ஓய்வு உறக்கத்தை விட்டு தங்களை நியமித்தவர்களை பாதுகாப்பார்கள். அந்த குடும்ப அங்கத்தினர்கள் தங்க பாதுகாவலர்

உண்மையாக இருக்கிறார் என்று அறிந்து கொண்டு இரவில் நிம்மதியாக தூங்குவார்கள். உண்மையுள்ள பாதுகாவலர்கள் மூலமாக நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் இதுதான். இந்த நிம்மதியான உறக்கம் ஆழமான அமைதியை (deep Peace) குறித்து பேசுகிறது. தாவீது தனது எதிரிகளால் சூழப்பட்டு, கலங்கிக் கொண்டு இருந்த சமயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க (remarkable) காரியத்தை சங்கீதம் 4:8ல் எழுதுகிறான். (1) இந்த அமைதியும், ஆழ்ந்த உறக்கமும், தன்னை காவல் காத்த தேவனால் அவனுக்குக் கிடைத்தது நிச்சயம் என்று பார்க்கிறோம். அதனால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து கிடைத்த மூன்றாவது ஆசீர்வாதம் சமாதானம். உன்னுடைய இருதயத்திலே உண்மையான பரலோக சமாதானம் இருக்கிறதா? மூன்று விதமான சமாதானம் இருக்கிறதா? மூன்று விதமான சமாதானத்தைப் பற்றி வேதாகமம் பேசுகிறது. 1.தேவனோடு சமாதானம் 2. தேவனுடைய சமாதானம் 3.மனிதரோடு சமாதானம். அநேகர் இன்று சமாதானத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். 'எனது இருதயத்தில் சமாதானமே இல்லை, அதை பெற்றுக் கொள்ள தயவு செய்து உதவி செய்யுங்கள்' என்று கேட்கிறார்கள். அவர்கள் சொல்வதன் பொருள் என்னவென்றால் அவர்கள் தேவனோடு சமாதானமாக இல்லை, அதுதான். தேவனுடைய சமாதானத்தை அவர்கள் பெற்றுக் கொள்வதற்கு முன்பாக தேவனோடு சமாதானம் உடையவர்களாக இருக்கவேண்டியது அவசியம். நாம் பாவத்தின் காரணமாக தேவனுக்கு பகையாளிகளாக இருக்கிறோம் என்று வேதாகமம் சொல்கிறது. ஆனால் தேவன் தமது குமாரனுடைய மரணத்தின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தி நமக்கு இந்த பகையை நீக்கும் வகையை வைத்திருக்கிறார். 'நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டப்பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே' (ரோமர்.5:10) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே தொங்கும்போது, பாவமுள்ள மனிதனுடைய கையையும் பரிசுத்தமுள்ள தேவனுடைய கையையும் ஒன்றாக இணைத்தார். உனக்கு சமாதானம் இல்லையென்றால் அதன் பிரதான தேவை, தேவனோடு சமாதானம் (Peace with God). கர்த்தராகிய இயேசுவை உனது இருதயத்தில் கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வதன் மூலமாகவும், அவரோடு எனது

பாவங்களை தேவனுக்கு முன்பாக அறிக்கையிட்டு அவரை ஏற்றுக் கொள்வீரானால் இந்த தேவனோடு சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஒருமுறை தேவனோடு இவ்விதமான சமாதானத்தை ஏற்றுக் கொண்டால் உனது இருதயத்தில் எப்பொழுதும் தேவ சமாதானத்தை (Peace of God) அனுபவிக்கலாம். நமது இருதயத்தில் பரிபூரண சமாதானத்தை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு விரும்புகிறார். விசுவாசிகளான நாம் ஏழு விதமான சமாதானத்தை அனுபவிக்க வேண்டும் என்று வேதாகமம் பேசுகிறது. இவைகள் ஏழு சமாதான சோதனைகள். (test of peace) இந்தவிதமான சமாதானம் உனக்கு இருக்கிறதா என்பதை தயவு செய்து சோதித்துப்பார்த்துக் கொள்.

1) பூரண சமாதானம் (Perfect Peace): 'உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பற்றிப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்' (ஏசாயா.26:3) வேறு ஒரு மொழிப் பெயர்ப்பில் இருந்த பூரண சமாதானம் என்பது, 'சமாதானம், சமாதானம்' குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தவிதமான சமாதானத்தையே தேவன் நமக்கு கொடுக்க விரும்புகிறார். இது எப்பொழுதும் நம்மோடு தங்கி இருக்கும் சமாதானத்தையே தேவன் நமக்குக் கொடுக்க விரும்புகிறார். இது எப்பொழுதும் நம்மோடு தங்கியிருக்கும் சமாதானம் (ever abiding) இது நமது பாவமன்னிப்பின் நிச்சயத்தின் மூலமாகவும், நித்திய ஜீவனின் மூலமாகவும் நமக்குக் கிடைக்கிறது. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்பினால் அவர் இந்த பரிபூரண சமாதானத்தை உனக்குத் தருவார்.

2) பெரிய சமாதானம் (Great Peace) 'உம்முடைய வேதத்தை வாசிப்பவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை' (சங்கீதம்.119:165) தேவனுடைய வசனத்தை வாசிப்பதன் மூலமாக இந்த சமாதானத்தை நாம் பெறுகிறோம் என்று இந்த வசனம் சொல்கிறது. நீங்கள் தேவனுடைய வேதத்தை நேசித்து வாசிக்கிறீர்களா? இரவும் பகலும் வேதத்தில் தியானமாக இருப்பவர்களுக்குரிய ஆசீர்வாதங்களைப்பற்றி முதலாம் சங்கீதத்தில் வாசிக்கிறோம். விசுவாசிகளான நாம் பகல் கனவு காண்பதற்கு பதிலாக வேதத்தை விசுவாசித்து தியானிக்க வேண்டும். "என் ஆத்துமா உமது சாட்சிகளைக் காக்கும்: அவைகளை நான் மிகவும் நேசிக்கிறேன்." (சங்கீதம்.119:167) 'உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்: என்

வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" (சங்கீதம்.119:103) அதனால் நாம் வேதத்தை நேசிப்போமானால் நம்முடைய இருதயத்தில் பெரிய சமாதானம் இருக்கும். நமது வாழ்க்கையில் உண்டாகும் சகல பிரச்சினைகளுக்கும் தேவனுடைய வசனம் பதிலளிக்கும். நாம் வேத வசனத்தை தொடர்ந்து வாசிப்பவர்களாக இருக்க வேண்டியது அவசியம். உனக்கு சொந்த வேதாகமம் இருக்கிறதா? இல்லை என்றால் இன்றே ஒரு வேதாகமத்தை வாங்கு. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து படிக்க ஆரம்பிக்கவும். அப்பொழுது தேவன் உனது இருதயத்தில் பேச ஆரம்பிப்பார். உனக்கு இந்த பெரிய சமாதானத்தின் அனுபவம் கிடைக்கும்.

3) பரிபூரண சமாதானம் (Abundance of Peace) 'இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத் தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.' (எரேமியா.33:6) தேவன் கொடுப்பதையெல்லாம் பரிபூரணமாக கொடுக்கிறார். பரிபூரணமாக கொடுப்பது எப்படி என்று மனிதனுக்குத் தெரியாது. யோவான்.14:27ல் கர்த்தராகிய இயேசு சொல்கிறார்,' சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். உலகம் கொடுக்கிறப் பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை..." அவர் பரிபூரண சமாதானத்தை நமக்குக் கொடுக்கிறார். தங்கள் சூழ்நிலைகள் தங்களுக்கு சாதகமாக இருக்கும்போது மட்டுமே சிலருக்கு சமாதானம் இருக்கும். சில கிறிஸ்தவர்கள் தங்களுக்கு விரோமாக யாராவது இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டால் போதும். உடனே தங்கள் சமாதானத்தை இழந்து விடுவார்கள். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள். சிலருக்கு மன அழுத்தம் (depression) வந்துவிடும். அப்படிப்பட்ட வர்கள் தங்களுக்கு பரிபூரண சமாதானம் இருக்கிறது என்று சொல்ல முடியாதவர்களாக இருப்பார்கள். நமது அனுதின வாழ்க்கையின் அடிப்படையில் நாம் எரேமியா.33:6-ஐ உரிமைப் பாராட்டக் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்". கர்த்தாவே, நீர் வாக்குப் பண்ணின பரிபூரண சமாதானத்தை எனக்கு வெளிப்படுத்தும்" என்று நாம் ஜெபிக்க வேண்டும். தேவன் கொடுத்த இந்த பரிபூரண சமாதானத்தை ஒரு காரியமும் நம்மைவிட்டு நீக்கவோ அல்லது தொந்திரவு செய்யவோ (Penetraters disturb) முடியாது.

4) நிரம்பி வழியும் (Overflowing peace) சமாதானம்:

'ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்: அப்பொழுது என் நீதி சமுத்திரத்தின்

அலைகளைப் போலும் இருக்கும்' (ஏசாயா.48:18) தேவன் கொடுக்கும் சமாதானத்தின் முக்கியமான குணாதிசயம் இதுவாகும். இந்த வார்த்தையில் நதியைப் போல ஓடுகிற சமாதானத்தை தேவன் கொடுப்பதாக சொல்கிறார். நதி எங்கெல்லாம் ஓடுகிறதோ அங்கெல்லாம் உயிர் (life) கொடுக்கப்படுகிறது. நதி அதிக தூரமான இடத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறது. தேவன் நமது இருதயத்தை சமாதானத்தால் நிரப்புகிறார். அது மற்றவர்களுக்கும் வழிந்தோடுகிறது. இவ்வாறாக விசுவாசிகள் சமாதானத்தை உண்டாக்குகிறவர்களாக (peace makers) காணப்படுகிறார்கள். முதலாவதாக, நாம் தேவனோடு சமாதானத்தை பெற்றுக் கொள்ள மக்களுக்கு உதவி செய்கிறோம். இரண்டாவதாக அவர்கள் ஒருவரோடொருவர் சமாதானமாக இருக்க உதவி செய்கிறார்கள். இப்படிப்பட்ட வழிந்தோடும் சமாதானம் உனக்கு இருக்கிறது என்று உண்மையாக உன்னால் சொல்ல முடியுமா? 'நதியைப் போன்ற சமாதானம் எனது ஆத்துமாவை சந்தித்தபோது" (When Peace like a river attend my soul) என்ற பாடலின் வரிகள் மூலமாக ஆயிரக் கணக்கான மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இதை எழுதிய ஸ்பாப்போர்டு ஓராட்டியோ (Spafford Horatio) என்பவர் தன் மகனை மஞ்சள் காய்ச்சலிலும் (Yello fever) தனது நான்கு மகள்களும் கப்பல் சேதத்தினால் (Ship Wreck) இறந்தபொழுது அந்தப் பாடலை எழுதினார். வழிந்தோடும் சமாதானம் பெற்ற விசுவாசிகளுக்கு இவர் ஒரு அழகான மாதிரியாகும். அவரது சமாதானத்தினால் நிறைந்த இந்தப் பாடலானது அநேகருக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. துக்கத்திலும், வேதனையிலும் இந்த வழிந்தோடும் சமாதானத்தை வெளிப்படுத்துவதன் மூலமாக அநேகர் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தயவு செய்து அந்த வழிந்தோடும் சமாதானத்தை தேவன் உனக்குத் தரும்படி வேண்டிக்கொள்.

<u>**5) எல்லா புத்திக்கும் மேலான சமாதானம்**</u> **(peace which passeth all understanding)** 'நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலிப்பியர்.4:6,7) இந்த சமாதானம் ஜெபத்தின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. அநேக விசுவாசிகள் ஜெபிப்பதற்கு பதிலாக

கவலைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இது துரதிர்ஷ்டவசமானது. இந்த வசனத்தில் கவலைப்படுவதற்கு பதிலாக ஜெபிக்க வேண்டும் என்று தேவ வசனம் சொல்கிறது. எல்லா புத்திக்கும் மேலான சமாதானம் என்று சொல்லும்பொழுது அது மனித அறிவுக்கு எட்டாத மனிதனால் முடியாத ஒரு சமாதானம். ஜெபம் தேவனால் மனிதனுக்கு ஏற்படுத்தப்பட்ட அற்புதமான ஏற்பாடாகும். ஜெபம் என்று சொல்லும்போது நமது சொந்த தேவைகளுக்காக ஜெபிப்பதுதான் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் இந்த வசனம் சொல்லுகிறது நமது ஜெபத்திற்கு பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாகவே நமது அறிவுக்கு எட்டாத சமாதானத்தை அவர் தருகிறார். 'இயேசுவில் நமக்கு எப்படிபட்ட அற்புதமான நண்பர் இருக்கிறார்" (What a friend we have in jesus) என்ற பிரபலமான பாடலின் வரிகள் தொடர்ந்து சொல்கின்றன "ஓ எவ்வளவான சமாதானத்தை நாம் அடிக்கடி இழந்துபோகிறோம். ஓ..எவ்வளவான சமாதானத்தை நாம் அடிக்கடி இழந்து போகிறோம். ஓ..எவ்வளவு அவசியமில்லாம வலிகளை நாம் தாங்குகிறோம். இதற்கெல்லாம் காரணம் நாம் தேவனிடம் நமது சகல தேவைகளையும் எடுத்துச் செல்லாதததுதான்" (Oh what peace we often for feit, oh what heedless pain we bear. All be do not carry, everything to god in prayer.") என்று நமக்கு உணர்த்துகின்றன. ஆமாம் நாம் ஜெபிக்காமல் இருக்கும்போது தேவ சமாதானத்தை நாம் புறக்கணிக்கின்றோம். சில நேரங்களில் நாம் கேட்பதை தேவன் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் தேவ சமாதானம் நமது அறிவுக்கு எட்டாத வகையில் நமக்குக் கிடைக்கிறது. அதுவே ஒரு ஜெபிக்கும் கிறிஸ்தவனின் ஒப்பற்ற அனுபவம். நீங்கள் ஜெபிக்கும் உங்கள் அன்பானவரின் ஜீவனை ஒருவேளை தேவன் உங்களுக்கு கொடுக்காமல் இருக்கலாம். ஆனால், தேவன் உங்கள் இருதயத்தை தமது சமாதானத்தால் நிரப்புவார். தேவன் நமது ஜெபத்திற்கு பதில் தருவதன் மூலமாக நமக்கு சமாதானம் கிடைப்பதில்லை. அதற்கு பதிலாக, நாம் ஜெபிப்பதன் மூலமாகவே நமக்கு சமாதானம் கிடைக்கிறது என்பதை தயவு செய்து நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லா புத்திக்கும் எட்டாத இந்த தேவ சமாதானம் உங்களுக்கு கிடைக்க வில்லையானால் நீங்கள் சரியாக ஜெபிக்க வில்லை என்று பொருள். தற்கால கிறிஸ்தவம் (popular chiristianity) இந்த விலை யேறப்பெற்ற சத்தியத்தை அறியாமல் இருக்கிறது. நீ எதைக் கேட்டாலும் தேவன் தருவார்' என்று விசுவாசிகளை ஊக்குவிக்கிறது. நமது சுயநலத் திட்டங்களை நிறைவேற்றும்

கருவியாக ஜெபமானது பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய கிறிஸ்தவம் (God's Christianity) நமது எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை தருகிறது. அது ஜெபத்தின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது.

6) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சமாதானம் (Peace of the Lord Jesus Christ) " (யோவான் 14:27) சமாதானத்துக்கு ஏற்ற மிக முக்கியமான வசனமாக இந்த வசனத்தை நான் குறிப்பிடுவேன். 'தமது சமாதானத்தை" நமக்கு தருவதாக கர்த்தராகிய இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார். அவரது சமாதானத்தைப்பற்றி ஏதாவது உனக்குத் தெரியுமா? அது கர்த்தராகிய இயேசுவின் இருதயத்துக்குள் இருந்த சமாதானம். அவரது சகல ஞானம், அறிவு மற்றும் அவரது மேலான ஆளுகை (Sovereignty) மூலமாக அந்த சமாதானம் அவருக்குக் கிடைத்தது. அவர் முடிவை ஆரம்பத்திலிருந்தே அறிந்திருக்கிறார். (end from the beginning) அதனால் அவருக்கு கவலை இல்லை. அவர் சகலத்தையும் சீர்படுத்தி வைத்திருக்கிறார் (Ordained). அவரே சகல தீர்மானத்தையும் தாமாகவே எடுத்தார். அவருக்குப் போட்டியாக ஒருவரும் இல்லை (no competition) அவருக்கு ஒருவரும் சவால் விடவில்லை. அவரை எதிர்த்து வெற்றி கொள்ளத்தக்க விரோதி அவருக்கு ஒருவரும் இல்லை. அதனால் அவருக்கு முழுமையான நிரந்தர சமாதானம் இருக்கிறது. அதிசயத்திலும் அதிசயம் என்னவென்றால் அந்த சமாதானத்தை அவர் நமக்கு கொடுக்க விருப்பமுள்ளவராக இருக்கிறார் என்பதே. நாம் அந்த சமாதானத்தால் முழுமையாக நிறைந்துவிட முடியாது. அதனால் அவர் தமது சமாதானத்தை நமக்கு கொடுப்பதாக சொல்கிறார். அதனால், நாம் ஜெபிப்போம். "கர்த்தாவே, எனக்கு உமது சமாதானம் வேண்டும். மற்ற எந்த சமாதானமும் எனக்கு வேண்டியதில்லை, உமது இருதயத்திலிருந்த அந்த சமாதானம் எனக்கு வேண்டும்" என்று வேண்டுவோம். பிரியமானவர்களே, இந்த உலகத்தைக் குறித்து தேவன் வைத்திருக்கும் திட்டம், தீர்மானங்களை நாம் அறிந்துகொள்ளும் அறிவைப் பொருத்து இந்த சமாதானமானது நமக்குக் கிடைக்கிறது. அந்தத் திட்டங்கள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிருஷ்டிப்பின ஆரம்பத்திலிருந்து படைப்பின் வரலாறுகளும், புதிய வானம், புதிய பூமி, வரலாற்றின் முடிவில் நிகழும் காரியங்கள் அனைத்தும் வேதத்தில் விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளன. நாம் அவைகளை முழுவதும் பூரணமாக

நம்புவதன் மூலமாக இந்த சமாதானத்தை அனுபவிக்க ஆரம்பிக்கலாம். தேவன் எவ்வாறாக இந்த உலகத்தை பார்க்கின்றாரோ அதே கண்ணோட்டத்தில் நாம் பார்க்கக் கற்றுக்கொள்வோம். அது நமது இருதயத்தை அவரது சமாதானத்தினால் நிரப்பும்.

7) ஆளுகை செய்யும் சமாதானம் (Ruling Peace) "தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது..." (கொலோசேயர் 3:15) இந்த வசனம் ஆளுகை செய்யும் சமாதானத்தைக் குறித்துப் பேசுகிறது. நமது வாழ்க்கையை முழுமையாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்போது இந்த சமாதானம் நமக்குக் கிடைக்கிறது. நமது வாழ்க்கையை நாமே, நமது இஷ்டப்படி நடத்தும் வரையிலும் தேவனுடைய சமாதானம் நமக்கு கிடைப்பதில்லை. 'இயேசுவுக்கே ஒப்புவித்தேன் யாவையும் தாராளமாய், இரட்சிப்பின் முழு மகிமையையும், சந்தோஷமும், பாதுகாப்பையும் இப்பொழுது நான் உணருகிறேன். அவரது நாமத்திற்கே மகிமை" (all to Jesus I surrender, how I feel the sacred flame, on the try of full salvation flory to his name) என்ற பாடலை எழுதினவரோடு சேர்ந்து உண்மையாக உன்னால் சொல்ல முடியுமா? எல்லாவற்றையும் இயேசுவுக்கு ஒப்புவித்து விட்டேன் என்று. இந்த நாட்களில் அதிக அலைச்சல் உண்டாகி இருக்கிறார். காரணம் இந்த சமாதானம் இன்மையினால். உனது வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடு: அப்பொழுது ஆளுகை செய்யும் சமாதானத்தை நீ அனுபவிக்கலாம். 4) நிழல்(Shade) 'சங்கீதம் 121:5,6 பாலைவனப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு சூரிய ஒளிக்கதிர்கள" (Stropkes), சந்திரனின் கதிர்களும் மிகவும் ஆபத்தானவைகள். அடிக்கடி அதனால் மரணம் சம்பவிப்பதுண்டு. தேவன் இந்த வாக்குத்தத்தத்தை கொடுத்தபொழுது, இந்த இரண்டு தாக்குதல்களிலுமிருந்து காப்பதாக சொன்னது அவர்களுக்கு அது மிகவும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தமாகும். மேலே சொல்லப்பட்ட வசனத்தில் கர்த்தர் நமது நிழலாக இருப்பதாக வாக்குப் பண்ணுகிறார். இஸ்ரவேல் மக்கள், தேவன் தங்களது நிழலாக இருப்பதைக் அனுபவித்தார்கள். அவர்கள் சூரிய, சந்திர ஒளிக்கதிர்களிலிருந்து தாக்கப்படாமல் காக்கப்பட்டனர். இன்று நமக்கு ஆவிக்குரிய விதத்தில் இந்தக்காரியம் பொருந்துகிறது. தேவனற்ற, பாதுகாப்பற்ற (hostile) உலகத்தில் கர்த்தராகிய இயேசு நமக்கு இந்த உலகத்தில் ஒரு விசுவாசிக்கு இருக்கும். பாடுகளைக் குறித்துப் பேசுகிறது. மத்தேயு.13:5,6,20,21 வசனங்களை தயவு

செய்து வாசித்துப் பாருங்கள். விதைப்பவனைப் பற்றிய உவமையில் சூரியன் உலர்த்தும் செடியானது காய்ந்து போகும் காரியம், ஒரு கிறிஸ்தவனின் சாட்சியின் நிமித்தம் உண்டாகும் உபத்திரவங்கள், பாடுகள் முதலானவற்றைக் குறிக்கும். தங்கள் சாட்சியின் காரணமாக அனைத்து விசுவாசிகளும் உபத்திரவங்களை எதிர்கொண்டே ஆகவேண்டும்".

4) '(2 தீமோத்தேயு.3:12) '5.." (யோவான்.16:33) அப்படிப்பட்ட உபத்திரவ காலங்களில் கர்த்தர் தாமே நமக்கு நிழலாக இருப்பார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடமிருந்து கிடைக்கும் மற்றொரு ஆசீர்வாதம் இந்த நிழல். 6) சங்கீதம்.91:1) உபத்திரவத்தின் சமயத்திலே நாம் சர்வ வல்லவருடைய நிழலிலே தங்கி இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது விசுவாசிகளான நமக்கு மிகவும் அவசியமாகும். உலக முழுவதிலும் விசுவாசி களுக்கு, விரோதமான உபத்திரவங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் கர்த்தரே நம்மை மூடிப் பாதுகாத்து பத்திரமாக நடத்துகிறார். 'கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்'. இது நம் ஒவ்வொரு வருக்கும் மிகவும் விலையேறப்பெற்ற வாக்குத் தத்தமாகும். சர்வ வல்லவரின் நிழலிலே இருக்கும் நமக்கு வரும் உபத்திரவங்களைப் பற்றி நமது பதில் என்ன? ஒரு உபத்திரவப்படும் விசுவாசிக்கு மூன்று விதமான மறுமொழிகள் (Response) சிபாரிசு செய்யப் படுகின்றன. (1) கர்த்த்தர் மேல் சார்ந்து கொள். (lean on the lord) விசுவாசிகளான நாம் உபத்திரவப்படுத்தப்படும்போது, கர்த்தர் இப்படிப்பட்ட உபத்திரவங்கள் நமக்கு வரும் என்று சொல்லி இருப்பதை: எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவரது நாமத்தின் நிமித்தமாக நாம் பாடுபடும்போது 'சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்' என்பதாக கர்த்தராகிய இயேசு சொல்லி இருக்கிறார். (மத்தேயு.5:12) அதோடு கூட அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதும் இல்லை' என வாக்குப் பண்ணி இருக்கிறார். (எபிரேயர்.13:5) நாம் உபத்திரவப் படும்போது இவைகளை நினைவில் கொள்வோம். சங்கீதக்காரன் உபத்திரவப்பட்டபோது அதைத்தான் சொன்னான், "மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பின போது, கர்த்தர் தாமே நமது பக்கத்திலிரா விட்டால் அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்" (சங்கீதம்-124:1-3) இந்த வசனங்களில் 'கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்' என்ற சொற்றொடர் இரண்டு

முறை வருகிறதைப் பார்க்கிறோம். மற்றவர்கள் உனக்கு விரோதமாக இருக்கும் பொழுது, கர்த்தர் உனது பக்கத்தில் - உனது பட்சத்தில் - இருக்கிறார். மற்ற எல்லாரைப் பார்க்கிலும் அவர் உனக்கு மிகவும் அருகாமையில் இருக்கிறார். அதனால் அவர் மேல் சாய்ந்து (lean) கொள். உறுதியாக (hard) சார்ந்துகொள். உலக முழுவதிலும், ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படும்போது கர்த்தர் மேல் சார்ந்து கொண்டதினால் கொடிய உபத்திரவங்களையும் வெற்றிக் கொண்டார்கள். நாம் அரசாங்கத்துக்கோ அல்லது மனித உரிமைக் கழகத்திற்கோ மனு செய்வோமானால் எப்பொழுதும் நாம் எதிர்பார்க்கும் (expected relief) கிடைக்கும் என்று நினைக்க முடியாது. எனவே உபத்திரவ சமயங்களில் நாம் வேறு ஒன்றும் செய்யக்கூடாது. கர்த்தரையே சார்ந்து கொள்ள வேண்டும். நமது கர்த்தர் நமது அடைக்கலம் அவரே நமது மறைவிடம் (hiding place) நாம் துன்பப் படும்போது அவரையே நினைத்துக் கொள்ள வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு 'தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்தவர்' (எபிரேயர் 12:3) அதனால் அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். தயவு செய்து உங்கள் மனதை திறந்து மற்றவர்களிடம் ஆலோசனைக்காக செல்லாதிருங்கள். கர்த்தராகிய இயேசுவோடு மிகவும் நெருக்கமாக நடவுங்கள். அவரது காட்சி உனது கண்களை நிரப்பட்டும். கர்த்தராகிய இயேசுவின் மார்பில் சாய்ந்து கொள்ளுங்கள். எச்சரிக்கையாக இருங்கள். நினைவில் கொள்ளுங்கள். வஞ்சகனாகிய (sinister) பிசாசின் நோக்கம் நமக்கு உடல் ரீதியாக உபத்திரவங்களைக் கொடுத்து, கர்த்தரோடு நடக்கும் நமது ஆவிக்குரிய நடத்தையில் தடை (break) கொண்டு வருவான். எனவே, ஏமாந்து போக வேண்டாம். கர்த்தர் நமது பக்கத்திலிருக்கிறார்.

2) உபத்திரவப்படுத்துவர்களை நேசியுங்கள் (Love the persecutor) சத்துருக்களை சிநேகியுங்கள் என்று கிறிஸ்து உலகமுழுவதிலும் அறியப்பட்டு இருக்கிறார். கிறிஸ்துவல்லாதவர்கள் (non Christians) கூட 'உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்' என்று, தமது சீஷர்களுக்கு கிறிஸ்து போதித்ததை அறிந்திருக்கிறார்கள். அவர் போதித்ததை அவரது சீஷர்களான நாம் கடைபிடிக்க (practice) வேண்டும். உபத்திரவப்படுத்துகிறவர்களை வெறுக்க (hate) ஒரு விசுவாசிக்கு உரிமை கிடையாது. நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் நாம் அவர் சிலுவையில்

தம்மை உபத்திரவப்படுத்தினவர்களை மன்னித்தார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்: உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்: உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு 5:44) உங்களை அவர்கள் துன்பப்படுத்தும் போது எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்க வேண்டாம். இதை நன்றாக மனதில் வைத்துக்கொள். இந்த வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளைக் கவனித்தீர்களா? சிநேகி(Love), ஆசீர்வதி (Bless), நன்மை செய் (Do Good), ஜெபம் பண்ணு (Pray) நாம் செய்யும்படி நமக்கு காத்தர் போதிக்கிற காரியமானது வியப்பூட்டும் (amazing) வகையில் அமைந்துள்ளது. நம்மை உபத்திரவப்படுத்து கிறவர்களுக்கு நமது பதில் இதுவே, 'நீ எங்களை துன்பப் படுத்தினால், அதிகமாக உபத்திரவப்படுத்தினால்: நாங்கள் உன்னை அதிகமாக நேசிப்போம், அதிகமாக ஆசீர்வதிப்போம், அதிக நன்மை செய்வோம், உனக்காக அதிகமாக ஜெபம் பண்ணுவோம்' இப்படிப்பட்ட பதிலைத்தான் நம்மை உபத்திரவப் படுத்துகிறர்களுக்கு நாம் கொடுக்க வேண்டும். வேறுவிதமான பதிலைக் கொடுப்பவர்கள் உண்மையாக கிறிஸ்துவைப் போல உள்ளவர்கள் அல்ல. (not Christ like) நமது சத்துருக்களை நாம் சிநேகிக்க முடியாவிட்டால் நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட தகுதி அற்றவர்கள். வெறுப்புக்கு ஒருபோதும் நமது இருதயத்தில் இடமளிக்கக்கூடாது. சபையின் முதல் இரத்த சாட்சியாக (martyn) ஸ்தேவான் (Stephen) கிறிஸ்துவின் ஆவியை உண்மையாக பெற்றிருந்தான் என்று சொல்ல முடியும். தன்னை சாகத்தக்கதாக கல்லால் அடிக்கும்போது,' அவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.' (அப்போஸ்தலர்.7:60) இது உண்மையாகவே நாம் செய்ய மிகவும் கடினமான காரியம். அதே சமயத்தில் இதைவிட குறைவான காரியத்தை நமது எஜமான் (master) அங்கீகரிக்கமாட்டார். 3) பரிசுக்காக பார்த்திரு (look for the reward): 'என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்: சந்தோஷப்பட்டு களிகூருங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாக இருக்கும்' (மத்தேயு

5:11,12) இந்த வாக்குத்தத்தத்தின் உதவியினால் நாம் உபத்திரவங்களை சந்தோஷமாக சகிக்க, கடந்து செல்ல முடியும். கர்த்தராகிய இயேசு நம்மை எப்பொழுதும் பலனுக்காக பார்த்துக் கொண்டிருக்கிறார். ‘7" (வெளிப்படுத்தல்.22:12) ‘8’ (1 கொரிந்தியர் (15:58) மேலும் வேத வசனம் சொல்கிறது ‘9" (2 தீமோத்தேயு.2:12) எனவே எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் நிமித்தம் பாடுபட்டால் நீங்கள் ஆளுகை செய்யும்படியாக உங்களை தேவன் ஆயத்தப்படுத்துகிறார் என்று பொருள். ‘பகலில் சூரியனாவது இரவில் சந்திரனாவது உன்னை சேதப்படுத்தாது" இதன் பொருள் சூரியனையும், சந்திரனையும் தேவன் நீக்கிவிடுவார் என்பதல்ல. ஆனால் அவைகளால் உண்டாகும் தீமைகளால் உனக்கு பாதிப்பு வராது. சூரிய வெப்பம் இருக்கவே இருக்கும். ஆனால் அது உன்னை கொன்று போடமுடியாது. இதன் ஆவிக்குரிய பொருள்: உன்னை உபத்திரவப்படுத்துகிறவர்கள் உனக்கெதிராக செயல்பட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆனால் அவர்களின் தீமைகள் உன்னை தோல்வியுற செய்யாது. உபத்திரவம் என்னும் உஷ்ணத் தாக்குதலில் இருந்து நம்மை பாதுகாக்கும் நிழலாக கர்த்தராகிய இயேசு இருக்கிறார். (5) பரிசுத்தம் (Sanctitdy) ‘10" (சங்கீதம் 121:7) விசுவாசிகளான நாம் பரிசுத்த வாழ்க்கை வாழும்படியாக தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்று அறிந்திருக்கிறோம். அதற்கு முன்பாக நாம் பாவமுள்ள வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தோம். பரிசுத்த ஆவியானவராகிய தேவனால் நாம் பரிசுத்த வாழ்க்கை நடத்த பழகிக்கொண்டோம். ‘நம்மை எளிதில் ஏமாற்றும் பாவத்தை நாம் தள்ளிவிடவேண்டும். ‘(எபிரேயர் 12:1) இது உண்மையிலேயே இன்று ஏமாந்து போகிறார்கள். காரணம் பரிசுத்த வாழ்க்கை தானாகவே வந்துவிடும் என்ற எண்ணத்தினால் நாம் எதுவும் செய்யாமல் தேவனே எல்லா வற்றையும் செய்வார் என எதிர்பார்ப்பது தவறு. அப்படியாக தேவனே நம்மை பரிசுத்தமாக வைத்துக்கொள்ள முடியாது. தேவன் நமது ஆத்துமாவை காப்பார், எல்லா தீங்குக்கும் விலக்கிக் காப்பார் என்ற வாக்குத் தத்தமானது நமது விருப்பத்தையும், தயார் நிலையையும் பொறுத்தது. நீ பரிசுத்தமான வாழ்க்கை வாழ ஆசைப்படுகிறாயா? அப்படியானால் தேவன் உனக்கு அப்படிப்பட்ட பரிசுத்த வாழ்க்கையை கொடுப்பார். ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு பொதுவான விரோதி உண்டு. அவன் பிசாசு. அவன் நமது

வாழ்நாள் முழுவதுமாக தொடர்ந்து நம்மை சோதித்துக் கொண்டே இருப்பான். ஆனால், தேவன் நமக்கு சத்துருவினால் வரும் ஒவ்வொரு சோதனையிலும் வெற்றியைத் தருவார் என்று வாக்குப் பண்ணி இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நான் மறுபடியும் பிறந்து கிறிஸ்துவனாக மாறின அன்று 1 கொரிந்தியர் 10:13ஐ மனப்பாடம் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. "சோதனையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டியது ஒரு விசுவாசிக்கு முக்கியமான காரியமாகும். இங்கு கேள்வி என்னவென்றால் எப்படி சோதனையை எதிர்கொள்வது (deal)? இதற்கு பதிலாக மூன்று எளிய வார்த்தைகள் உள்ளன.அவை ஜெபம் (Prayer), முன் எச்சரிக்கை (precaution) மற்றும் வாக்குத்தத்தம் (promise) (1) ஜெபம்: கர்த்தராகிய இயேசு தமது சீஷர்களுக்கு கற்பித்த ஜெபத்தை நினைவுபடுத்த முடிகிறதா? அதில் கடைசி பாகம் இவ்வாறு இருக்கிறது. 'எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று இரட்சித்துக் கொள்ளும்————————" மத்தேயு.6:13 இந்த வார்த்தைகளின்படி பார்க்கும்போது சோதனைக்கு உட்படாமல் இருக்கும்படி பிதாவிடம் வேண்டிக்கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார் என்று பார்க்கிறோம். அநேகர் இந்த ஜெபத்தை மறந்துவிட்டோம். நாம் சோதனைகளில் சிக்கி பாவம் செய்கிறவர்களாக காணப்படுகிறோம். இந்த ஜெபம் மிக முக்கியமானதாக கருதினபடியினால் கர்த்தராகிய இயேசு இதை மாதிரி ஜெபத்தில் இணைத்தார். நாம் எதிர்கொள்ளுகிற சோதனைகளைப் பற்றி தேவனிடம் பேச வேண்டியது அத்தியாவசியமானதாகும். வெற்றிக்கு முதல்படி இதுவே. நீ எதிர்கொள்ளுகிற சோதனைகளைப் பற்றி பேசினால் தேவன் கோபப்படமாட்டார். உண்மையாக, உனது சோதனையை நீ இனங்கண்டு (identity) அதற்கு எதிராக போராடி வெற்றிக் கொள்ள உன்னைப் பெலப்படுத்தும்படி தேவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டிய அவசியம். சோதனையே இல்லை என்று ஏமாற்றிக் கொள்வது (pretend) கிறிஸ்தவர்களின் பொதுவான பாவமாக இருக்கிறது. அடிக்கடி கிறிஸ்தவ போதகர்களும், தலைவர்களும் (Leaders) இந்த பிரிவின் கீழ் வருகிறார்கள். சோதனை இல்லை என்று ஏமாறுகிற சமயத்தில் ஒருவன் பாவத்தில் விழுந்த பிறகு பாவமே இல்லை என்று ஏமாற்றிக்கொள்ளும் நிலமைக்கு ஆளாகிறான். உங்கள் சோதனைகளைப் பற்றி கர்த்தரிடம்

பேசிக்கொள்ளும் பொழுது அது அந்த சோதனை வருவதற்கு முன்பாக ஆயத்தப்படுவதற்கு வசதியாக இருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே ஜெபியுங்கள். (2) முன் எச்சரிக்கை (Precaution) 'குணமாக்குதலை விட முன் எச்சரிக்கை நல்லது" (Prevention is better than cure) என்ற வழக்கம் சொல்லை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அது பொருந்தும். சோதிக்கப்படும்படியான சூழ்நிலைகளை கவனித்து தவிர்ப்பது ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு அவசியமாகும். அநேக கிறிஸ்தவர்கள் இதில் தவறுகிறார்கள். பிசாசு வைத்திருக்கும் வலைக்குள் தொடர்ந்து நடந்து, நன்றாக அறிந்தே அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஒரு காகம் (crow) நமது தலைக்கு மேலாக பறந்து செல்வதை நாம் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அது நமது தலையில் கூடு கட்டுவதை தடுக்கமுடியும். அநேக நேரங்களில் நாம் பார்க்கிற பார்வையில் சோதிக்கப்படுகிறோம். முதலில் பார்க்கும் பார்வையை தவிர்க்க நம்மால் முடியாது ஆனால் மறுமுறை திரும்ப பார்க்கும் பார்வையை தடுக்க நம்மால் நிச்சயமாக முடியும். கர்த்தராகிய இயேசு பரிசுத்தத்தைக் கொடுக்க விரும்புகிறார். அதனால் நீங்கள் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால் மற்ற காரியங்களை அவர் பார்த்துக்கொள்வார். உதாரணமாக:- ஒரு குடிகாரன் இரட்சிக்கப்பட்டு குடிப்பழக்கத்தை விட்டுவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவனது வீட்டுக்குச் செல்ல இரண்டு சாலைகள் இருக்கிறது என்றால் அவன் எந்த சாலை வழியாக வீட்டுக்குச் செல்வான்? அவன் அந்த மதுபானம் இருக்கும் சாலையை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். இல்லையென்றால் அவன் அவ்வழியாக சென்றால், எப்படியாவது சோதிக்கப்படுவான். மதுபானம் பண்ணும் நிலமைக்கு ஆளாவான். யோசேப்பு செய்ததை நினைவில் கொள்ளுங்கள். அவன், போத்திபாரின் மனைவியினால் பயங்கரமாக சோதிக்கப்பட்டான். அப்பொழுது அவன் அந்த அறையை விட்டு ஓடினான் என்று வேதம் சொல்லுகிறது. பாவத்துக்கு தூரமாக ஓடுவது மட்டுமல்ல, பாவ சோதனைக்கும் பயந்து ஓட வேண்டும். சில புத்தகங்கள், செய்திதாள்கள் அல்லது இதழ்கள் (Magazines) நமக்கு சோதனையிலிருந்து தப்பிக்கொள்ள விரும்பினால் அப்படிப்பட்டவைகளை வீட்டை விட்டு அகற்று, அழித்துப்போடு. பவுல், தீமோத்தேயுக்கு அறிவுரை சொல்கிறான். "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகி" (2

தீமோத்தேயு 2:22) ஓடு (flee) என்ற வார்த்தையின் பொருள் என்னவென்றால் சோதிக்கப்படுகிற இடத்திலே இருக்கக்கூடாது.

(3) வாக்குத்தத்தம்:- (Promise) : நமது பரிசுத்தம், விசுவாசிகளான நமது பெலத்தை சார்ந்ததாக இல்லை. ஆனால் அது தேவனுடைய வாக்குத்தத்தங்களை சார்ந்ததாக இருக்கிறது. நாம் சோதிக்கப்படும்போது சோதனைக்கு தப்பும்படியான வழியை தேவன் காட்டுவதாக வாக்குப் பண்ணி இருக்கிறார். "12" (1 கொரிந்தியர்.10:13) இந்த விலையேறப்பெற்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஒவ்வொரு விசுவாசியும் விசுவாசிக்க வேண்டும். முதலாவதாக: இந்த வசனம் சொல்லுவது என்னவென்றால் நாம் சோதிக்கப்படும் சோதனை நமக்கு மட்டுமே என்பதல்ல (not unique): மற்ற விசுவாசிகளும் இதுபோன்றே சோதிக்கப பட்டிருக்கிறார்கள். அதனால் நம்மில் ஒருவரும் எனது சோதனை மற்றெல்லாருடையதை விட பெரியது என்று சொல்ல முடியாது. அதனால் நாம் உதவியற்று பாவத்தில் விழவேண்டிய அவசியமில்லை. இரண்டாவதாக: எவ்வளவு பெரிய கொடிய சோதனையாக இருந்தாலும்: தேவன் உண்மை உள்ளவராக இருக்கிறார். அவர் நமது பக்கத்தில் இருக்கிறார். 'நம்மை விட்டு விலகுவதுமில்லை: கைவிடுவதுமில்லை" என்று வாக்குப் பண்ணியிருக்கிறார். (எபிரேயர்.13:5) சோதனை வரும்பொழுது கர்த்தர் என்னை விட்டு விடமாட்டார். நீ தனியாக சோதனையை எதிர்கொள்ளவில்லை. சாத்தான் கதவைத் தட்டும்போது நாம் கர்த்தராகிய இயேசுவை பதில் சொல்லும்படி வேணடிக்கொள்ள வேண்டும். இதுவே இரண்டாவதாக நாம் கற்கும் பாடமாகும். இந்த வசனம் கற்றுத்தரும் மூன்றாவது பாடம் சோதனையோடு கூட தப்பிச் செல்லும் போக்கையும் தேவன் உண்டாக்குவார்.இந்த வாக்குத்தத்தத்தை நாம் நம்ப வேண்டும். சோதனை இருக்குமானால் சோதனையோடு கூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான வழியையும் வைத்திருக்கிறார். நாம் அந்த வழி என்ன என்று பார்க்க வேண்டும். நீ சோதனைக்கு உட்பட்டிருக்கும்போது தேவன் உனக்காக ஏற்படுத்தி வைத்திருக்கும்வழி, தப்பிச்செல்லும் மார்க்கம் என்னவென்று பார்க்க வேண்டும். அந்த வழியில் சென்றால் நீ சோதனையிலிருந்து தப்பிக்கொள்ளலாம். அந்த வழியை அறிந்து, அதில் செல்ல மறுப்போமானால் நாம் நிச்சயமாக பாவத்தில் விழுந்து போவோம். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புங்கள். நீங்கள் எப்பொழுதும் வெற்றி பெறுவீர்கள். 'கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்' (சங்கீதம்.121:7)

(6) பாதுகாப்பு (Security) '13" (சங்கீதம் 121:8) இது கர்த்தரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் ஆறாவது ஆசீர்வாதம் அல்லது உதவி. நாம் எப்பொழுதும் நமது கர்த்தரின் கவனிக்கிற கண்களின் (watchful eye) கீழ் இருக்கிறோம். நம்மை கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவர் எடுத்துக்கொள்கிறார். ஒரு நாட்டின் மிக் முக்கியமானவர் (VIP) வெளியே புறப்பட்டு சாலையில் செல்லும்போது அவரை சுற்றிலும் அதிகமான பாதுகாப்பு போடப்படும். பாதுகாவலர் பாதுகாவலர்களின் தளபதி (Security contingent) அந்த மிக முக்கிய நபர் எல்லா நேரத்திலும் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். அது அவரது கடமை. ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருப்போரானால் அவருக்கு இன்னும் அதிகமான கவனம் செலுத்திய பாதுகாப்பு செய்வார்கள். ஒரு குறிப்பிட்ட நகரத்திற்கோ அல்லது மாநகரத்திற்கோ ஜனாதிபதி போவாரானால், பாதுகாப்பாளர்கள் ஒரு வாரத்திற்கு முன்பாகவே சென்று பாதுகாப்பைப் பலப்படுத்து வார்கள். அப்படிப்பட்ட மிக முக்கியமானவர்களை போல நாம் இல்லாவிட்டாலும், தேவன் நமது போக்கையும், வரவையும் பாதுகாப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார். தேவன் இந்த பிரபஞ்சத்தில் மிகப்பெரிய சேனை (largest army) வைத்திருக்கிறார். அவைகள் அவரது கட்டளைக்குக் காத்திருக்கின்றன. அவரது கட்டளையின்படி செய்யக் கணக்கில்லாத தூதர்களின் சேனை அவருக்கு இருக்கிறது. தேவனைவிட நல்லமுறையில் வேறு யாராலும் நம்மை காப்பாற்ற முடியாது. பாதுகாவலர்களால் பாதுகாக்க முடியாத மிக முக்கியமானவர்களின் மரணங்களை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் தேவன் தமது மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் பாதுகாப்பை போல ஒரு மனிதனாலும் செய்ய முடியாது. தேவன் நம்மை பலமான முறையில் பாதுகாக்கமுடியும் என்ற விசுவாசிக்க வேண்டும். தாவீது, சவுல் ராஜாவிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அநேக வருடங்கள் மறைந்து வாழ்ந்தான். அந்த நேரங்களில் அவன் ஒரு குகையில் வாழ்ந்தான். மற்ற சமயங்களில் வனாந்தரத்தில் வாழ்ந்தான். இன்னும் சில வேளைகளில் பழைய கோட்டைகளில் மறைந்து ஜீவித்தான். இவ்விதமாக அவன் அலைந்து கஷ்டங்களை அனுபவித்ததன் மூலமாக அவன் தனது பாதுகாப்பு கர்த்தருடைய கரத்தில்தான் இருக்கிறது என்று உணர்ந்து கொண்டான். அதன்பிறகு கர்த்தரே என் பரிபூரண பாதுகாப்பு (perfect security) என்று அவனால் சொல்ல

முடிந்தது. சங்கீதம்.18ல் தாவீது தனது சகல சத்துருக்களின் கரங்களுக்கும் சவுலின் கரத்திற்கும் நீங்கலாக்கி மீட்டுக் கொண்ட பிறகு தாவீது சொன்ன வார்த்தைகளை இதில் பார்க்கிறோம். '4" (சங்கீதம்.18:2) இந்த வசனத்தில் தாவீது தேவனை ஏழு வார்த்தைகளை உபயோகப்படுத்தி விவரிக்கின்றதைப் பார்க்கிறோம். இந்த ஏழு பெயர்களும் தாவீது, சவுலுக்கு மறைந்து வாழ்ந்த வருடங்களில் தேவன் கொடுத்த பாதுகாப்பைக் குறித்துப் பேசுகின்றன. தாவீது தனது சொந்த அனுபவத்தில் இந்த வார்த்தைகளைச் சொல்கிறான். 'கர்த்தர் எனது கன்மலையும் கோட்டையும்' என்று சொல்கிறான். தேவன் தாவீதுக்குக் கொடுத்த ஏழுவிதமான பாதுகாப்பின் வார்த்தைகளை தயவு செய்து தியானம் செய்யுங்கள். அப்பொழுது தேவன் கொடுக்கும் பரிபூரண பாதுகாப்பினை சிறிதளவு புரிந்துகொள்ளமுடியும். முதலாவதாக தாவீது சொல்கிறான் 'கர்த்தர் என் கன்மலை' (rock) கன்மலை, பாறை என்று சொல்லும்போது, அது உறுதியையும் நிலைத் திருத்தலையும் (stability) குறித்துப் பேசுகின்றன. தாவீது ஒரு பாறைக்கு மறைவில் ஒளிந்து கொண்டிருந்தபொழுது அவனை ஒருவராலும் தாக்க முடியவில்லை. தேவனை நமது பாறையாக நாம் அனுபவிக்க வேண்டும். தேவன் நிமித்தமாக நமது சத்துருக்கள் நம்மை நெருங்க முடியாது. தாவீது பாறையின் மேல் நின்றபொழுது, ஒரு சிங்கத்தைப்போல தைரியமாக இயேசு கிறிஸ்து நமது பாறையாக இருப்பாரானால் நாமும் பயமில்லாதவர்களாக இருப்போம். மக்கள் நமக்கு எதிராக திட்டமிட்டு நம்மை தாக்க தீர்மானித்தாலும் அவர்களே தோற்றுப்போவார்கள். ஏன் என்றால் நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ற பாறையின் மேல் இருக்கிறோம். நமது நாகரீக காலத்தில் (culture) பொல்லாத சக்திகளைக் குறித்து அநேகர் பயந்து நடுங்குகிறார்கள். ஆனால், கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு அப்படிப்பட்ட பொல்லாத சக்திகளைப் (evil powers) பற்றிய பயம் இல்லை. தேவ வசனம் சொல்கிறது 'உலகத்தில் இருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்' (1 யோவான் 4:4) அதனால் எந்த பொல்லாத கெட்ட சக்திக்கும் நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. இரண்டாவதாக தேவன் எனது 'கோட்டை' (fortness) (சங்கீதம் 18:2) என்று விவரிக்கிறான். பழங்காலங்களில் படைப் பாதுகாப்பிற்கு (military defence) கோட்டைகள் மிகவும் அவசியமாக இருந்தன. தாவீது, சவுல் அரசனால் சூரையாடப்பட்ட (pursued) பொழுது அவன்

அடைக்கலமான வனாந்திரங்களில் (strong holds) இருந்தான் என்று 1 சாமுவேல் 23:4ல் வாசிக்கிறோம். பலத்த துருகம் அல்லது கோட்டை, சத்துருக்கள் வரமுடியாதபடி நமக்கு பலத்த பாதுகாப்பை தருகின்றன. அந்தவிதமான பலத்த பாதுகாப்பில் தங்கி இருந்தபொழுது தாவீது நினைத்திருப்பான் 'தேவன்தான் தனது மெய்யான பலத்த பாதுகாப்பு' என்று. விசுவாசிகளான நாமும் கிறிஸ்துவுக்குள் தான் நாம் பாதுகாப்பாக இருக்கமுடியும் என்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். 'கிறிஸ்துவுக்குள்' என்ற ஆழமான வார்த்தை (expression) எபேசியரின் புத்தகத்தில் அநேக தடவைகள் வருவதைப் பார்க்கிறோம். கிறிஸ்துவுக்குள் நாம் ஆவிக்குரிய பிரகாரமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறோம். அபாயமான சூழ்நிலைகளில் எந்த ஒரு அரசனும் கோட்டையை விட்டு வெளியே வரும் அளவிற்கு மதியீனனாக இருக்க மாட்டான். நமது கோட்டைக்குள் குடியிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நமது உறவினர்கள், அயலகத்தார், வெளிஆட்கள் மூலமாக சத்துரு நமக்கு தீமை செய்ய திட்டமிடுவான். ஏன் என்றால் நாம் கர்த்தராகிய இயேசுவுக்கு சொந்தமாக இருப்பதினால். அதனால் நாம் கலங்கி விடக் கூடாது. ஆனால், நமது கோட்டையாக இயேசுவில் பாதுகாப்பாக இருக்கப் பழக வேண்டும். நாம் எதிர்த்துப் போராடவோ அல்லது அவர்கள் மேல் வன்மம் (revenge) வைக்கவோ கூடாது. சத்துரு விரும்புவது என்னவென்றால் நம்மை அந்தக் கோட்டையிலிருந்து வெளியே இழுத்து நமது சொந்த பெலத்தில் நிற்க செய்வதுதான். ஆதனால் நாம் கோட்டைக்குள் பத்திரமாக இருக்கவேண்டும். மூன்றாவதாக. "என் இரட்சகர்" என்று தாவீது சொல்கிறான். (சங்கீதம்.18:2) தனது மதியீனமான காரியங்களினால் தாவீது அனேக தடவைகள் சிக்கலுக்குள் சிக்கிக்கொண்டான். ஆனால் தேவன் அவனை ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்தும் விடுதலையாக்கினார். ஒரு முறை தாவீது விரோதியின் கூட்டத்தில் சிக்கிக்கொண்டான். சவுல் அரசனிடமிருந்து தப்பிக்கொள்ள அவன் மதியீனமாக பெலிஸ்திய அரசனாகிய ஆகீஸின் சேனையில் சிக்கிக்கொண்டான். தாவீதின் வாழ்க்கையில் செய்த பெரிய தவறு அது. ஆகீஸ் ராஜாவின் பிடியில் சிக்கிக்கொண்டோம் என்று தாவீது உணர்ந்தபொழுது அவர் ஒரு பைத்தியக்காரனைப் போல நடிக்க ஆரம்பித்தான். இந்தக் கதையை 1 சாமுவேல் 21ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். ஆனால் தேவன் தமது இரக்கத்தினால் தாவீதை ஆகீஸின் கரத்திலிருந்து விடுதலையாக்கினார். இந்த

அனுபவத்திற்குப் பிறகுதான் அவன் (சங்கீதம் 34:3,7) தேவனுடைய மக்களாகிய நாம் அவரது இரட்சிப்பை அனுபவிக்க வேண்டும். தேவன் முதன் முதலாவதாக நமது பாவ சுபாவத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார். பின்னர் நமது சொந்த மதியீனத்தின் மூலமாக நாம் சிக்கலான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டாலும், சரீர பிரகாரமான நம்மை தீமையிலிருந்து விடுவித்து இரட்சிக்கிறார். சங்கீதம்.124:7ல் ' .. தேவன் விடுவிப்பதைப் பற்றிப் பேசுகிறான். தேவ மக்களைப் பிடிக்க சத்துரு பலவிதமான கண்ணி வலைகளை வைக்கிறான். அந்த வலைகள் விவாக காரியங்களாக இருக்கலாம். வியாபார பங்கு (Business partnership) காரியமாக இருக்கலாம் அல்லது அசுத்தமான உறவாக இருக்கலாம்: ஏதோ ஒரு வலையை விரித்து வைப்பான். பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையில் சில விசுவாசிகள் அவிசுவாசிகளோடு கூட்டு சேர்ந்து கொள்வார்கள். கொஞ்ச காலத்திலேயே தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்து கொள்வார்கள். ஆனால் பின்னர்தான் தெரியும் அந்த சூழ்நிலையிலிருந்து விடுதலையாவது மிக மிக கஷ்டம் என்று. தேவனே அவர்களை விடுவிக்க வேண்டும். நமது வாழ்க்கையில் நாம் அனைவருமே இப்படிப்பட்ட தவறுகளை செய்கிறவர்களாக இருக்கிறோம். ஆனால் நமது மிகுந்த இரக்கத்தினால் நம்மை மறுபடியும், மறுபடியுமாக விடுவித்து இரட்சிக்கிறார். நான்காவதாக: 'என் தேவன் என்று சொல்கிறார்' இந்த காரியமானது (expression) நமது இரட்சிப்பை குறித்த மிக முக்கியமான சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. அநேக மக்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவ விசுவாசிகள் மட்டுமே தேவனை அவர் என் தேவன் என்று சொல்ல முடிகிறது. யோவான்:1:12 சொல்கிறது (15) இந்தக் கருத்து இன்னும் தெளிவாக கலாத்தியர்.3:26ல் (1) தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதன் மூலமாக நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். உனக்கு இந்தவிதமான அனுபவம் இருந்தால் மட்டுமே நீ தேவனை 'என் தேவன்" என்று சொல்லமுடியும். தாவீதுக்கு தேவனோடு அதிக நெருக்கமான அனுபவம் இருந்தபடியினால்தான், அவன் தேவனை அவ்வாறாக அழைக்க முடிந்தது. தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதன் என தாவீது பின்னர் விவரிக்கப்பட்டான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர் சந்தேகப்பட்ட சீஷனாகிய தோமாவுக்கு காட்சிக்கொடுத்தார். உடனே அவன்

'என் கர்த்தாவே, என் தேவனே என்றான். மகதலேனா மரியாள் கல்லறையினிடத்தில் அழுது கொண்டு 'என் கர்த்தரை' எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள் என்றாள். பவுல், கலாத்தியர் 2:2-ல் தேவ அறிவிப்பினாலே (17) என்று சொல்கிறான். நீயும் நேர்மையாக சொல்லமுடியுமா கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன் தோழன் என்று. அப்பொழுது மட்டுமே உனக்கு பரிபூரண சமாதானம் இருக்கும். நீ கர்த்தராகிய இயேசுவை உனது தனிப்பட்ட (personnel) ஆண்டவராக, கர்த்தராக, இரட்சகராக அழைக்க உன்னால் முடிய (able) வேண்டும்.

ஐந்தாவதாக: தாவீது தேவனை 'என் கேடகம்' என்று அழைக்கிறான். தாவீது ஒரு போர்வீரன் (man of war). அதனால் அவன் கேடயத்தின் மதிப்பை, யுத்த நேரத்தில் அதன் அவசியத்தை நன்கு அறிந்து இருந்தான். விரோதியின் அக்கினி அஸ்திரங் களையெல்லாம் அழித்துப் போடுவது கேடகம் ஆகும். எபேசியர்:16 'விசுவாசம் என்னும் கேடகத்தைப் பற்றிப் பேசுகிறது. ஒரு விசுவாசி விசுவாசம் என்னும் கேடகத்தை உடையவானாக இருக்க வேண்டியது அவசியம். அதுவே அவனது சிலாக்கியம். ஆதியாகமம் 15:1ல் (18) தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணுவதை தயவு செய்து பாருங்கள். இது ஆபிரகாமுக்கு ஒரு அற்புதமான வாக்குத்தத்தம். அப்பொழுதுதான் (just) ஆபிரகாம் யுத்தத்தை முடித்து நான்கு அரசர்களை வெற்றிக் கொண்டு திரும்பி வருகிறான். அவனுக்கு சோதோமின் அரசன் வெகுமதி (பகைவ) கொடுக்கிறான். அதை ஆபிரகாம் வாங்க மறுக்கிறான். தேவன் தமது ஊழியக்காரருடைய உண்மையைப் பார்த்தார். ஆனால் அவர் அவனுக்கு காட்சி அளித்து 'நான் உனக்கு கேடகமும் மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்' என்றார். வேறு எதை தேவனிடத்தில் நாம் கேட்கப் போகிறோம்?" அவர் நம்மை ஒரு கேடகமாக இருந்து பாதுகாக்கிறார். மற்றவாகள் தங்களைத் தாக்கி விடுவார்களோ என்று சில விசுவாசிகள் பயப்படுகிறார்கள். கவலைப்பட்டுக் கலங்குகிறார்கள். அவர்கள் தங்கள் உடன் விசுவாசிகளே தங்களை தாக்குவார்களோ என்று கூட சந்தேகப்படுகிறார்கள். கர்த்தர் நமது கேடகம் என்று நாம் விசுவாசிப்போமானால் நாம் அந்த விதமான சந்தேகத்திற்கும், பயத்திற்கும் இடங்கொடுக்கவே மாட்டோம். ஏசாயா.54:17ல் '(19) இந்த வாக்குத்தத்தத்தை நாம் நன்றாக நினைவில் கொள்வோம். அப்படிப்பட்ட வாக்குகளை நாம் விசுவாசிப்பதன் மூலமாக கர்த்தர் எனக்கு கேடகமாக இருக்கிறார் என்று என்னால் நிருபிக்க முடியும்.

ஆறாவதாக: தாவீது தனக்கு 'இரட்சண்ய கொம்பு' என்று சொல்கிறான். இது ஒரு விநோதமாக விளக்கமாக காணப்படுகிறது. கடந்த நாட்களில் 'கொம்பு' (Horn) ஒரு பலத்திற்கும், சக்திக்கும் அடையாளமாக சொல்லப்பட்டது. இது தேவனைக் குறித்ததான ஒரு விநோத விளக்கமாகக் காணப்படுகிறது. வேதாகமத்தில் கொம்பு (Horn) என்ற வார்த்தை அடிக்கடி உபயோகப்படுத்தப் படுகிறது. ஒரு மிருகத்திற்கு பலமும், சக்தியும் வாய்ந்த பெரிய கொம்புகள் இருக்குமானால் அது மிகவும் சக்திவாய்ந்ததாகக் காணப்படும். அப்படிப்பட்ட மிருகத்தினிடம் போகப் பயப்படுவார்கள். பெரிய கொம்புகள் அந்த மிருகத்திற்கு பலத்தையும், பெருமையையும் கொடுக்கும். தாவீது 'கர்த்தர் என் இரட்சண்ய கொம்பு' என்று சொல்லும்போது அவன் தெய்வீகப் பலத்தைக் குறித்துப் பேசுகிறான். இரட்சிப்பின் பலனாய் நாம் பெற்றிருக்கும் மேன்மையைக் குறித்துப் பெருமைப் பாராட்டுகிறான். கர்த்தராகிய இயேசுவைத் தவிர வேறு விதமாக நாம் இரட்சிக்கப்பட்டிருப் போமானால் இப்படிப்பட்ட காரியத்தை நாம் பெருமையாக சொல்ல முடியாது. தேவனுடைய குமாரனே நமக்கு இரட்சிப்பை ஏற்படுத்தினவர். அதனால் அவரால் இரட்சிக்கப்பட்டவர்களை வெற்றியுள்ள வாழ்க்கைக்கு நடத்தவும், அதன் பின்னர் மகிமையில் கொண்டுபோய் சேர்க்கவும் அவரால் முடியும். இரட்சிப்பின் கொம்பாக அவர்களுக்கு தெய்வீக பலத்தைக் கொடுத்து, நமது வாழ்க்கையில் ஏற்படும் சகல போராட்டங்களிலும் வெற்றிபெற அவரே ஏற்பாடு செய்கிறார். அதனால்தான் பவுல், 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு' என்று சொல்கிறார். (பிலிப்பியர் 4:13) நமது கர்த்தராகிய இயேசு நமது தெய்வீக பலத்தின் இரகசியம். ஏசாயா.41:10 தேவன், 'நான் உன்னை பெலப்படுத்து வேன' என்று சொல்கிறார். இந்தப் பெலப்படுத்துகிற காரியமானது நமது உள்ளான மனிதனில் (innerman) பரிசுத்த ஆவியானவர் மூலமாக உண்டாகிறது. இதைத்தான் எபேசு விசுவாசி களுக்கு கிடைக்க வேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறான். (2) (எபேசியர்.3:16). இந்தப் பெலப்படுத்தும் வேலையின் மூலமாகவே நாம் விசுவாசி களாக நமக்கு வரும் உபத்திரவங்கள், பாடுகள், பலவிதமான கஷ்டங்களை எதிர் கொள்ள முடியும். தேவன் என்னை தமது ஊழியத்திற்கு அழைத்த பொழுது நான் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தேன். எனது குடும்பத்தாரின் எதிர்ப்பை எப்படி எதிர் கொள்வேன் என்று. ஏன் என்றால் அவர்கள் நான் ஒரு கப்பல்

பொறியாளானாக (Marine Engineer) பணி அமர்த்தப்படுவேன் என்று ஆவலாக காத்திருந்தார்கள். நான் எனது தீர்மானத்தை எனது பெற்றோரிடம் அறிவித்தபோது அவர்கள் இருவரும் மிகவும் வருத்தப் பட்டார்கள். அழ ஆரம்பித்து விட்டார்கள். அவர்களது அழுகையைப் பார்த்தப்பின் எனக்கு மிகவும் மன வேதனை (heart ache)யாக இருந்தது. உறவினர்களில் சிலர் எனது தீர்மானத்தை அறிந்து என் மீது மிகவும் கோபப்பட்டார்கள். நான் கர்த்தருக்கு கீழ்படிவதை மிகவும் எதிர்த்து, என்னை பயமுறுத்தி தங்களால் முடிந்த வரையிலும் (level best) தடை செய்தார்கள். அந்த நேரத்தில் நான் ஜெபித்தேன். 'கர்த்தாவே இந்த எதிர்ப்புகளை தாக்குப்பிடிக்க என்னை பெலப்படுத்தும்' என்று. தேவன் தமது வாக்கை நிறைவேற்றினார். அவரது சத்தத்திற்கு கீழ்படிய என்னை பெலப்படுத்தினார். நமது சரீரத்திற்கு உணவு அவசியமாக இருப்பது போல, தேவனுடைய வார்த்தையை உபயோகப்படுத்தி பரிசுத்த ஆவியானவராகிய தேவன் நமக்கு தெய்வீகப் பெலத்தை நமக்கு கொடுக்கிறார். கர்த்தராகிய இயேசுவின் மூலமாக தெய்வீக பெலத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே கர்த்தர் 'என் இரட்சண்ய கொம்பு' என்று உண்மையாக சொல்லமுடியும்.

ஏழாவதாக:- தேவன் என்னுடைய 'உயர்ந்த அடைக்கலம்' என்று தாவீது சொல்கிறான்.(சங்.18:2) தாவீதின் நாட்களில் உயர்ந்த கோபுரங்கள் (Towers) இரண்டு காரியங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. முதலாவது பாதுகாப்புக்கு இறுதியான இடமாகும் (ultimate place). அரசர்கள் மக்களை பாதுகாத்துக் கொள்ள உயர்ந்த கோபுரத்திற்குள் போவார்கள். இரண்டாவதாக காவல் காப்பவர்கள் உயர்ந்த கோபுரங்களில் இருந்து பார்த்து, எதிரிகளின் வருகையை அறிந்து அறிவிப்பார்கள். இருவகை களிலும் பார்க்கும்போது தேவன் கொடுக்கும் பாதுகாப்பு, கவனிப்பு இவைகளை மையமாக வைத்துதான் இந்த உயர்ந்த அடைக்கலம் என்ற வார்த்தை பேசப்படுகிறது. கர்த்தர் நமக்கு உயர்ந்த அடைக்கலமாக இருப்பதால் நாம் கர்த்தருக்குள் இருந்து தூரத்தில் வரும் சத்துருவைப் பார்க்க முடியும். நாம் கர்த்தருக்குள் இருக்கும்போது மட்டுமே இது சாத்தியமாகும். 2 கொரிந்தியர் 2:11ல் பவுல் சொல்வது' சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. "நாம் பொல்லாங்கனுடைய பொல்லாத ஆயுதங்களை அறிந்திருக்கிறோம் என்பதாக சொல்கிறான். நாம் பிசாசின் கண்ணியில் சிக்கிக்கொள்ளாதபடி கர்த்தர் நமக்கு

எச்சரிக்கைக் கொடுக்கிறார். நமது உலக பிரகாரமான உறவினர்கள் அவிசுவாசிகளான நண்பர்கள், நம்மை கவர்ச்சிக்கும்படியான (attractive) ஆலோசனைகளை (suggestion) கொடுக்கும்போது தேவனுடைய ஆவியானவர் உடனடியாக நம்மை எச்சரித்து அதில் இருக்கும் ஆபத்தை, நேரிடப்போகிற அபாயகரமான காரியங்களை நமக்கு காட்டுவார். அப்படியாகவே தாவீது அநேக தடவைகள் சத்துருக்களின் கரங்களிலிருந்து தப்பி ஓடியிருக்கிறான். அவனது சகல இயக்கங்களுக்கும் (movements) அவன் முற்றிலுமாக கர்த்தரையே சார்ந்து, கர்த்தரே தன்னை இயக்க (direct) வேண்டும் என்று பொறுமையாக இருக்கிறான். 'கர்த்தாவே, நான் போக வேண்டுமா, அல்லது போக வேண்டாமா?' என்று கர்த்தரிடம் கேட்கும் பழக்கம் தாவீதுக்கு இருந்தது. அவன் எங்கே போவதாக இருந்தாலும் கர்த்தரிடம் கேட்டுத்தான் போவான். போருக்கு போவதாக இருந்தாலும் கர்த்தரிடமிருந்து தெளிவான நடத்துதலை பெற்றே செயல்படுவான். அதனால்தான் அவனால் பின்னர் சொல்ல முடிந்தது. "கர்த்தர் என் உயர்ந்த அடைக்கலம்" என்று. அதே போல நீங்களும் உங்கள் இருதயத்தில் ஜெபியுங்கள். "கர்த்தாவே, நீரே என் உயர்ந்த அடைக்கலமாக இரும்" என்று தயவு செய்து வேண்டிக்கொள்ளுங்கள். பிசாசானவன் எப்பொழுது ஆரம்ப விசுவாசிகளை (young believer) மடக்க, தவறான தீர்மானங்களை எடுக்கச்செய்து, தேவனுடைய ஊழியத்திற்கு பிரயோஜனம் இல்லாதவர்களாக செய்ய எப்பொழுதும் முயற்சிக்கிறான். அதனால்தான் இளம் விசுவாசிகள் கர்த்தருடைய வழிநடத்துதலைத் தேடக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய வார்த்தையின் மூலமாக கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க கண்டிப்பாக கற்றுக் கொள்ளவேண்டும் (21) "(ஏசாயா 30:21) கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது முடிவை ஆரம்பத்திலிருந்தே அறிந்திருப்பதால் (end from the beginning) அவர் நம்மை வழிநடத்த சிறந்தவராக காணப்படுகிறார். அவர் எல்லாவற்றையும் தூரத்திலிருந்தே அறிகிறார். கர்த்தராகிய இயேசுவை நமது உயர்ந்த அடைக்கலமாக கொண்டிருப்பது ஒரு விசுவாசிக்குக் கிடைத்த சிலாக்கியமாகும். இவ்வாறாகவே கர்த்தராகிய இயேசு நமக்கு பாதுகாப்பை தருகிறார். சங்கீதம்.121-ன் படி நாம் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்கள் அல்லது உதவிகளில் இது ஆறாவதாகும். (7) நிச்சயமான, உறுதியான உதவி (sure and certain help) சங்கீதம்-121, ஒரு அற்புதமாக வாக்குத்தத்தத்தோடு முடிவடைகிறது. அது நமக்கு

நித்திய எதிர்காலத்தை சுட்டிக்காட்டுகிறது. 'கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார்" (சங்.121:8) "என்றென்றைக்கும்" (for ever more) என்ற வார்த்தை நமக்கு நித்திய எதிர்காலத்தைக் எடுத்துக் காட்டுகிறது. என்றென்றைக்குமாக நம்மை காப்பதாக தேவன் நமக்கு வாக்குப் பண்ணுகிறார். ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு மகிமையான ஒரு எதிர்காலம் இருக்கிறது. நித்திய காலமாக ஜீவிக்கிற ஆண்டவர் நம்மை நித்தியமாக பராமரித்து பாதுகாப்பார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உண்மையாக விசுவாசிக்கும் விசுவாசிக்கு மட்டுமே இந்தவிதமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை உண்டு. எங்கெல்லாம் 'நித்தியம்' என்ற வார்த்தை நமக்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் இந்த மகிமையான எதிர்காலத்தை நாம் நினைவுபடுத்தப்படுகிறோம். அந்த மகிமையான நம்பிக்கை 'நிலையும் உறுதியும்' உள்ளது என்று (எபிரேயர்.6:18-20)-ல் நாம் நினைவுபடுத்தப்படுகிறோம். இப்படிப்பட்ட நிலையான நம்பிக்கை உனக்கு இல்லை என்றால் நீ, பரிதவிக்கக் கூடிய நிலைமையில் (pitable) இருக்கிறாய் என்று பொருள். மாறாக, ஒரு விசுவாசிக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது. நீ எதை எதிர்நோக்கி இருக்கிறாய், 121-ல் பேசப்படும் நித்தியம் என்ற வார்த்தையானது கிறிஸ்து இயேசுவில் நமக்கு இருக்கும் மகிமையான நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது. ஒரு விசுவாசிக்கு இருக்கும் ஏழுவிதமான நம்பிக்கையைக் குறித்து வேதாகமம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

கிறிஸ்துவின் வருகையின் நம்பிக்கை (hope of his coming):

யோவான். 14:3ல் 'நான் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து, உங்களை என்னிடத்திலே சேர்த்துக் கொள்வேன்' என்று வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான நம்பிக்கை இதுவே. மேலே குறிப்பிடப்பட்ட வசனத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை அவரிடத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அவர் மறுபடியும் வருவதாக தெளிவாக சொல்கிறார். இன்று அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் குறித்து குழப்பத்தில் (confused) இருக்கிறார்கள். இதற்கு காரணம் என்னவென்றால் வித்தியாசமான பிரசங்கிகள் வித்தியாசமாக இந்தக் கருத்தைப் பற்றி அபிப்பிராயம் (opinion) கூறுவதால்தான் இந்தக் குழப்பம். ஆனால், நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் வேதவாக்கியத்தை அப்படியே

எளிமையாக நம்பி விசுவாசிக்க வேண்டும். அவர் நம்மை எடுத்துக் கொள்ள வரப்போகிறார். இதை நாம் நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரும் எதிர்பாராத நேரத்தில் வருவதாக எச்சரித்து இருக்கிறார் என்பதை நாம் நன்றாக மனதில் கொள்ள வேண்டும். 'உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவார் என்ற நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.' (மத்தேயு 24:42) மேலும், ஒரு விளக்கத்தை 1 தெசலோனிக்கேயரில் 4:13-17ல் பார்க்கிறோம். 'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடு இருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்' தேவனுடைய வசனத்தை எளிமையாக நம்புகிறவர்களுக்கு இது மிகத் தெளிவாக இருக்கிறது. இதுவே நமக்குப் போதும். ஒரு தேவனுடைய பிள்ளையின் முதலாவது மகிமையின் நம்பிக்கை இதுவாகும். கர்த்தரை முகமுகமாக சந்திக்க நீ ஆயத்தமாக இருக்கிறாயா?

(2) சகல பரிசுத்தவான்களோடும் கிறிஸ்துவை சந்திப்போம் (Hope of meeting him with all the raints) என்ற நம்பிக்கை. இது இரண்டாவது மகிமையின் நம்பிக்கை. அதை 1 தெசலோனிக்கேயர் 4: 14ல் பார்க்கிறோம். "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்தாரென்று விசுவாசிக்கிறோமே: அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்". நமக்கு முன்பாக பரலோகத்திற்குச் சென்ற விசுவாசிகளை நாம் சந்திக்கப்போகிறோம் என்று இந்த வசனம் நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் மிக அற்புதமான (wonder ful hope) நம்பிக்கை இதுவாகும். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். கர்த்தரை சேவித்த மகத்தான பரிசுத்தவான்கள் தற்பொழுது கர்த்தரோடு கூட இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் நாம் சந்திக்கப் போகிறோம். அவர்களை முக முகமாக (face to face) சந்திக்கப்போகிறோம். அது எவ்வளவு அற்புதமான அனுபவமாக இருக்கப்போகிறது. விசவாசிகளுக்கு நித்தியமான முடிவு (good bye) ஒன்றுமில்லை. மரணம் ஒரு தற்காலிக (Temporary) பிரிவுதான். இயேசு கிறிஸ்து வரும்பொழுது அவரோடு

கூட நாம் இணையப் போகிறோம் (Reunited). பின்னர் ஒருபோதும் பிரிவு என்பதில்லை.

(3) உயிர்த்தெழுதலின் நம்பிக்கை (Hope of Rapture):

இந்த மூன்றாவது நம்பிக்கை 1 தெசலோனிக்கேயர் 4:17ல் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படும் நம்பிக்கையாகும். 'பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம்". ஒருவரும் பெற முடியாத மிகப் பெரிய அனுபவமாக இது இருக்கப்போகிறது. கர்த்தராகிய இயேசு, மேகங்கள் மேல் வரும்பொழுது பூமியிலே விசுவாசிகளாக இருக்கும் நாமும் மறு ரூபமாக்கப்படுவோம். உடனடியாக மேகங்களின் மேல் எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை சந்திப்போம். இன்று நீ வானத்தில் பறக்க விரும்பினால் ஆகாய விமானத்திற்கோ அல்லது பறக்கும் தட்டுக்கோ (aeroplane or helicopter) தான் போக வேண்டும். ஆனால் அன்று நீங்கள் ஆச்சரியப் படும்படியாக இந்த புவி ஈர்ப்பு விசையை எதிர்த்து மேலே எடுத்துக் கொள்ளப்படுவோம். இது பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுந்து உயரே செல்லும் (Rapture) நம்பிக்கையாகும். இது நடக்கும்பொழுது இந்த பூமியிலே காணப்படும் விசுவாசிகள் மறைந்து போவார்கள் (Missing). இந்த மகிமையான நம்பிக்கையினால் நமது இருதயம் நிரம்பி இருக்க வேண்டும்.

(4) கிறிஸ்துவைப் போல மாறுவோம் என்ற நம்பிக்கை (Hope of being transformed unto his likeness):

இந்த நான்காவது நம்பிக்கை 1 யோவான் 3:2ல் 'பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை: ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.' இந்த வசனத்தின் படியாக நாம் அனைவரும் உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தைப் போன்ற மகிமையான சரீரத்தைப் பெற்றுக் கொள்ளப் போகிறோம். நாம் அவரது பரலோக மகிமையை பிரதிபலிக்கப் (reflect) போகிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்தின் தன்மையை (Characteristics) நற்செய்தி (Gospels) புத்தகங்களில் கவனித்து இருக்கிறீர்களா? அது மாமிச

சரீரத்திற்கு (physical) மிகவும் வித்தியாசமானதாகும். அது ஒரு காணப்படக்கூடிய சரீரம். ஆனால் எந்த நேரத்திலும் மறையக் கூடியது. அதற்கு ஆகாரம் வேண்டியதில்லை. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்தது போல தேவைப்படும்போது சாப்பிட முடியும். ஒரு நொடிப்பொழுதில் எவ்வளவு நேரத்திற்கு வேண்டுமனாலும் செல்ல முடியும். அந்த சரீரத்தை தொட முடியும். ஆனால் அந்த சரீரம் மூடியுள்ள கதவுக்குள்ளும் செல்ல முடியும். இந்தவிதமான குணாதிசயங்கள் (Chaterctersitic) இந்த உலக இயற்கை விதிகளுக்கு மாறாக இருப்பதைப் பார்க்கிறோம். அந்த சரீரம் இந்த உலக விதிகளுக்குக் கட்டுப்பட்டதல்ல. ஒரு நாளிலே நாம் இப்படிப்பட்ட சரீரத்தைப் பெற்றுக்கொள்ளப்போகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்பொழுது நாம் அவரைப் போலவே இருப்போம்.

(5) தேவனுடைய குமாரர், குமாரத்திகளாக வெளிப்படையாக அறிவிக்கப்படும் நம்பிக்கை (The hope of public proclamatioin as sons and daughters of God).

யூதா 24-ல் இந்த உலக முடிவின் காலத்தில் என்ன நடக்கப்போகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுதான் நம்மை வெளிப்படையாக (public) அறிவிக்கப்பட்டு, நாம் தேவனுடைய குமாரர், குமாரத்திகளாக இருக்கிறோம் என்று நியமனத்தை தெரிவிக்கும் நாளாகும். 'வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்' இந்த வசனத்தின்படி தேவன் நம்மை தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே நிறுத்துவார். அந்த நாள் வரைக்கும் சகல சிருஷ்டியும் தவிக்கிறதாக ரோமர் 8:19ல் பார்க்கிறோம். தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கும் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது'. இன்று நாம் இந்த உலகத்தின் பார்வைக்கு ஒன்றுமில்லாதவர்களாக (insignificant) காணப்படுகிறோம். ஆனால் அந்த நாளிலே உங்கள் மூலமாகவும் என் மூலமாகவும் இந்த முழு பிரபஞ்சத்திற்கும் (Universe) தமது மகிமையை வெளிப்படுத்தப்போகிறார். தூதர்களும் நம்மைக் கண்டு மெச்சிக் கொள்ளப்போகிறார்கள். அவர்கள் நம்மை தமது குமாரனுடைய சாயலாக மறுரூபமாக்கப்பட்டதைக் கண்டு தேவனுடைய ஞானத்தைப் புகழப் போகிறார்கள். எனவே இதுவே நமது மகிமையின் நம்பிக்கையில் முக்கியமான தோற்றம் (asperct) ஆகும்.

(6) பரலோக பரிசின் நம்பிக்கை (hope of heavenly reward):

வெளிப்படுத்தல்:22:12ல் கர்த்தர் அடுத்த மகிமையின் நம்பிக்கையை பற்றிப் பேசுகிறார். 'இதோ, சீக்கிரம் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது'. கர்த்தராகிய இயேசு பலனைப் பற்றிய உறுதிவாக்கை நமக்குக் கொடுத்திருக்கிறார். இது நமக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சேவிக்க (serve) பெரிய உற்சாகத்தை தருகிறது. நாங்கள் சிறு பிள்ளைகளாக இருக்கும் பொழுது, ஒரு மாமா (Uncle) எங்களது வீட்டிற்கு வரும்போதெல்லாம் இனிப்புகளை கொண்டுவருவது வழக்கம். அதனால் அவர் எப்பொழுது வந்தாலும் அவரது முகத்தைப் பார்ப்பதற்கு முன்பாக அவரது கைகளையும் பார்ப்போம். அவர் எங்களுக்கு இனிப்பு கொண்டு வந்திருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பினோம். கர்த்தராகிய இயேசு தம்மோடு பலனை (Reward) கொண்டு வருவதாக சொல்லி இருக்கிறார்.(வெளிப்.22:12). அந்த பலனை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு நீ காத்திருக்கிறாயா? அந்த பலன் நாம் எவ்வளவு வேலை செய்தோம் என்பதற்காக அல்ல. ஆனல் நமது உண்மையின்படி (faithfulness) நமக்குப் பலனளிக்கப் போகிறார். 'நீங்கள் கர்த்தராகிய இயேசுவை சேவிக்கிறதினாலே, சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக் கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள் (கொலோசேயர்.3:23,24). கர்த்தர் உனக்காகவும் எனக்காகவும் பலனை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். இது நமது மகிமையின், நம்பிக்கையின் ஒரு பகுதியாகும்.

(7) கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் நம்பிக்கை (hope of raigning with Christ):

இரு ஒரு விசுவாசிக்கு பெருமை வாய்ந்த (grandest) நம்பிக்கையாகும். 'அங்கே ராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை' தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். (வெளிப்படுத்தல்.22:5) இந்த வசனத்தை உன் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறாயா? நீ கிறிஸ்துவில் ஒரு விசுவாசியாக இருந்தால் உனக்கு நியாயாசனம் இருக்கிறது. இந்த பரலோக சத்தியங்களைப் பற்றி உலக மனிதர்களுக்கு ஒன்றும்

PD/07

தெரியாது. அவர்கள் இந்த உலகத்திற்காக மட்டுமே வாழ்கிறார்கள். நித்தியத்திலே (eternity) என்ன நடக்கும் என்ற எண்ணம் (idea) அவர்களுக்கு இல்லை. கர்த்தராகிய இயேசு தமது நியாயாசனத்தை எளிமையான விசுவாசிகளோடு பகிர்ந்து கொள்ளப்போகிறார். அவரோடு கூட அவர்கள் ஆளுகை செய்யப் போகிறார்கள். இந்த பூமியின் இராஜ்ஜியங்கள் எல்லாம் முடிவடையும். ஆனால், தேவனுடைய பிள்ளைகளோ என்றென்றைக்குமாக அரசாளப் போகிறார்கள். ‘பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்ஜியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்’ (லூக்கா.12:32) நீ ஒரு வேளை படிக்காதவனாக, ஏழையாக இருக்கலாம். ஆனால் நினைவில் கொள், நீ கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையுள்ளவனாக இருந்தால், பிதாவாகிய தேவன் எனக்கு இராஜ்ஜியத்தைக் கொடுக்கப் போகிறார்.

முடிவுரை:-

இந்த புத்தகத்தில் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினக் கர்த்தரிடமிருந்து வரும் ஏழு விதமான உதவி அல்லது ஆசீர்வாதம் பற்றியும் அதை நாம் பெற்றுக் கொள்வதைப் பற்றியும் சுருக்கமாக கவனித்தோம். அவைகளை நீ விசுவாசித்தால் ‘எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்’ என்று சங்கீதக்காரனோடு சேர்ந்து நீயும் சொல்லலாம்.

***

ஆசிரியரைப் பற்றி

தேவனுடைய ஊழியக்காரனும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய சகோ.பக்த்சிங் அவர்கள் ஆசியாவிலுள்ள அளவற்ற மக்களுக்கு ஆவிக்குரிய தகப்பனாகவும், உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய ஒரு மாதிரியாகவும் அவர்களை ஊக்குவிப்பவராயும் விளங்கினார். இவர் இந்தியாவின் தலை சிறந்த சுவிசேஷகராக மட்டுமல்ல. ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக்குகிறவருமாயிருந்தார். பின்னும் புதிய ஏற்பாட்டின் மாதிரியைக் கொண்ட ஒருங்கிணைந்து செயலாற்றும் சபை தரிசனத்தைப் பெற்று அதின் ஸ்தாபகரானர் (Indigenous Church) எபே. 4:13ல் சொல்லப்பட்டுள்ள ஐந்து வரங்களும் இவரில் காணப்பட்டன அவர் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். பின்னும் இந்தியாவில் அநேகரை நீதிக்குட்படுத்த தேவனால் இவ்வளவு வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்ட இந்த பரிசுத்த தேவ மனிதனைப்போல் வேறே ஒருவரையும் தேவன் பயன்படுத்தவில்லை மனிதனாக இவருக்குப் பலவித பெலவீனங்களும் மட்டுப்பாடுகளும் இருந்தபோதிலும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையினாலும் மனித பெலவீனங்களை மேற்கொண்டு ஜீவித்தார். சகோதரனுடைய விசுவாச ஜீவியமானது நல்ல போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் (II தீமோ 4:7) என்ற பவுலின் கூற்றின் படி ஜெய ஜீவியமாய் விளங்கினது.

புத்தகங்களைப் பற்றி

இப்புத்தகத்தை வாசிக்கும் தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்கு பயந்து தேவனுடைய நித்திய பாதுகாப்பையும் மற்றும் உதவியையும் அறிந்து அதனை அனுதின வாழ்க்கையில் அப்பியாசித்து ஜீவிக்க வேண்டுமென்கிற தேவ வைராக்கிய வாஞ்சையும் தேவனை நோக்கி செய்யும் விண்ணப்பமுமாய் இருக்கிறது.

JEHOVAH SHAMMAH
No. 4, Church Lane, Ritherdon Road,
Vepery, Chennai - 600 007.
Phone : 044 - 2641 1644